பெரும் இன்னல்களுக்கு மத்தியில் ஐரோப்பா பயணிக்கும் சிறுவர்கள்
பக்கம் 14

விலை ரூபா 20
பக்கங்கள் 32

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 202 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 01, புதன்கிழமை 15.06.2016


## இலங்கையில் நிலநடுக்கங்கள் ஏற்படும் ஆபத்து

எச்சரிக்கிறார் பேராசிரியர்

கொழும்பு, ஜூன் 15
இலங்கைக்குக் கீழாக ஏற்பட்டு வரும் நிலநடுக்க வழி ஒன்றினால், நிலநடுக்கங்கள் ஏற்படும் ஆபத்து உருவாகி வருவதாகப் பேராதனைப் பல்கலைக் கழகப் புவியியற்றுறைப் பேராசிரியர் அத்துல சேனாரத்ன எச்சரித்துள்ளார்.
இலங்கைக்குக் கீழாக 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்க வழி ஒன்று உருவாகி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதன் விளைவாக இலங்கையில் பக்.29

# சரணடைந்தோரின் விவரம் தர மறுத்தது பாதுகாப்பு அமைச்சு

## அது கிடைத்திருந்தால் பேருதவியாயிருந்திருக்கும் உண்மை நிலையைப் போட்டுடைத்தார் பரணகம



கொழும்பு, ஜூன் 15
இறுதிக்கட்டப் போரில் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் பெயர் விவரங்களைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கவில்லை. இதனை வழங்கியிருந்தால் எங்கள் விசாரணை ஓரளவுக்கு முற்றுப் பெற்றிருக்கும்.
இவ்வாறு தெரிவித்தார் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம.
காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு அடுத்த மாதம் கலைக்கப்படவுள்ளது. இவ் வாறானதொரு நிலை பக்.29

## அரசின் அலட்சியப் போக்கை ஐ.நாவில் அம்பலமாக்குவேன்

மாகாண சபையில் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்று ஜெனிவாவில் அரசு கடந்த ஆண்டு உறுதி வழங்கியிருந்தது. அத்துடன் இதனை ஏற்று அமெரிக்காவுடன் இணைந்து இலங்கை அரசும் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியிருந்தது. ஆனால் இன்று வரை பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எட்டப் படவில்லை. பக்.29

## வடக்குப் போக்குவரத்து சட்டத்துக்கு அங்கீகாரம்

ஆளுநரின் பரிந்துரைகளும் ஏற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடக்கு மாகாணப் போக்குவரத்து அதிகார சபையை உருவாக்குவதற்கான, வடக்கு மாகாணப் போக்குவரத்து நியதிச் சட்டத்தில், ஆளுநரினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுத் திருத்தப்பட்ட நியதிச் சட்டம் சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.
போக்குவரத்து அதிகார சபையை உருவாக்குவதற்கான நியதிச் சட்டம் வடக்கு மாகாண சபையில் ஏப்ரல் மாதம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்த நியதிச் சட்டம் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.
நியதிச் சட்டத்தில் சில விடயங்களைத் திருத்தம் செய்யுமாறு ஆளு பக்.27

## ஐங்கரநேசனை விசாரிப்பதற்கு கோரும் பிரேரணை வரவில்லை

முதலமைச்சர் வெளியேறியதால் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்குச் சுயாதீனக் குழு நியமிக்கவேண்டும் என வலியுறுத்தி ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதியால் கொண்டு வரப்பட்ட பிரேரணை சபையின் நேற்றைய நிகழ்ச்சி பக்.27

முச்சந்தி முரளி



விவரத்தைத் தந்தால் எல்லாம் அம்பலமாகிப் போயிடும் எல்லோ பாருங்கோ...

## வடக்கு முதல்வர் நிதியத்தில் 12 குறிக்கோள்கள் உள்ளடக்கம்

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் விசேட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 15
போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல் உள்ளிட்ட 12 குறிக்கோள்களை முன்வைத்தே, முதலமைச்சரின் நிதிய நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், முதலமைச்சரின் நிதிய நியதிச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு இடம்பெற்றது. இதன்போது நிதியத்தின் குறிக்கோள்களாக 12 விடயப் பரப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
போரினால் அல்லது வேறு இடர்களினால் பாதிக்கப்பட்ட உடல் உள ரீதியாக விசேட தேவைக்கு உள் பக்.27

## தமிழ்-சிங்கள-முஸ்லிம் ஒற்றுமைக்கு சீனா உதவும்

யாழ். வந்த அந்த நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 15
ஐக்கிய இலங்கைக்குள் சமூகங்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். அதற்கான ஒத்துழைப்பைச் சீனா வழங்கும்.
இவ்வாறு இலங்கைக்கான சீன தூதுவர் ஜி ஸியான் லியான்க் பக்.29

## நல்லிணக்கம், பொறுப்புக் கூறலில் செயன்முறை மிக அவசியமானது

இலங்கையிடம் வலியுறுத்துகின்றது அமெ.



கொழும்பு, ஜூன் 15
இலங்கையில் மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும். நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுதல் ஆகியவற்றுக்கான செயன்முறை அவசியம். நல்லிணக்க விடயங்களில் இலங்கை ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கின்றது.
இவ்வாறு தெரிவித்துள்ளார் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வால்.
அமெரிக்காவின் பக்.29




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி மனித சுதந்திரத்தை விடவும் சமூகநலன் முக்கியத்துவமானது

## யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் சுட்டிக்காட்டு - கஞ்சா சந்தேகநபர்களின் பிணை மனுவையும் நிராகரித்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தனி மனித சுதந்திரம் எந்தளவு முக்கியம் வாய்ந்ததோ அதனையும்விட, சமூக நலன் முக்கியமானது என்று சுட்டிக்காட்டிய யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், கஞ்சா வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் பிணைப்பத்திரத்தை நிராகரித்து விளக்கமறியலை நீடித்தார்.

இளவாலையில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி 46 கிலோ கஞ்சாவுடன் வவுனியாவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். காலித்தீன் மொகமட் சப்ராத் மற்றும் சுபைர் முகமட் ரியாஸ் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த இருவரையும் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டிருந்த பிணை மனு மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை முடிவுக்கு வந்ததை அடுத்து நேற்றுப்பிணை மனு விண்ணப்பத்தை நிராகரித்து மேல் நீதிபதி தீர்ப்பளித்தார்.

போதைப்பொருள், கடத்தல் போன்ற குற்றங்களுக்கு விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே, மேல் நீதிமன்றால் பிணை வழங்க முடியும் என நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டம் தெரிவிக்கின்றது.

வவுனியாவைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களும் ஏன் யாழ்ப்பாணம் - இளவாலைக்கு வாகனத்தில் வந்தார்கள் என்பதற்குரிய எந்தவிதமான காரணமும் பிணை மனுவில் தெரிவிக்கப்படவில்லை. அவர்களை ஏன் பிணையில் விட வேண்டும் என்பதற்குரிய விதிவிலக்கான காரணங்களும் மனுவில் குறிப்பிடப்படவில்லை.

தென்னிந்தியாவில் இருந்து கேரளக் கஞ்சா கடத்தும் முக்கியமான இடமாக இளவாலை காணப்படுகின்றது. தென்னிந்தியாவில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு கேரளக் கஞ்சா உட்பட போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றன. கடலோரப் பகுதிகளில் அண்மைக் காலமாக போதைப்பொருள் மற்றும் கேரளக் கஞ்சா கடத்தியமைக்காகப் பல கைதுகள் இடம்பெற்றிருக்கின்றன.

சமூகத் துரோகக் குற்றங்களில் இருந்து சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே, நாடாளுமன்றம் போதைப் பொருள் சட்டத்தை இயற்றியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வெளிமாவட்டத்தினர் வந்து சமூக விரோத போதைப் பொருள் குற்றங்கள் செய்வதை மேல் நீதிமன்றம் சகித்துக் கொள்ளமாட்டாது. அத்தகைய குற்றச் செயல்கள் இடம்பெறுவதை அனுமதிக்கவும் முடியாது. அதன் அடிப்படையில் இந்த இரண்டு சந்தேக நபர்களினதும் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்படுகின்றது- என்று மேல் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார். (ற-4)

# சம உரிமை உடையோராக நாம் நடத்தப்படவேண்டும்

## சீனத் தூதுவரிடம் சுட்டிக்காட்டினார் விக்கி

யாழ்ப்பாணம், ஜூன் 15

அரசு எமது உரிமைகளைத் தந்தால், சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வதில் எந்தப் பிரச்சினைகளும் எமக்கில்லை. நாம் எதிரானவர்களல்ல. நாம் சம உரிமையுடையவர்களாக நடத்தப்படவேண்டும். அதற்கு ஏற்றவாறு அரசியல் ரீதியான மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்று சீனத் தூதுவரிடம் வலியுறுத்தியதாகவடக்குமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனத் தூதர் யாழ்ப்பாணத்துக்கு ஒரு நாள் பயணம் மேற்கொண்டு வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

புதிய அரசு வந்ததன் பின்னர் சீன அரசுடனான உறவு பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சீனாவுக்குப் பயணம் செய்ததன் மூலம் உறவு நல்லதாக வலுவடைந்துள்ளது என்று சீனத் தூதுவர் இந்தச் சந்திப்பின்போது தெரிவித்ததாக முதலமைச்சர் தெரிவித்தார்.

இந்த அரசே சீனத் தூதுவருக்கு அனுசரணையாக இருந்து ஏற்பாடு செய்து இங்கு அனுப்பியுள்ளது என்பது அவருடன் கதைத்ததிலிருந்து புரிகின்றது. அவ்வாறே நான் கருதுகின்றேன். இலங்கை அரசின் அனுசரணையுடன் தான் இந்தப் பயணம் அமைந்துள்ளதாக உணர்ந்து கொள்கின்றேன்.

பல வகைகளில் எமக்குள்ள முரண்பாடுகளையும், சமூக ரீதியான முரண்பாடுகளையும் எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்று கேள்விகளை எழுப்பியதுடன், தனது எண்ணங்களையும் தூதுவர் எடுத்துக் கூறினார். இவற்றுக்கு நான் பதிலளிக்கும் போது,

"எம்மைப்பொறுத்தவரை, எதிர்ப்பானவர்கள் அல்ல. சம உரிமையுடையவர்களாக நடத்தவேண்டும். அதற்கு ஏற்றவாறு அரசியல் ரீதியான மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும் என்பதையே வலியுறுத்தினேன். ஒரு நாட்டுக்குள் வாழ்வது தொடர்பில் எமக்குப் பிரச்சினையில்லை. எமது உரிமையை ஏற் றுக் கொண்டால் அது முடியும்.

"1000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்களுக்கும், சீன மக்களுக்கும் இடையில் உறவு இருந்துள்ளது. சீன மக்களுடன் எமக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. சீன மக்கள் தனித்துவத்தை அறிந்து கொள்வதுடன், புரிந்துகொள்ள வேண்டியதுடன், சிங்கள தலைவர்களுக்கும் எடுத்துக் கூறவேண்டும்-என்று கூறினேன்.

அதேவேளை, சீனப் பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களை வழங்கவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளேன். யாழ்ப்பாணத்தில் உள்ள 10 மாணவர்கள் சீனப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க முடியும் என்றும், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தூதர் தன்னிடம் கூறியதாக முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-4-106-101)

# ஆசிரியர்கள் கைபேசி உபயோகிக்கத்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமேல் மாகாணப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் கற்பித்தலின்போது கைபேசி பயன்படுத்த முடியாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது. வடமேல் மாகாணக் கல்வி அமைச்சர் சந்தியா குமார ராஜபக்ச இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கற்பித்தல் நேரம் நிறைவடைந்த பின்னர் அதுவும் அவசியம் ஏற்படும் போது மட்டுமே கைபேசி பயன்படுத்தலாம் என்றும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# குருநகரில் நள்ளிரவில் 15 பவுண் நகை திருட்டு

யாழ்ப்பாணம்,ஜீன் 15

நள்ளிரவில் வீடு புகுந்த திருடன் தாலிக் கொடியை மட்டும் விட்டுவிட்டு, ஏனைய 15 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளான் என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு குருநகர் கடற்கரை வீதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கதவை மூடித்தடை வைத்துப் பூட்டிவிட்டு தூங்கிய போது தடையை எடுத்து உள்நுழைந்த திருடன், தாலிக்கொடியை மட்டும் வைத்துவிட்டு, ஏனைய நகைகளை எடுத்துச் சென்றுள்ளான் என்றும் மகளின் திருமணத்துக்காக வைக்கப்பட்டிருந்த 15 பவுணுக்கும் அதிகமான நகைகள் களவாடப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (த-வ-4,160)

# பூசகரின் வீட்டில் கொள்ளை; 4 ஆவது சந்தேகநபரும் கைது

பருத்தித்துறை,ஜீன் 15

வடமராட்சி திக்கத்தில் சில மாதங்களுக்கு முன் பூசகர் ஒருவரின் வீட்டில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்படும் 4 ஆவது சந்தேகநபரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நேற்று பருத்தித்துறை நீதிவான் மன்றில் பொலிஸார் முற்படுத்தினர். இதன்போது குறித்த சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட பருத்தித்துறை நீதிவான் பெ.சிவகுமார், அவரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் கட்டளையிட்டுள்ளார்.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை என தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன் பின்னர் குறித்த பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுத்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி வேறொரு வழக்கில் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

அதன்பின் வடமராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பரின் வழிகாட்டலில் பருத்தித்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, முதலாவது சந்தேகநபர் ஒட்டிசுட்டானிலும், இரண்டாவது சந்தேகநபர் பருத்தித்துறையிலும் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் மூன்றாவது சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்றில் சட்டத்தரணி மூலமாகச் சரணடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-4,109,26)

# கொக்கெய்ன் கைப்பற்றப்பட்ட கொள்கலனை நேரில் சென்று பார்வையிட்டார் ஜனாதிபதி



சீனி மூடைக்குள் மறைத்து வைத்து இலங்கைக்குக் கடத்தப்பட்டது என்று கூறப்படும் 91 கிலோகிராம் கொக்கெய்ன் போதைப் பொருள் கொண்ட கொள்கலனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பார்வையிட்டார். இந்தக் கொள்கலனைப் பொலிஸ் விசேட பிரிவும் நிதி அமைச்சின் சட்ட விரோதப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவும் இணைந்து கைப்பற்றியிருந்தன.

ஒறுகொடவத்தையில் உள்ள சுங்கத் திணைக்களத்தின் களஞ்சியப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தக் கொள்கலன் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி ஒரு பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனி இறக்குமதி செய்யும் போர்வையில் பிரேஸில் நாட்டிலிருந்து இந்த போதைப்பொருள் கொண்டுவரப்பட்டுள்ளது. 50 கிலோ கிராம் எடைகொண்ட சீனி உறைகளுக்கு மத்தியில் கறுப்பு நிற மூன்று உறைகளில் இந்தப் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் சட்டவிரோத போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, பொலிஸ் விசேட பிரிவுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. ஒறுகொடவத்தையில் உள்ள சுங்கப் பிரிவுக்குத் திடீர் கண்காணிப்பு ஒன்றை மேற் கொண்ட ஜனாதிபதி, இந்தக் கொள்கலனையும் பார்வையிட்டார். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட குழுக்களுக்கு ஆலோசனை வழங்கினார். இதன்போது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் ஜனாதிபதியுடன் இணைந்திருந்தார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய போசணை மாதம் ஜூன் - 2016

கொழுப்புடன் எண்ணெய் சீஸ்சுடன் பட்டர் குறைத்தே எடுத்தால் கொலஸ்ரோல் குறையுதே!

உப்பும் சீனியும் உணவில் குறைத்தால் உயர் குருதியமுக்கம், நீரிழிவு எனும் இன்ன பிற தொற்றா நோய்களும் தூர ஓடுமே!

# போரினால் பாதிக்கப்பட்டோருக்கு முதலமைச்சர் நிதியத்தில் ஒதுக்கீடு

## ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 15

கொஸ்கம ஆயுதக் கிடங்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு ஓடோடிச் சென்று கோடிக்கணக்கான நிவாரணங்களை – உதவிகளை வாரியிறைக்கின்றது. ஆனால் போரினால் முற்றாகச் சின்னாபின்னமான எங்களது மக்களுக்கு எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையில் முதலமைச்சரின் நிதியத்தில், போரினால் பாதிக்கப்பட்ட மக்களை உள்வாங்காமல் விடக்கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாணசபை ஆளும்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

வடக்கு மாகாண சபையின் 54 ஆவது அமர்வு நேற்று இடம் பெற்றது. இதில் முதலமைச்சரின் நிதிய நியதிச் சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

தென்னிலங்கையில் இரண்டு இடர்கள் அண்மையில் ஏற்பட்டன. மண்சரிவு - வெள்ள இடர் நடந்தது. இதன் பின்னர் கொஸ்கமவில் ஆயுதக் கிடங்கு வெடித்தது. இந்த இரண்டு இடர்களின் போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு கோடிக்கணக்கில் பணத்தை உடனடியாக ஒதுக்கீடு செய்தது. நிவாரணங்களை அள்ளி வழங்கியது.

கொஸ்கம வெடிப்புச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டு வாடகை வீடுகளில் தற்காலிகமாக வாழ்பவர்களுக்கு மாதாந்தம் 50 ஆயிரம் ரூபா வழங்குவதாக அரசு தெரிவித்துள்ளது. இங்கு 25 வருடங்களாக இடம் பெயர்ந்து வாடகை வீடுகளில் வாழ்பவர்களுக்கு எந்த உதவியும் வழங்கப்படவில்லை. வாடகையும் கொடுக்கப்படுவதில்லை. போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசினால் புறக்கணிக்கப்பட்டு - கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர். அவர்களை நாமும் கைவிட முடியாது. எனவே முதலமைச்சரின் நிதிய நியதிச் சட்டத்தின் குறிக்கோளில் முக்கியமாகப்போரினால் பாதிக்கப்பட்ட என்ற பதம் சேர்க்கப்பட வேண்டும் - என்றார். (த-வ-5)

# எந்தக் கட்சியை சேர்ந்தவர் விக்கி?

## சபையில் நேற்றுச் சலசலப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்ற சர்ச்சை சபையில் எழுப்பப்பட்டதால், சலசலப்பு ஏற்பட்டது.

"முதலமைச்சர் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர் அல்ல. அவர் அப்படித்தான் சொல்கின்றார்" என்று வடக்கு மாகாண ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார். இதனாலேயே சபையில் சிறிது நேரம் சலசலப்பு உருவானது.

முதலமைச்சரின் நிதிய நியதிச் சட்டம் மீதான விவாதம் நடந்தது. இதில் முதலமைச்சர் நிதியத்தின் ஆளுநர் சபைக்கு, முதலமைச்சர் சார்ந்துள்ள கட்சி அல்லது சுயேச்சைக் குழு அல்லாத ஏனைய கட்சிகளின் அல்லது சுயேச்சைக் குழுக்களின் உறுப்பினர் நியமிக்கப்படவேண்டும்என்றசரத்துகாணப்பட்டது. இதில் மயக்கம் காணப்படுவதாக ஆளும்கட்சி உறுப்பினர் பரஞ்சோதி தெரிவித்தார்.

மேற்படி வசனத்தில் முரண்பாடு இருப்பதாகக் குறிப்பிட்டார். எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, இந்த வசனத்தில் முதலமைச்சர் சாராத கட்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியாயின் அவர்கள் யார்? என்று கேட்டார். அவைத் தலைவர் நீங்கள்தான் (எதிர்க்கட்சி) என்று பதிலளித்தார்.

இதன்போது உறுப்பினர் பரஞ்சோதி, முதலமைச்சரே ஒரு கட்சியிலும் இல்லை. அதை அவரே சொல்லியுள்ளார் - என்றார். குறுக்கீடு செய்த உறுப்பினர் சிவாஜிலிங்கம், நாங்கள் ஆளும் கட்சியின் 30 பேர் ஒன்று கூடி எங்களின் குழுக்களின் தலைவராக விக்னேஸ்வரனைத் தெரிவு செய்து, ஆளுநருக்குப் பரிந்துரை செய்தோம். அதன் பின்னரே அவர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார் என்று குறிப்பிட்டார்.

ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின், பரஞ்சோதி தெரிவித்த கருத்தை சபைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று தெரிவித்தார். முதலமைச்சர் எந்தக் கட்சியையும் சாராதவர் அல்ல என்பது தவறானது. வடக்கு மாகாணசபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் இலக்கம் பத்தில் அவர் போட்டியிட்டவர் என்று தெரிவித்தார். (த-வ-5)

# ரயர் வெடித்து கிராம அலுவலர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

முன் ரயர் வெடித்து மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த கிராம அலுவலர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை வேலணையில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் 47 வயதுடைய கிராம அலுவலரே காயங்களுக்கு உள்ளானார்.

வேலணை-யாழ்ப்பாணம் வீதியில் சென்று கொண்டிருந்த போது, அவரது மோட்டார் சைக்கிள் முன்ரயர்வெடித்ததில், பள்ளத்துக்குள் இழுத்து சென்ற மோட்டார் சைக்கிள் தலைகீழாக கவிழ்ந்துள்ளது.

அந்த வீதியால் சென்றவர்களால் அவர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-4,107)

# பயங்கரவாதச் சட்டத்துக்கு பதிலாக மூன்று சட்டங்கள்

## வரையப்படுகின்றன என்கிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, ஜூன் 15

பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக மூன்று சட்டங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற கூட்டத் தொடரில், இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என்று இலங்கை அரசு வாக்குறுதி வழங்கியிருந்தது. இதனை உள்ளடக்கி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கும் இணை அனுசரணை வழங்கியிருந்தது.

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக சர்வதேச நாடுகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்களை உள்ளடக்கிய புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து அரசு தெரிவித்து வருகின்றது. தற்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதி இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளிப்படுத்தவுள்ளார். இவ்வாறானதொரு நிலையிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கையில் தீவிரவாதம் மீண்டும் தலையெடுப்பதை தடுப்பதற்கும், சமூக நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், சட்டத்தின் ஆட்சி மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், மூன்று புதிய சட்டங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாகவே இந்த மூன்று சட்டங்களும் கொண்டு வரப்படவுள்ளன. தேசிய பாதுகாப்புச் சட்டம், அமைப்பு ரீதியான குற்றங்களைத் தடுக்கும் சட்டம், புலனாய்வுச் சட்டம் ஆகியனவே புதிதாககொண்டுவரப்படவுள்ளன. இந்த மூன்று சட்டங்களும் இன்னமும் வரையப்படும் நிலையில்தான் இருக்கின்றன - என்றார். (த-வ-5)

# உள்நாட்டு நீதிபதிகளும் தண்டனை வழங்குவர்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

போர்க்குற்ற விசாரணையில் உள்நாட்டு நீதிபதிகளால், முன்னாள் ஆட்சியாளர்கள் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கின்றது ? என்று கேள்வி எழுப்பிய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், ஈராக்கில் சதாம் ஹுசைனைத் தூக்கு மேடைக்கு அனுப்பியது அவராலே நியமிக்கப்பட்ட உள்நாட்டு நீதிபதிகள் குழுவாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அந்த அமைப்பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்குலக சதியாளர்களும், இந்தியாவும் அவர்களது அழுத்தங்களுக்குக் கீழ்ப்படியும் இலங்கை அரசும் இணைந்து நாட்டை பிளவடையச் செய்வதற்கே புதிய அரசமைப்பு கொண்டு வரப்படுகின்றது. இதுவே பிரதான இலக்காகும். நல்லிணக்கம், சமாதானம் என்ற போர்வையில் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கான காரணியாகப் புதிய அரசமைப்பில் வழிவகுத்துக் கொடுக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி இதற்கு ஏன் ஒத்துழைத்தது என்பதே எமது வினாவாகும். மார்ச் மாதம் 9 ஆம் திகதி முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரால் முடிந்தது. அதன் இறுதிப் பிரதிபலனாக நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு வழியமைத்துக் கொடுப்பதே ஆகும்.

இலங்கையைப் பிளவுபடுத்துவதற்கு மேலும் சில விடயங்களை மேற்கொள்ள முடியும். பிளவுக்கு எதிராகக் குரல் கொடுப்போரை அடக்குவதே முதலாவது வழிமுறை. சர்வதேச நீதிமன்றமொன்றை அமைத்து, மனித உரிமைகள் மீறல் இடம்பெற்றதாக முன்னாள் ஆட்சியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்கப் போவதில்லை என்று அரசு தெரிவித்துள்ளது. ஆட்சியாளர்களைத் தண்டிப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகளே வரவேண்டும் என்ற தேவைப்பாடு இல்லை.- என்றார். (த-வ-5)

அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.83,919,700/-
019
2016-06-14
கோடிபதி
D 03 15 28 50
SMS: DLB<space>LOT<space>SF
Web: www.dlb.lk

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
14.06.2016 | 1991 | நீலம்
வெற்றி இலக்கங்கள்
28 38 44 47
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 33,86,900/-
2016-06-17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.

நியத்த ஜய
470
14-06-2016
12 20 21 44 L
எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ.10,000,000/-

Receptionist Wanted

We are looking for a suitable candidate for the above post with,

- Passed in G.C.E (A/L) Examination.
- Having sound knowledge in MS OFFICE package.
- Excellent Communication & inter personal skills
- Positive Working Attitude with a results oriented mindset
- Fluent in English



(C721889)(11.17)

Interested Candidates may please apply to:
jaffnavacancy@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியா வேலைவாய்ப்பு

Civil Electro mechanical project in Fertilizer plant of Dankote Group in Nigeria

நைஜீரியாவிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு கீழ்காணும் வேலைகளுக்கு தகுதியானவர்கள் உடனடியாகத் தேவை. விருப்பம் உள்ளோர் பாஸ்போர்ட் சான்றிதழ் CV ஆகியவற்றுடன் உடனடியாக எமது காரியாலயத்தில் பதிவு செய்யவும்.

| Category | Qty | Salary (Rs.) | Salary (USD) |
|---|---|---|---|
| Engineer - Piping 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Structural 10 yrs+/BE Mech | 12 | 220000-275000 | 1500-1900 |
| Engr - QAQC 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Mech Planning 10 yrs+/BE Mech | 08 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Mech 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Elect 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Instr 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engr - Painting & Blasting 10 yrs+/BE Mech | 08 | 220000-275000 | 1500-1900 |
| Sand Blasting Supervisor 8 yrs+ Diploma | 10 | 110000-135000 | 750-930 |
| Engr - Refractory/Insulation 10 yrs+/BE Mech+ Certified | 08 | 220000-275000 | 1500-1900 |
| Pipe Fitter Tech Certified | 35 | 50000-65000 | 350-450 |
| Pipe Fabricator Tech Certified | 40 | 50000-65000 | 350-450 |
| Pipe TIG & Arc Welder Tech Certified | 55 | 65000-70000 | 450-485 |
| Structural Fitter Tech Certified | 40 | 50000-58000 | 350-400 |
| Structural Fabricator Tech Certified | 40 | 50000-58000 | 350-400 |
| Structural Welder Tech Certified | 55 | 50000-58000 | 350-400 |
| MIG Welder Tech Certified | 50 | 50000-58000 | 350-400 |
| Gas Cutter Tech Certified | 35 | 45000 | 310 |
| Grinder Tech Certified | 35 | 45000 | 310 |
| Milwright Fitter Tech Certified | 25 | 50000-65000 | 350-450 |
| Milwright Foreman 8 yrs + Diploma | 15 | 105000-125000 | 725-850 |
| Rigger 3 yrs | 50 | 43000 | 300 |
| Rigger Foreman 8 yrs + Diploma | 15 | 105000-125000 | 750-850 |
| Welder Foreman 8 yrs + Diploma | 15 | 110000-135000 | 850-930 |
| Supervisor 8 yrs + Diploma | 10 | 105000-125000 | 750-860 |
| Manager - All Categories 15 yrs + Degree | 15 | 145000-160000 | 1000-1100 |

நிபந்தனைகள் CV Collection Only, No charges apply

உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம். வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் வாரத்திற்கு 48 மணித்தியாலங்கள். ஒப்பந்தக்காலம் 2 வருடம். இருவழி விமான டிக்கட் இலவசம் மற்றும் அனைத்து நிபந்தனைகளும் நைஜீரிய நாட்டின் சட்டத்திற்கு அமைவாக

AL/Advt/701/29/16

Piccaso Adz

## தனா மேன் பவர்

இல.104, செட்டியார் தெரு, 2ம் மாடி, கொழும்பு 11.

TP. 0115 33 33 46/7/8/9 Fax. 0112 33 51 00 Mobile No. 0722 460046 / 0722 430043
E-Mail: danamanpower@yahoo.com Web: www.danamanpower.com



## கிருஸ்ணா அடகு சேவை

பதிவு இல.J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2015 ஆம் ஆண்டு 15.12.2015 ஆம் திகதிக்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதிக்கு (15.07.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.07.2016 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர் களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் A.S. Surendran

இல.370
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

(சி.21866)
(13.16)

இல.09
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046



## பாலன் மில்/ வேலையாள்கள் தேவை

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை, கொப்பறா, எள்,இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து), சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும்.

பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட சுத்தமான கலப்படமற்ற தேங்காய் எண்ணெய், பைகளில் அடைக்கப்பட்ட தரமான அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.

பாலன் மில்
மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை.
021 321 2624
(மில்லில் வேலை செய்யக்கூடிய வேலையாள்களும் தேவை)


## காப்பெற் வீதியாக மாறவுள்ள காயா வீதி

வலி, தென்மேற்குப் பிரதேசத்தில் பண்டத்தரிப்புப் பட்டினத்திலுள்ள காயா வீதி பல மில்லியன் ரூபா செலவில் காப்பெற் வீதியாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள வீதித் திருத்த வேலைகளை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொள்ளவுள்ளது.

பண்டத்தரிப்புப் பட்டினத்தில் ஜே/145 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 21 வீதிகளும் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு சேதமடைந்த நிலையில் உள்ளன என்று வடமாகாண முதலமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

முன்னுரிமை அடிப்படையில் எந்த வீதியைப் புனரமைக்கவேண்டுமென்ற விவரத்தை அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டமையைத் தொடர்ந்து, ஆயிரத்து 500 மீற்றர் நீளமான காயா வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடப்பட்டது.

அதையடுத்து வீதியின் 950 மீற்றர் நீளமான வீதியை முதற்கட்டமாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ற-ஜ-135)


## காணி விற்பனைக்கு

பளை நகர்ப் பகுதியில் பத்து (10) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(ஜே/70(0216))

077 174 9285

## காணி விற்பனைக்கு உண்டு

பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

## Singam Cabs Service

(Callcabs)

01.உங்களது பயணங்களை, இலகுவாகவும் பாதுகாப்பாகவும், மலிவாகவும் மேற்கொள்ளலாம்.
02. பயணத்துக்கான கட்டணங்களை மீற்றர் மூலம் அறிந்து கொள்ளலாம்.
03. 10 பேர் பயணிக்கக்கூடிய வசதி
04. 1km- 45.00
05.A/c Tv களுடன் சொகுசான பயணங்களை மேற்கொள்ளலாம்.

077 480 9019

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.கலைப்பீடம்

நுண்கலைமாணி (சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும்), மொழிபெயர்ப்பு கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2015 / 2016 தகுதிகாண் பரீட்சை

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகுதிகாண் பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

| கற்கை நெறி | பரீட்சைகள் நடைபெறும் திகதி | பரீட்சை மண்டபம் | நேரம் |
|---|---|---|---|
| இசை செய்முறை | 15.06.2016<br>16.06.2016<br>17.06.2016<br>20.06.2016<br>21.06.2016<br>22.06.2016<br>23.06.2016<br>24.06.2016<br>27.06.2016<br>28.06.2016<br>29.06.2016<br>30.06.2016 | இசைத்துறை விரிவுரை மண்டபம், இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | முற்பகல் 9.00<br>பிற்பகல் 4.00 மணி |
| நடனம் செய்முறை | 15.06.2016<br>16.06.2016<br>17.06.2016<br>20.06.2016<br>21.06.2016<br>22.06.2016<br>23.06.2016<br>24.06.2016<br>27.06.2016<br>28.06.2016 | நடேசர் அரங்கு, இராமநாதன் நுண்கலைக் கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | முற்பகல் 9.00<br>பிற்பகல் 4.00 மணி |
| சித்திரமும் வடிவமைப்பும் | செய்முறைப் பரீட்சை<br>28.06.2016<br>29.06.2016<br>30.06.2016<br>01.07.2016 | சித்திரமும் வடிவமைப்பும் அலகு, இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார்மடம், சுன்னாகம். | முற்பகல் 9.00<br>பிற்பகல் 4.00 மணி |
| | எழுத்துப் பரீட்சை<br>02.07.2016 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். | முற்பகல் 9.30 மணி |
| மொழி பெயர்ப்புக் கற்கை நெறி | எழுத்துப் பரீட்சை<br>03.07.2016 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இராமநாதன் வீதி,திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.<br>சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகம்,கல்லடி, மட்டக்களப்பு<br>கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி, மட்டக்களப்பு. | பிற்பகல் 2.00<br>பிற்பகல் 5.00மணி |

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு உதவிப்பதிவாளர்/ அனுமதிகள் கிளையுடன் 021 222 8714 என்ற தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ளலாம்.

(C/21899)
(11,17,18)

15.06.2016 பதிவாளர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# களஞ்சிய அறையில் போடப்பட்டுள்ள புற்றுநோய் சிகிச்சை இயந்திரத் தொகுதி

## கொள்வனவில் ஊழல் என்ற சந்தேகத்தால் பொருத்துவதில் கால தாமதம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு என கொள்வனவு செய்யப்பட்ட புற்றுநோய்க்கான சிகிச்சை இயந்திரத் தொகுதி உபயோகப்படுத்தப்படாது களஞ்சிய அறையில் வைக்கப்பட்டுள்ளது. இதன்பெறுமதி 200 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதாகும். இதன் கொள்வனவின்போது ஊழல் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்தே அது உபயோகிக்கப்படாதுள்ளது என்று மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

புற்றுநோய் தாக்கம் உள்ளவர்களுக்கான கதிர் இயக்கச் சிகிச்சைக்கான நவீன இயந்திரத் தொகுதி கடந்த பெப்ரவரி மாதம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

அது பெப்ரவரி மாதம் எடுத்து வரப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளபோதும் இன்று வரை பொருத்தப்படவில்லை. குறித்த இயந்திரம் பொருத்தப்படும் சந்தர்ப்பத்தில் தற்போதுள்ள சிகிச்சை முறைகளுக்கு அப்பால் மேலதிக நவீன சிகிச்சை முறைகளை வழங்க முடியும். இயந்திரத் தொகுதி தருவிக்கப்பட்டநிலையில் பராமரிப்பு இன்றிக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன் இதுகுறித்து தெரிவித்ததாவது–

200 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியை உடைய புற்றுநோய் சிகிச்சை இயந்திரத் தொகுதி 3 மாதங்களுக்கு முன்பே தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

இந்த இயந்திரத் தொகுதி மத்திய அரசால் வழங்கப்பட்டது. அதனைப் பொருத்த நடவடிக்கை மேற்கொண்ட வேளையில் மத்திய சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட ஓர் அறிவுறுத்தலின் பிரகாரம் அதனைப் பொருத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இயந்திரத் தொகுதியின் கொள்வனவில் ஊழல் இடம் பெற்றுள்ளது என்று கருதி, ஓர் விசாரணை இடம்பெறுகின்றது என்று எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. -என்றார்.(ற-ஐ-101)

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 15

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 200 ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்விக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது என்று கல்லூரிச் சமூகம் தெரிவித்துள்ளது.

நாளை வியாழக்கிழமை முதல் தொடர்ந்து மூன்று நாள்கள் கல்லூரி வளாகத்தில் கண்காட்சி நடத்தப்படவுள்ளது. இதில் கற்பித்தல் சாதனங்கள் சகல பாடத்துக்கும் அலகு ரீதியாக ஆசிரியர்களால் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் முப்பரிமாண முறையிலமைக்கப்பட்ட நூலக முறையும், மூலிகைத் தோட்டத்திலிருந்து மூலிகைக் கண்காட்சியும், சித்த மருத்துவ வகைகளும், விவசாயத் திணைக்களத்தினதும் யாழ்கோ நிறுவனத்தினதும், உற்பத்தி நடவடிக்கையின் கண்காட்சியும், விற்பனையும் அதில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற தபால் திணைக்களப் பிரதம கணக்காளரும், பழைய மாணவியுமாகிய திருமதி நவீனா பாலேசனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என். காண்டீபனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-ரீ)

## கற்றல் உபகரணம் வழங்கல்

சாவகச்சேரி, ஜூன் 15

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துக் கல்வி வலயங்களிலிருந்தும், தலா ஒரு பாடசாலை வீதம் தெரிவு செய்து 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சங்கத்தின் உறுப்பினரும், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியுமான மகேஸ் சேனநாயக்க தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் வைத்து அவை வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தின் அனைத்து கல்வி வலயங்களைச் சேர்ந்த 500 மாணவர்கள் கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொண்டனர். (ற-ஐ-9)

## மணல் கடத்திய குற்றச்சாட்டு சாரதி கைது

கச்சாயிருந்து கொடிகாமத்துக்கு ஹப் ரக வாகனத்தில் மணல் கடத்திய குற்றச்சாட்டில் அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசியத் தகவலின் அடிப்படையில் அல்லாரைப் பகுதிக்குச் சென்ற இரகசியப் பொலிஸார், வாகன சாரதியைக் கைது செய்ததுடன், குறித்த வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-107)

## பாடசாலை உணவகங்களில் 6 வகை உணவுக்குத் தடை

பாடசாலைகளில் உள்ள உணவகங்களில் அதிகளவில் சீனி, உப்பு மற்றும் கொழுப்பு அடங்கியுள்ள உணவுகள் உள்ளிட்ட ஆறு உணவு வகைகளை விற்பனை செய்வதற்குக் கல்வி அமைச்சு தடை விதித்துள்ளது.

சொக்லேற், டோனற், எக்லியாஸ், சொக்லேற் பிஸ்கற், சொக்லேற் கேக், கிறீம் கலந்துள்ள பிஸ்கற், புடிங், செயற்கையாக நிறமூட்டப்பட்ட மற்றும் ருசியூட்டப்பட்டுள்ள மென்பான வகைகள் மற்றும் கோலாபானங்கள், ஐசிங் கேக் வகைகள் அனைத்து பிஸ்கற் வகைகள், சக்தி தரும் பானங்கள் , கோடியல்கள் , செயற்கையான பழரச பானங்கள் மற்றும் குளிர்பானங்கள் போன்ற சீனி அதிகமுள்ள உணவு வகைகள் பாடசாலை உணவகங்களில் தடை செய்யப்பட்டுள்ளன.

ஹெம், சொசேஜஸ், ட்ரொக் வொஸ்ட், லிங்குஸ், பேகன் அல்லது அவை சேர்க்கப்பட்ட ஏனைய தயாரிப்பு உணவுகள், பப்பேஸ்ரி, ஆழமான எண்ணெயில் பொரித்தெடுக்கப்படும் றோல்ஸ், பற்றிஸ், கட்லற் , பொரித்த கிழங்குச் சீவல் வகைகள் ஏற்கனவே சமைத்து பொதி செய்யப்பட்டுள்ள இறைச்சி மற்றும் மீன் உற்பத்திகள் போன்ற கொழுப்பு அதிகமுள்ள மற்றும் ட்ரான்ஸ் கொழுப்பு அடங்கியுள்ள உணவு வகைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

உப்பு அதிகமுள்ள உணவுகளாக உப்பு கலக்கப்பட்டுள்ள நிலக்கடலை, கடலை, கஜு, பொதி செய்யப்பட்ட ஊறுகாய் வகைகள், சூப்கட்டிகள், மற்றும் உடனடி சூப் கலவைகள், ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ள உடனடி நூடில்ஸ் வகைகள், உப்பு கலக்கப்பட்ட சிற்றுண்டிப் பொதிகள், மற்றும், சோளப்பொரி போன்ற பொரி வகைகளும் தடை செய்யப்படுகின்றன.

போசாக்கற்ற உணவுகள், மதுசாரம் அல்லது போதையூட்டத்தக்க உணவுகள், மற்றும் ஏற்கனவே தயாரித்துப் பொதி செய்யப்பட்ட உணவு வகைகள் என்றவாறு இனிப்புக்கள், சுயிங்கம், றொபி, ஐஸ் பைக்கற்றுக்கள், ஐஸ்பழம், ஜெலிகப், பூந்தி, அல்கஹோல் அடங்கியுள்ள குடிபானங்கள் மற்றும் பாபூல் , பீடா போன்றவைகள், சொசேஜஸ் வகைகள், உடனடி நூடில்ஸ், மற்றும் மிற் போல்ஸ் போன்றவைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

தானியங்கள் மற்றும் தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகள், கிழங்கு வகைகள் உள்ளடங்கும் உணவுகள், மரக்கறிகள் மற்றும் கீரை வகைகள், இயற்கையாக விளையும் உள்ளூர் பழவகைகள், மாமிச உணவுகள், மாமிசச் சத்துள்ள தானியங்கள், தண்ணீர், பால், பழச்சாறு, இலைக்கஞ்சி வகைகள் போன்ற பானங்களை மாணவர்கள் தெரிவு செய்து கொள்ளத்தக்கதாகப் பலதரப்பட்ட வகைகளிலான உணவுப்பட்டியலாவது இருக்க வேண்டும்என அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது.

இலவசமாகக் கல்வியை வழங்குவதோடு முறையான போசாக்குகள் நிறைந்ததிடகாத்திரமான சிறார்கள் சந்ததியொன்றை சமூகமயப்படுத்தும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கும், சுகாதாரம் மிக்க உணவுகளைச் சகாய விலை மட்டங்களின் கீழ் பெற்றுக்கொள்ளத்தக்க வகையிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (ற-ஐ-22)

சங்கரத்தை, வட்டுக்கோட்டை
கலைவாணி சனசமூக நிலையத்தின் 31ஆவது ஆண்டு விழாவும்
கலைவாணி கலையரங்க திறப்பு விழாவும்



காலம் 19.06.2016
முற்பகல் 10.00
அதனை முன்னிட்டு ஆண்களுக்கான
மாபெரும் சைக்கிளோட்டப் போட்டி
18.06.2016 காலை 7 மணிக்கு (சகல மாவட்டக்காரரும் பங்கு பற்றலாம்)
பெறுமதி மிக்க பரிசில்கள் 5ஆம் இடம் வரை வழங்கப்படும்.
நிர்வாகத்தினர்.
தலைவர். (ஜே/2146) (11.18) செயலாளர்.

வாணர் கலையரங்கம்
அடிக்கல் நாட்டு வைபவ அழைப்பு
இடம் : வாணர் அரங்கு, புங்குடுதீவு - 12
காலம் : 16.06.2016ஆம் திகதி வியாழக்கிழமை
நேரம் : 9.00 - 11.15 மணிவரை
தலைவர்:
திரு.சு.நித்தியானந்தன்
தலைவர், புங்குடுதீவு கலைப்பெருமன்றம்
தொடக்கவுரை - பேராசிரியர் கா.குகபாலன் அவர்கள்
பிரதம விருந்தினர்
உயர்திரு. நா.வேதநாயகன் அவர்கள்
அரச அதிபர்,யாழ்ப்பாண மாவட்டம்.
சிறப்பு விருந்தினர்கள்
★ பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
முன்னாள்துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.
★ உயர்திரு.இ. இளங்கோவன் அவர்கள்
கௌரவ ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்.
★ திருமதி எஸ்.தெய்வேந்திரம் அவர்கள்
பிரதேச செயலாளர், வேலணை.
★ திரு.அ.குருநாதன் அவர்கள்
பிரதேசசபை செயலாளர், வேலணை.
நன்றியுரை: திருமதி சுலோசனாம்பிகை தனபாலன்
செயலாளர், புங்குடுதீவு கலைப்பெருமன்றம்.
ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்
புங்குடுதீவு கலைப்பெருமன்றம், புங்குடுதீவு - 12

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்
அவர்களுக்கு
'தேசோதய தீபம்'



சர்வோதய விருது வழங்கப்பட்டது. யாழ்.மாவட்ட சர்வோதய நிலையம் நடத்திய 2016 தேசோதய விருது வழங்கும் விழாவில் ஆன்மீக, நன்னெறி, கலாசார, சமூகமேம்பாட்டுத் துறைகளில் தம்மை இணைத்து முற்போக்கான அபிவிருத்தி எழுச்சி நோக்கிய வகையில் தெய்வீகப் பேருரைகள், வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனைகள், கவியரங்குகள், கட்டுரை, கவிதைத் துறைகளில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அளப்பரிய பணிகளை நிறைவேற்றிவரும் தெய்வீக ஞானத் தமிழருவி, கவிமாமணி, ஆன்மீகச்சுடர், சமூகதிலகம், வர்ணனைக் கலாநிதி, மதுரகவி, காரை எம்.பி. அருளானந்தன் அவர்களுக்கு சர்வோதய தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன அவர்கள் முன்னிலையில் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதியரசர் மா.இளஞ்செழியன் அவர்கள் மதுரகவிக்கு தேசோதய தீபம் என்னும் விருதையும் சான்றிதழையும் வழங்கிக் கௌரவிக்கின்றார்.
'தேசோதயதீபம் மதுரகவியை' மனநிறைவோடு வாழ்த்தி மகிழ்பவர்
கலாநிதி வைத்திலிங்கம் - சிவராஜா
(பணிப்பாளர், வடமாகாண மனித உரிமைகள் அமைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையரங்கத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 15
புங்குடுதீவின் வளர்ச்சிக்காகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்த வாணர் சகோதரர்களை நினைவு கூரும் வகையில், நாளை வியாழக்கிழமை வாணர் கலையரங்கத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு வாணர் அரங்கில் நடைபெறவுள்ளது.
புங்குடுதீவு கலைப்பெரு மன்றத்தின் தலைவர் சு.நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வேலணை பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன், பேராசிரியர் கா.குகபாலன், பிரதேசசபைச்செயலாளர் அ.குருநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-7)

**துயர் பகிர்கின்றோம்**

எமது கல்லூரியின் ஆரம்பப்பிரிவு ஆசிரியரான
திருமதி S. **உதையச் செல்வி** அவர்களின் தந்தையாரான
**செல்லையா கந்தையா**
அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.
**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.** (c 21816) (12.18)

**நினைவு கூரல்**

எமது பாடசாலையின் ஆசிரியை **திருமதி ஜெ.கி.அ. விமலதாசன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி பங்கிராசம்மா அந்தோனிப்பிள்ளை**
அவர்கள் 22.01.2016 இறைபதம் அடைந்தார்
அவர்களின் பிரிவால் துருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் நல்லுறவுக் கழகம்**
**யா/புனித சாள்ஸ் ம.வி யாழ்ப்பாணம்** (c 21816) (12.18)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையின் ஆசிரியை **திருமதி. ஆ.ராஜசேகர்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**செபஸ்ரி பேணாட்** அவர்கள் 10.06.2016 இறைபதம் அடைந்தார்.
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் நல்லுறவுக் கழகம்,**
**யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.** (c 21816) (12.18)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களால் மக்களின் பணம் பிடுங்கப்படுகின்றது

## வவுனியா மாவட்ட சமுர்த்தி பயனாளிகள் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 15
வவுனியாவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இடையிலான போட்டியால் சமுர்த்திக் கொடுப்பனவுகள் பறிக்கப்படுகின்றன என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
யார் அதிகமாகப் பணம் சேர்ப்பது என்ற போட்டிப் உத்தியோகத்தர்களுக்கிடையே காணப்படுகின்றது என்றும் அதன் காரணத்தால் மக்களுடைய பணம் பிடுங்கப்படுகின்து என்றும் அந்த மக்கள் மேலும் குறிப்பிட்டனர்.
வவுனியா மாவட்டத்தில் 42 கிராமசேவையாளர் பிரிவில் மூன்று பிரிவுகளிலேயே சமுதாய அடிப்படை வங்கிகள் உள்ளன. சின்னப்புதுக்குளத்தில் 72 சங்கத்தின் ஊடாகவும், வேப்பங்குளத்தில் 93 சங்கத்தின் ஊடாகவும், ஓமந்தையில் 38 சங்கத்தின் ஊடாகவும் சமுர்த்தி பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
சமுதாய அடிப்படை வங்கிகள் மூலம் மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 3 தொடக்கம் 5 அங்கத்தவர்களுடைய குடும்பங்களுக்கு சமுர்த்தித் திட்டத்தின் மூலம் மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படுகின்றது. வவுனியா சமுர்த்தி வங்கிகளில் பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மக்களுக்கு வழங்கப்படும் சமுர்த்திப் பணத்தை பல்வேறு காரணங்கள் காட்டி பிடுங்குகின்றனர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது.
வவுனியா மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கிகளில் பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடையே போட்டி காணப்படுகின்றது. அந்த போட்டியின் மூலமாக யார் அதிகமாகப் பணம் சேகரிக்கின்றார்களோ அவர்கள் முதல் தர உத்தியோகத்தர் எனச் சமுர்த்தி வங்கியால் தெரிவு செய்யப்படுவர். பாராட்டு விழாக்களும் இடம்பெறுகின்றன. இந்த ஆண்டு வேப்பங்குளத்திலிருந்து ஒரு சமுர்த்தி உத்தியோகத்தர் சிறந்த உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தப் போட்டித் தன்மையின் காரணமாகவே அவர்கள் மக்களுடைய பணத்தைப் பிடுங்கி எடுக்கின்றார்கள்.
வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பொதுமக்கள் சமுர்த்தி வங்கிகளால் பெறப்படும் பணத்தை மறுபடியும் அந்த உத்தியோகத்தர்களிடமே கொடுத்து விட்டுச் செல்லும்போது மிகவும் மன உழைச்சலுக்கு உள்ளாகின்றனர். இதுகுறித்து மேல் அதிகாரிகளுக்கு அறிவித்தால் தகவல் வழங்கும் வறிய மக்களுடைய விவரம் திரட்டப்பட்டு அவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் சமுர்த்தி உதவித் தொகையை வழங்காமல் இழுத்தடிப்புச் செய்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.
இதன் காரணமாக நாம் மௌனமாக இருக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. உரியவர்கள் இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்– என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அதேவேளை இவ்வருட சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தில் சமுதாய அடிப்படை வங்கிகள் மூலம் வழங்கப்படும் சமுர்த்தி உதவித் தொகையை எந்தக் காரணம் கொண்டும் சேமிப்பு என்ற அடிப்படையில் பயனாளிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதனைக்குறித்த அதிகாரிகள் பின்பற்றுவதில்லை என்றும் கூறப்படுகின்றது.
இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக வவுனியா மாவட்ட சமுதாய அடிப்படை வங்கிச் சங்க வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் திருமதி எஸ். சந்திரகுமாருக்கு பல முறை அழைப்பை ஏற்படுத்தியிருந்தபோதும், அவர் அழைப்பில் வரவில்லை. பின்னர் அழைப்பில் வந்த அவர், சாவு வீடு ஒன்றில் இருக்கின்றேன் என்றும், பின்னர் அழைப்பெடுக்குமாறும் தெரிவித்தார்.
நேற்று மாலை தொடர்பு எடுத்த போது அவர் அழைப்பில் வரவில்லை. இது தொடர்பில் வங்கி ஆணையாளருடன் தொடர்பு கொண்டபோது கூட்டம் ஒன்றில் இருக்கின்றேன் என்றும் பின்னர் கதைக்கின்றேன் என்றார். (ற-21)

# கழிவு நீர் வாய்க்காலின் மேற்புறப் பகுதியில் குழி

## போக்குவரத்தில் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 15
யாழ். சென்பற்றிக்ஸ் வீதியில் உள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்காலின் மேல் பகுதியில் குழி ஒன்று உருவாகியுள்ளது. அதனால் இந்த வீதியூடாகப் பயணம் செய்வதில் பல அசௌகரியங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.
இந்த வீதியில் உருவாகியுள்ள குழியைத் திருத்துவதற்குப்பதிலாக அதனை மறைத்து கல் வைத்து மூடப்படவுள்ளது. இதனால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் பல கஷ்டங்களையும், உயிராபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.
கல்லை அகற்றி விட்டு, குழியைச் சீர் செய்து மக்கள் சீரான போக்குவரத்து செய்யக்கூடிய வகையில் விரைவாகத் திருத்துவதற்கு யாழ். மாநகரசபை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் மேலும் தெரிவித்தனர்.
இது தொடர்பான முறைப்பாடு எமக்கு கிடைத்துள்ளது. அந்தப் பாதையால் பயணம் செய்யும் மக்களின் நன்மை கருதியே தற்காலிகமாக கல் வைக்கப்பட்டுள்ளது. இது இன்னும் இரண்டு கிழமைகளுக்குள் உடனடியாகச் சீர்செய்து கொடுக்கப்படும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (ற-ஐ-ரி,51)

**கண்ணீர் அஞ்சலி**



புதிய நதியா மற்றும் நதியா நகைமாளிகையின்
உரிமையாளர்களின் பாசமிகு தாயார்
**திருமதி புஷ்பவதி சண்முகம்**
அவர்கள் காலமான செய்தி அறிந்து வேதனை அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
**உரிமையாளரும், பணியாளர்களும்**
*** உதயா ஜுவல்லர்ஸ்**
**இல.81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 4434**
*** நியூ உதயா ஜுவல்லர்ஸ்**
**இல.91, மின்சார நிலையவீதி,யாழ்ப்பாணம்.**

**ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
08.09.2004
மறைவு
15.06.2010

*செல்வி*
***சிவநேசன் மதுசாளினி***
பூவுதிர்ந்த மாதிரியாய் .... போய் முடிந்ததேனோ
போன திசை தேடுகிறோம், பாவெடுத்துப் பாடுகின்றோம்.
நாதமணி ஓய்ந்ததென்ன, நிலவதுவும் சாய்ந்ததென்ன
எழில் முகத்தைக் காணவில்லையே
இனி என்று உன்னைக் காண்போமோ
நீயின்றி எம் வாழ்வு– வாழ்வாகுமா
நாம் ஒன்று நினைக்க விதி ஒன்று தானெழுத
வதிவிடமே கலகலக்கும் நீயிருந்தால்....
வதிவிடமே வெறிச் சோடிக் கிடக்குதடா
நீ வதிவிடம் தேடி வருவாயா?
**குடும்பத்தினர்.**
**பூவோடை, கொற்றாவத்தை,**
**கரணவாய் வடமேற்கு, கரவெட்டி.**
(c/ 2108) (12,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் குடும்ப வன்முறைகள்; குடும்பத்தினருக்கு ஆற்றுகை

## சாவகச்சேரி வைத்தியசாலையில் நடவடிக்கை

சாவகச்சேரி, ஜூன் 15

குடும்ப வன்முறையால் சிகிச்சை பெற வரும் பெண்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் ஆற்றகைப்படுத்தல் சிகிச்சைகள் சாவகச்சேரி வைத்திய சாலையில் வழங்கப்படுகின் றன.

> ஆற்றுகைப்படுத்தலும், உளநல ஆலோசனைகளும் 15 தினங்களுக்கு ஒருமுறை உளநல மருத்துவர் பெண்கள் அபிவிருத்திக்குப் பொறுப்பான மாவட்ட இணைப்பாளர் ஆகியோரால் வழங்கப்படுகின்றன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெறவரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அவ்வாறு பாதிக்கப்பட்டு வரும் பெண்களின் குடும்பத்தினருக்கு உளநல மருத்துவ நிபுணரின் பரிந்துரைக்கமைய் ஆற்றுகைப் படுத்தல் சிகிச்சைகள் வழங்கப் படுகின்றன. குறிப்பாகப் பாதிக்கப் பட்ட பெண்களின் கணவர்களிடம், மனைவிகள் மீதான தாக்குதலுக்கான அடிப்படைப் பிரச்சினைகளைக் கண்டறியும் ஆற்றுகைச் சிகிச்சை வழங்கப்படுகின்றது.

குடும்ப வன்முறைகளில் கணவர்களால் மனைவிகள் தாக்கப்படும் சம்பவங்களே அதிகளவில் பதிவாகியுள்ளன. சிகிச்சைக்கு வரும் பெண்ணின் சம்மதத்துடன் கணவர் வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டு வைத்திய ஆலோசனைகளும், ஆற்றுகைகளும் வைத்திய கலாநிதி சிவயோகன் தலைமையிலான வைத்தியர் குழுவால் வழங்கப்படுகின்றன.

ஆற்றுகைப்படுத்தலும், உளநல ஆலோசனைகளும் 15 தினங்களுக்கு ஒருமுறை உளநல மருத்துவர் பெண்கள் அபிவிருத்திக்குப் பொறுப்பான மாவட்ட இணைப்பாளர் ஆகியோரால் வழங்கப்படுகின்றன.

குடும்ப வன்முறைக்கு மதுப் பாவனை காரணம் என்று கண்டறியப்படின் குறிப்பிட்ட நபரை குடிவெறுப்பு நிலையத்தில் தங்கவைத்து சிகிச்சை வழங்கவும், அவரது சிகிச்சைக் காலத்தில் குடும்பத்துக்குத் தேவையான உதவிகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அடிக்கடி கணவனால் தாக்கப்படும் இளம் வயதுப் பெண்கள் நாளடைவில் மன உளைச்சலுக்கு ஆளாகி, மனநோயாளியாக மாறக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அவற்றைக் கருத்திற் கொண்டு குடும்பத்தினருக்கும் உளநல மருத்துவ ஆலோசனைகள் வழங்கப் படுகின்றன. (ற-ஐ-9)

# அறிவித்தலின்றி தொழிலாளிகளின் சம்பளத்தில் இடர் நிதி சேகரிப்பு

## தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 15

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாண சாலையில் கடமையாற்றும் தொழிலாளிகளின் மே மாத சம்பளப் பட்டியிலிலிருந்து அறிவித்தல் எதுவுமின்றி 500 ரூபா கழிக்கப் பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

ஆயினும் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த யாழ். சாலை முகாமையாளர் இது அப்பட்டமான பொய் என்று குறிப்பிட்டார்.

இதுகுறித்து அந்தச் சங்கம் தெரிவித்துள்ளதாவது–

ஊழியர்களின் சம்பளப்பட்டியிலிலிருந்து 500 ரூபா கழிக்கப் பட்டது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் வினவிய போது இடர்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக இந்த நிதி கழிக்கப்பட்டது என்று தெரிவித்தனர்.

இடர்களில் பாதிக்கப்பட்ட எமது உறவுகளைக் கைதூக்கி விடுவது மனிதநேயப் பண்பாகும். ஆயினும் ஊழியர்களிடம் அனுமதி பெறாது இரகசியமாகவே பணத்தை அபகரித்து உதவுவது எந்த வகையில் நியாயம்?. இந்தச் செயலுக்கு அனுமதி அளித்த குறித்த அதிகாரியின் செயற்பாடானது, சுய நலம்கருதியும், தென்னிலங்கைக் கட்சி அரசியல்வாதிகளின் செல்வாக்கைமேலும் உயர்த்தி, தாங்கள் உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்ளவே செய்யப்படும்வேலை என நாங்கள் கருதுகின்றோம்.

இதற்கு முன்பும் இவ்வாறான சம்பவம் ஒன்று நடைபெற்று, உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைக்காக உயர் அதிகாரிகளிடம் முறையிட எத்தனித்ததன் காரணமாக, பணம் திரும்ப ஊழியர்களிடம் வழங்கப்பட்டது– என்றனர்.

தமிழ்த்தேசியப் போக்குவரத்து ஊழியர் சங்கம் எனப்படும் சங்கம் எங்குமே பதிவு செய்யப்படாத சங்கமாகும். இவர்கள் தனிப்பட்ட பகையைத் தீர்த்துக் கொள்ளும் முகமாகத் தேவையில்லாத செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இடர்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக பணம் அறவிடப்படுவது தொடர்பாக, ஏற்கனவே ஊழியர்களிடம் நாம் தெரிவித்திருந்தோம். அவர்களிடம் இருந்து எந்த விதமான எதிர்ப்புகளும் வரவில்லை.– என்று யாழ். சாலை முகாமையாளர் குறிப்பிட்டார். (ற-ஐ-ரி)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்த ஆண்டு அதிகரித்துள்ளது

## சுற்றுலா மேம்பாடுகள் அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

2015ஆம் ஆண்டின் மே மாதத்தில் இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு நோக்கும் போது கடந்த மே மாதத்தில் வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10.1 வீதமாக அதிகரித்துள்ளது என்று இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாடுகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதத்தில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 44 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டில் மே மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 529 ஆகும்.

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 18.4 வீதத்தால் உயர்வடைந்துள்ளது. மேற்படி காலவரையறைக்குள் வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 8 லட்சத்து 46 ஆயிரத்து 229 பேர் எனச் சுற்றுலா மேம்பாடுகள் அதிகார சபையின் தரவுகள் தெரிவித்தன. கடந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில் வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையானது 7 லட்சத்து 14 ஆயிரத்து 584ஆகும்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மேன் மேலும் அதிகரிக்கப்பதற்காக இலங்கைச் சுற்றுலா மேம்பாடுகள் அதிகாரசபை ஏராளமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

# விதிமுறைகளை தொடர்ந்து மீறிய சாரதிக்கு 6 மாத சிறை

யாழ்ப்பாணம், ஜூன் 15

பலதடவைகள் போக்குவரத்து விதிமுறையை மீறி, மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்தது மல்லாகம் நீதிமன்று.

புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த சாரதி ஒருவருக்கே அபராதம் எதுவுமின்றி சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

குறித்த நபருக்கு எதிராக ஏற்கனவே மூன்று குற்றச்சாட்டுக்கள் மல்லாகம் நீதிமன்றில் இருந்துள்ளன. மூன்று தடவைகளும் அபராதம் விதிக்கப்பட்டிருந்தது. நீதிமன்றால் அவர் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த நபர் மீண்டும், எந்தவித பத்திரங்களும் இன்றி அபாயகரமான முறையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரை மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சனிடம் முற்படுத்திய போது, குற்றம் நிரூபிக்கப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ற-ஐ-4,107)

# கசிப்பு காய்ச்சுவதை நிறுத்தாவிடில் அரச உதவி திட்டம் நிறுத்தப்படும்

## தர்மபுரம் பொலிஸார் அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 15

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கசிப்பு உற்பத்தி செய்பவர்கள் எதிர்வரும் 5 நாள்களுக்குள் நிறுத்த வேண்டும். தவறின் அவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு அரசால் இதுவரை கிடைத்த உதவித் திட்டங்கள் நிறுத்தப்படும். – இவ்வாறு தர்மபுரம் பொலிஸாரும், கிராம சேவையாளரும் இணைந்து அறிவித்துள்ளனர்.



தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறில் நேற்று நடைபெற்ற புகைத்தல் மற்றும் மதுப் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு செயற்றிட்டத்தின்போதே இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மதுப்பாவனை, புகைத்தலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயற்றிட்டத்தில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். மதுப் பாவனை, புகைத்தலுக்கு எதிராகத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க மற்றும் கிராம சேவகர் ஆகியோரை உள்ளடக்கிய குழு கல்லாறு கிராமத்தில் உள்ள கசிப்பு உற்பத்தி செய்பவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களுடைய வீடுகளுக்குச் சென்று எச்சரிக்கை விடுத்தனர்.

கசிப்பு உற்பத்தியை நிறுத்தாதவிடத்து தற்போது வழங்கப்படும் அனைத்து உதவித் திட்டங்களும் நிறுத்தப்படும் என்றும் அறிவுறுத்தினர். (ற-ஐ-21,ரி3)

# கஞ்சா பீடியுடன் கைதான மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கஞ்சா பீடியுடன் கைதான 3 பேருக்கு 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது மல்லாகம் நீதிமன்று.

கட்டுடைப் பகுதியில் உள்ள பற்றைக்குள் கஞ்சா பீடியை நுகர்ந்து கொண்டிருந்த குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப் பட்டிருந்தனர். சிவில் உடையில் சென்ற பொலிஸார் அவர்களைக் கைது செய்திருந்தனர். அவர்களிடம் இருந்து தலா மூன்று கஞ்சா பீடிகளும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

குறித்த மூவரும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-ஐ-4,107)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளற்றுத் திண்டாடும் பூநகரி தெளிகரைக் கிராமத்து மக்கள்

## அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை

**கிளிநொச்சி, ஜூன் 15**
பூநகரி, தெளிகரைக் கிராமத்தில் வாழும் மக்கள் தமக்கு எந்தவித அடிப்படைத் தேவைகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குடிதண்ணீர் உட்பட எந்த ஒரு அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கும் அவர்கள், குறித்த வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி-பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பூநகரி 4 ஆம் கட்டையில் அமைந்துள்ளது தெளிகரைக் கிராமம். 140க்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட பூநகரி தெளிகரைக் கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. இந்தக் கிராமத்தில் வாழும் அனைவரும் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்குப் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமது கிராம நிலைமை குறித்துக் கருத்துத் தெரிவித்த மக்கள்- கடந்த அரசின் காலத்தில் இந்தக் கிராமத்திலுள்ள 50 குடும்பங்களுக்கு தலா 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்திய வீடுகள் வழங்கப்பட்டன. ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர்கள் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்திய அரசின் வீட்டுத்திட்டங்களை 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்குள் கட்டி வழங்கியுள்ளனர்.

வீடுகள் முறையாகக் கட்டப்படாத காரணத்தால் மழை காலங்களின்போது கூரையூடாக ஒழுக்கு ஏற்படுகிறது.

**வருமானம்**
இந்தக் கிராமத்தில் உள்ள 39 குடும்பங்கள் போரால் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களாகும். நாளொன்றுக்கு 100 ரூபா வருமானத்தைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத அவல நிலையில் உள்ளனர். ஏனைய குடும்பங்கள் தொழில் வளங்கள் ஏதுமற்ற நிலையில் தூர இடங்களுக்குச் சென்று 450 ரூபாவுக்குக் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்தி வருகின்றன. இங்குள்ள 17 மாணவர்கள் காலை உணவு இல்லாத நிலையிலேயே பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். 77 மாணவர்கள் மிகவும் தொலை தூரத்திலுள்ள பாடசாலைகளுக்கு நடந்தே செல்கின்றனர். அவர்களை மன்னார்- யாழ்ப்பாணம் வீதியால் பயணிக்கும் பஸ்கள் எவையுமே ஏற்றிச் செல்வதில்லை.

**குடி தண்ணீர்**
கிராமத்தில் குடிதண்ணீர் வசதி இல்லை. குடி தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்காகத் தொலை தூரங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. மக்களுக்கான குடிதண்ணீர் வழங்குவதற்குத் தொட்டி அமைக்கின்றோம் என்று கடந்த அரசின் பங்காளியான அரசியல் கட்சி ஒன்று பெருமளவு பணத்தை ஒதுக்கி குடிதண்ணீர்த் தொட்டி அமைத்தது. அந்தத் தொட்டி பூரணப்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது.

**வீதிகள்**
கிராமத்துக்கான உள்ளக வீதிகள் எவையும் திருத்தியமைக்கப்படாததால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

**உணவு**
மக்களின் பிரதான உணவாக பருப்பும் சோறுமே உள்ளது. விதவைக் குடும்பங்கள், ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற சமுர்த்தி உதவித்திட்டங்கள் உட்பட அரசினது உதவித் திட்டங்கள் எவையுமே இது வரை வழங்கப்படவில்லை.

கிராமத்தின் பின்பக்கமாகவுள்ள காட்டுப் புறத்தில், முன்னைய அரசின் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு எனக் கூறிப் பல கோடி ரூபா நிதியைச் செலவழித்துக் கட்டப்பட்ட கட்டடம் ஒன்று இன்று வரை பயன்படுத்தப்படாத நிலையில் பற்றைமண்டிக் காணப்படுகின்றது.

தற்போதுள்ள நல்லாட்சிக்கான அரசு, இந்தக் கிராமத்து மக்களது வறுமை நிலையைக் கருத்திற் கொண்டு குறித்த கட்டடத்தில் வருமானத்தைத் தரக்கூடிய கைத்தொழிற்சாலை ஒன்றை அமைத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவ வேண்டும். - என்றனர்.

இது தொடர்பாகக் கேட்டபோது-

பூநகரி பிரதேசத்தில் 400க்கும் அதிகமான வீதிகள் இன்னும் திருத்தம் செய்யப்படவில்லை. நிதி இன்மையே அதற்குக் காரணம். மாணவர்களுக்காக ஒரே ஒரு பஸ் சேவையே இடம்பெறுகின்றது.

கிராமத்தில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் குடி தண்ணீர்த் தாங்கி முழுமையடையாத விடயம் எனக்குத் தெரியாது. அதைத் தெரியப்படுத்தியிருந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருப்பேன். இப்போது அது தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றேன்.

இந்திய வீட்டுத்திட்டத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்தும், கிராமத்தின் பின்புறம் அமைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படும் கட்டடம் குறித்தும் நேரில் சென்று ஆராய்கின்றேன். மக்களுடைய பிரச்சினைகளை அவர்களாக முன்வந்து தெரிவித்தால் முடியுமான வரை துரிதமாக நடவடிக்கைகள் எடுக்க முடியும் - என்று பூநகரிப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

(ற-ஜ-4,21,426)

---

# பல்லசுட்டி கிராமம் ஒத்துழைத்தால் குடிதண்ணீர் விநியோகிக்க முடியும்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
பல்லசுட்டிக் கிராம மக்கள் பிரதேச செயலகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினால், மீண்டும் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் - இவ்வாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் உ.யசோதா தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

பல்லசுட்டிக் கிராமத்தில் முன்னர் இராணுவத்தால் கட்டப்பட்ட வீடுகளுக்குக் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். சாந்தை குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில் இருந்து விஸ்தரிப்பு வழங்கப்பட வேண்டும் என முன்னாள் ஆளுநரின் கோரிக்கைக்கு அமைவாக, தேசிய நீர்வழங்கல் சபையின் யாழ். அலுவலகம் ஊடாக விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கான கிணறு பண்டத்தரிப்பில் தனிநபர் ஒருவரால் வழங்கப்பட்டது. சாந்தை மக்களின் குடிதண்ணீர்த் தேவைக்கு முன்னெடுக்கப்பட்டு அதன் பாவனையாளர் சங்கத்திடம் வழங்கப்பட்டது.

குடிதண்ணீர் பெறுவதற்கு ஒரு தொகைப் பணம் செலுத்தப்பட வேண்டும் என்பது நியதி. ஆயினும் பணம் செலுத்துவது தொடர்பில் எங்களுக்கு எதுவும் தெரியாது. பணம் என்றால் வேண்டாம் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பிரதேச சபையின் கோரிக்கைக்கு இணங்கி ஒத்துழைப்புத் தருவார்களாயின், மீண்டும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

> பல்லசுட்டிக் கிராமத்தில் முன்னர் இராணுவத்தால் கட்டப்பட்ட வீடுகளுக்குக் குடி தண்ணீர் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தோம். சாந்தை குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில் இருந்து விஸ்தரிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற முன்னாள் ஆளுநரின் கோரிக்கைக்கு அமைவாக, தேசிய நீர்வழங்கல் சபையின் யாழ். அலுவலகம் ஊடாக விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அதுமட்டுமன்றிப் பனிப்புலம் கிராமத்துக்குக் குடிதண்ணீர் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. ஆனால் அந்தக் கிராமத்துக்குக் குடிதண்ணீர் வழங்க முடியாத நிலை உள்ளது. வலி.தென்மேற்கு வட[illegible] கிராமத்தில் உள்ள குடி[illegible] கிணறுகளில் கல்சியம் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் தமக்கும் குடிதண்ணீர் வழங்குமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டனர். யாழ். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அறிக்கையூடாக பரிசீலனை செய்யப்பட்டு குடிதண்ணீர் வழங்க முடிவெடுக்கப்படும்.- என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரி அன்ரூ பிரவீன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் க.சபாநாயகம், சாந்தை குடிதண்ணீர் பாவனையாளர் சங்க அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-ரி, 50)

---

# திருடச் சென்றவர் அலைபேசியை வீட்டில் தவற விட்டுத் தப்பியோட்டம்

## அங்கிருந்தோர் சத்தமிட்டதால்

யாழ்ப்பாணம், ஜூன் 15
வீட்டு வளவுக்குள் நுழைந்த திருடன், தனது அலைபேசியிலிருந்த டோர்ச்லைட்டை அடித்தவாறு யன்னலின் உள்ளே கையை விட்டுள்ளார். வீட்டில் இருந்தவர்கள் சத்தம் போடவே அலைபேசியை வீட்டுக்குள் வீழ்த்தி விட்டுத் தப்பிவிட்டார்.

அவ்வாறு விழுந்த அலைபேசியைக் கொண்டு அந்த அலைபேசியின் உரிமையாளர் என்று கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இணுவில் சிங்கத்தின் கலட்டிப் பகுதியில் நேற்று முன்தினமிரவு நடந்துள்ளது.

கந்தரோடை விகாரையடியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டின் உரிமையாளர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ற-ஜ-4,107)

---

# தென்னிந்தியச் சிற்பிகள் நால்வர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 15
வைரவர் ஆலயம் ஒன்றில் சிற்ப வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தென்னிந்திய சிற்பிகள் நால்வர் மீது அலவாங்கால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எல்.துஸ் மந்த தெரிவித்தார்.

இணுவிலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இணுவில், சுதுமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாடு மாநிலம், நாகபட்டினம் மாவட்டத்தில் இருந்து வந்த நான்கு கட்ட சிற்பிகள் இணுவிலில் உள்ள கோயில் ஒன்றில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் கடந்த 5 ஆம் திகதி இரவு 8.30 அளவில் இவர்கள் மேல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதலில் காயமடைந்த 4 பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

(ற-ஜ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுக்கான்மோட்டைக் கிராமம் ஆறு ஆண்டுகளாக இருளில்

## நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 15
அனிஞ்சியன்குளம், சுங்கான்மோட்டைக் கிராம இந்தியன் வீட்டுத் திட்ட மக்கள் தமக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட வில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளனர். குடியிருப்புக்கான போக்குவரத்து வசதிகளும் செய்து தரப்படவில்லை என்றும் விசனம் தெரிவித்தனர்.



முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டது அனிஞ்சியன்குளம். அதன் கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்டது சுக்கான்மோட்டைக் கிராமம்.

அங்கு 25க்கும் அதிகமான குடும்பங்கள் வசிக்கின்றன. மீள்குடியமர்வு இடம்பெற்ற போது காணி அற்றவர்களுக்கு உதவி அரச அதிபர் ஊடாக ஒரு ஏக்கர் வீதம் காணி வழங்கப்பட்டு இந்தியன் வீட்டுத் திட்டமும் வழங்கப்பட்டது. தற்போது 6 ஆண்டுகள் கழிந்துள்ளபோதும் தமக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை என்று அங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

''மின்சார வசதி இல்லை. குண்டும் குழியுமாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் வீதிகள் உள்ளன. மழை காலத்தில் வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கும். வீதிகளில் பற்றைகள், பெரு மரங்கள் மூடி வளர்ந்துள்ளன. வீதிகளைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்"- என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வீதிகள் ஒரு சில வாரங்களில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. அதன் போது குறித்த வீதியும் புனரமைக்கப்படும். மக்களின் தேவைகள் நிறைவு செய்து கொடுக்கப்படும்" - என்று தெரிவித்தார் துணுக்காய் பிரதேச சபைச் செயலாளர்.

(ந-ஐ-21-415)

## நிறுவுநர் விழாவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூன் 15
சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் நிறுவுநர் விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ந-ஐ-ரி)


## வவுனியா வடக்குப் பிரதேச சபை நெடுங்கேணி

### அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2016

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01ஆம் திகதி முதல் வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், வடமாகாண பிரதம செயலாளரின் அனுமதிக்கமையவும் உள்ளூராட்சி ஆணையாளர் வடக்கு மாகாணம் அவர்களின் NP14/1/ET/UN Sche/Appoint /15/vavu(northps) 18.05.2016 திகதிய கடிதத்திற்கு அமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சேவை நிபந்தனைகள்

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள்,அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

அடிப்படைத் தகைமைகள்

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களை கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி கடந்த 05 வருடங்கள் வவுனியா வடக்குப் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).
5. தொழில்நுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயல்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் முறை

அங்கீகரிக்கப்பட்ட நேர்முக பரீட்சை குழுவினால் நேர்முக பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முக பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை

1. வவுனியா வடக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் ரூபா 100.00 செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்ப படிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு **'செயலாளர் , வவுனியா வடக்கு பிரதேச சபை , நெடுங்கேணி'** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின்பெயர்,தெளிவாக எழுதப்பட வேண்டும்.
5. ஆட்சேரப்பு திட்ட விதிகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்துக்கு முன்னராகவோ , நியமனத்துக்குப் பின்னராகவோ, நியமனத்தின் போதோ அல்லது விண்ணப்பத்தில் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானது என தெரிய வரும் எச்சந்தர்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் வழங்கப்பட்டிருப்பின் நியமனம் உடனடியாக முடிவுறுத்தப்படும்.
6. விண்ணப்பங்கள் யாவும் 2016.07.07ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக எமக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதவிகள் பற்றிய விடயங்கள்

| இல | பதவிப்பெயர் | தரம் | வெற்றிடம் |
|---|---|---|---|
| 01. | வேலை / வெளிக்கள தொழிலாளி | III | 01 |
| 02 | காவலாளி | III | 02 |

கல்வித்தகைமைகள்

1. கல்வி பொது சாதாரண தர பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அத்துடன் மேலதிக தகைமைகள், அனுபவம் என்பன விசேட தகைமைகளாக கருத்திற் கொள்ளப்படும்.
2. மேற்குறிப்பிட்ட பதவிகளில் 1ஆம் இலக்க பதவிக்குரிய கல்வித்தகைமையுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் தரம் 8 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்

2016.02.25ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.03/2016 இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-1-2016 ஆகும்.

**க.சத்தியசீலன்,**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி.**

(ச/21890)
(11,17,18)


# ஆடு பிடிக்க முயன்றவர்களை ஊர் சேர்ந்து பிடித்து கவனிப்பு

## மறவன்புலோவில் சம்பவம்

சாவகச்சேரி, ஜூன் 15
வயலுக்குள் மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த ஆடுகளைப் பிடிக்க முற்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படும் இருவர் ஊரவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். அவர்களைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதற்காக ஓட்டோவில் கொண்டு சென்றபோது அதிலிருந்து பாய்ந்து தப்ப முயன்றுள்ளனர். இதனால் வீதியில் வீழ்ந்து அவர்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மற்றையவர் சாவகச்சேரி பொலிஸாரின் பாதுகாப்புடன், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் தென்மராட்சி தெற்கு மறவன்புலோவில் இடம்பெற்றது.

உரும்பிராயைச் சேர்ந்த இருவர் மறவன்புலோவில் உள்ள நண்பர் வீட்டுக்கு ஓட்டோவில் சென்றனர். அங்கிருந்து போதையில் புறப்பட்டவர்கள் இவரும் வரும்வழியில் வயலுக்குள் ஆடுகள் மேய்ச்சலுக்கு நின்றதைக் கண்டு அவற்றைப் பிடிக்க எத்தனித்துள்ளனர்.

இவர்கள் வயலுக்குள் ஆடுகளைத் துரத்துவதைக் கண்ட ஊரமக்கள் திரண்டு, அவர்களைச் சுற்றிவளைத்துப் பிடித்துள்ளனர். முறையான கவனிப்பின் பின்னர் ஓட்டோவில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரும்போதே இருவரும் அதிலிருந்து பாய்ந்து தப்பியோட முற்பட்டுள்ளனர்.

ஓட்டோவிலிருந்த பாய்ந்ததில் முழங்கால்கள் மற்றும் கை போன்ற இடங்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-ஐ-4,9)

## ஏகாதசித் தீர்த்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 15
அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம், ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை ஏகாதசித் தீர்த்தம் நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். முற்பகல் 9 மணிக்கு சமயச் சொற்பொழிவு நடைபெறும்.

தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று, சுவாமி வீதியுலா இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-ஐ-160)

## கணவனின் தாக்குதலால் காது செவிடான பெண்

சாவகச்சேரி, ஜூன் 15
கணவன் அடித்ததில் தனது காது கேட்கும் சக்தியை இழந்துள்ளது என்று அவரது மனைவி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்றது.

கணவனின் தாக்குதலுக்கு இலக்கான மனைவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக் கப்பட்டு வரும் நிலையில், காது கேட்கும் தன்மை யைத் தான் இழந்து வருவதாகப் பாதிக் கப்பட்ட பெண் தெரிவித்தார்.

அதனால் குறித்த பெண் காதுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

(ந-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போர் நடத்தியோரை சந்தித்து பேசவுள்ளார் மங்கள

## ஐ.நா. சென்று உரையாற்ற முன்னதாக



கொழும்பு, ஜூன் 15
இறுதிப் போரின்போது கடமையாற்றிய இராணுவ உயரதிகாரிகள், முக்கிய உறுப்பினர்கள் மற்றும் முப்படைகளின் தளபதிகளுடன் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழு முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்ஆணைக்குழுவின்32ஆவது கூட்டத் தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ள நிலையில், இலங்கை விவகாரம் தொடர்பில் 29ஆம் திகதி வாய்மூல அறிக்கை வெளியிடப்படவுள்ளது. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உள்ளக விசாரணைப்பொறிமுறைதொடர்பில் உரையாற்றவுள்ளார்.
இந்தநிலையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் மிக்கதாக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் உட்பட முக்கிய நபர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கையில் நடைபெற்ற போரில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்று சர்வதேச அமைப்புக்களும், சிவில் அமைப்புக்களும் குற்றச்சாட்டி வருகின்றன. இது தொடர்பில் சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட விசாரணைப் பொறிமுறையூடாக விசாரிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. ஆயினும் உள்ளகவிசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை என்று இலங்கை அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. (ற-ஐ-4)

# கடந்தாண்டு சிறைகளில் 82 கைதிகள் உயிரிழப்பு

## சிறைச்சாலை திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15
கடந்த ஆண்டில் மட்டும் 82 பேர் சிறைச்சாலைகளில் உயிரிழந்துள்ளனர். இவர்கள் நீதிமன்றங்களால் தீர்ப்பு வழங்கப்பட்டவர்கள் மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் என்று சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை கடந்த ஆண்டு 152 சிறைகளில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர். இவை கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்றவையாகும்.
சிறைச்சாலைத் திணைக்களத்தின் கடந்த ஆண்டு அறிக்கையிலேயே இந்தத் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
உயிரிழந்த 82 பேரில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 48 பெரும், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 32 பேரும் அடங்குகின்றனர். இவர்களில் 4 பெண் கைதிகளும் உள்ளடங்குகின்றனர்.
தப்பிச் சென்றுள்ளோரில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 127 பேரும், விளக்க மறி யலில் இருந்த 27 பேரும் தப் பிச் சென்றுள்ளனர்.
அதேவேளை, நாட்டில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட646 பேர் நாட்டின் வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 26 பேர் பெண்களாவர்.
வெளிநாட்டுக் கைதிகள் 182 பேர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.
2015ஆம் அண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு 554 கைதிகளும், வெசாக் போயாவை முன்னிட்டு 492 கைதிகளும் பாப்பரசரின் இலங்கைப் பயணத்தை முன்னிட்டு 619 பேரும், நத்தார் தினத்தை முன்னிட்டு 553 கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
தண்டனைக் காலம் முடிவடைந்த 7 ஆயிரத்து 168 கைதிகள் உள்ளடங்கலாக மொத்தம் 9 ஆயிரத்து 386 கைதி கள் கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-ஐ-4)

## எம்.பிக்களுக்கு இரு சாரதிகள்

கொழும்பு, ஜூன் 15
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரு சாரதிகளை நியமிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசால் ஒரு உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படுவதுடன், சாரதி ஒருவரும் நியமிக்கப்படுவார். இந்த நிலையில் மேலுமொரு சாரதியை நிய மிக்க அரசு தீர்மானித்துள்ளது என்று தெரிய வருகின்றது.
எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்த வரப்பிரசாதம் முதலில் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-22)

# சலாவவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.50,000

கொழும்பு, ஜூன் 15
கொஸ்கம, சலாவ ஆயுதக் கிடங்கு வெடிப்பால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.
சேதமடைந்த வீடுகளை நிர்மணித்துக் கொடுக்கும் வரையிலும், மாதாந்தம் 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அரசு தீர்மானித்திருந்தது. அவற்றை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பித்துள்ளன.
ஆயுதக் கிடங்கு வெடிப்பில் முகாமைச் சுற்றியிருந்த 300 வீடுகள் முற்றாகச் சோதமடைந்துள்ளன. 419 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. முழுமையாக சேதமடைந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்றும், பகுதியாகச் சேதமடைந்தவை திருத்திக் கொடுக்கப்படும் என்றும் அரசு தெரிவித்திருந்தது. மின் இணைப்புக்கள், தொலைபேசி இணைப்புக்களும் சேதமடைந்துள்ள நிலையில் மின் கட்டணத்தைச் செலுத்தாத குடும்பங்கள் அவற்றை தவணை முறையில் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சுதேச அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.
அதேவேளை சலாவ முகாமைச் சுற்றிச் சிதறியுள்ள வெடிபொருள் பாகங்களைச் சேகரிக்கும் பணிகள் தொடந்து நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. பற்றைக்காடுகள், சதுப்பு நிலங்களில் சிதறிக் கிடக்கும் வெடிபொருள் பாகங்களைச் சேகரிப்பது மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-4)

# நாட்டில் 817 பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வசதிகள் இல்லை

கொழும்பு, ஜூன் 15
நாட்டில் உள்ள 817 பாடசாலைகளில் குடிதண்ணீர் வசதிகள் இல்லை. 431 பாடசாலைகளுக்கு மின்சார வசதிகள் இல்லை என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.
இலங்கையில் உள்ள பாடசாலைகளின் மிகச் சரியான புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையிலேயே இந்த விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
இலங்கையில் 10 ஆயிரத்து 161 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 352 தேசியப் பாடசாலைகளாகும். 9 ஆயிரத்து 809 பாடசாலைகள் மாகாணசபைகளினதாகும்.
42 லட்சத்து 98 ஆயிரத்து 345 மாணவர்கள் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 50 ஆயிரத்து 95 ஆகும்.
6 ஆயிரத்து 591 பாடசாலைகளுக்கு தொலைபேசி வசதிகள் இல்லை. மின் இணைப்பு வழங்கப்படாது 91 பாடசாலைகள் உள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ற-ஐ-22)

## சட்ட விரோத முறையில் மீன் பிடித்தவர்கள் கைது

கொழும்பு, ஜூன் 15
சட்டவிரோதமான முறையில் மீன்டியில் ஈடுபட்ட 23 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
சம்பூர் கடற்பகுதியில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி இவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.
மூன்று பைபர் படகுகள், 3 தங்கூசி வலைகள் மற்றும் சில மீன்பிடி உபகரணங்கள் கைப் பற்றப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மீன்பிடிப் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-4)

# வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களைக் குறைக்கவேண்டும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 15
வடக்கு – கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டும். ஆயினும்அனைத்து முகாம்களையும் அகற்ற வேண்டும் என்று கோருவது ஏற்றுக்கொள்ள முடியாதது.
இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.
கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
இராணுவம் பொதுமக்களின் சொத்துக்களைகையகப்படுத்திக்கொண்டும், வர்த்தகம் செய்து கொண்டும் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுமக்களின் சொத்துக்கள் அனைத்தும் விடுவிக்கப்பட்டு, உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் – என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஐ-4)

## தலைக் கவசங்களுக்கு எஸ்.எல்.எஸ். தர நிர்ணயம்

கொழும்பு, ஜூன் 15
மோட்டார் சைக்கிளோட்டிகள் அணியும் தலைக் கவசங்களுக்கு செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் எஸ்.எல்.எஸ். தரத்தை அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு முடிவு எடுத்துள்ளது.
செப்ரெம்பர் மாதம் முதல் இறக்குமதி செய்யப்படும் தலைக்கவசங்கள் எஸ்.எல்.எஸ். 517 தரத்தை உடையனவாக இருக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
தற்போது பயன்படுத்தப்படும் தலைக் கவசங்கள் உரிய தரங்களில் இல்லாதுள்ளன. அதனால் விபத்துக்களின் உயிரிழப்புக்கள் அதிகரித்துள்ளன. அதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்புடன் நாட்டுக்கு சேவைகளை வழங்குவோம்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15
மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்காக அல்லாது, நாட்டுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் சேவைகளை வழங்குவோம். இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



தற்போதைய அரசின் சர்வதேச தொடர்புகளைப் பிழையாகச் சித்திரித்து வரும் அரசியல் எதிர்தரப் பினர், உலக வல்லரசு நாடுகள் நாட்டை ஆக்கிரமிப்பதற்கு அரசு இடமளித்து வருவதாக முன் வைக்கும் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிக்கின்றேன் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.
'பூகோளச் செயற்பாடுகளில் இலங்கை 2015 ஜனவரி முதல் கடந்து வந்த பாதை' என்ற கருப்பொருளில் நேற்று முன்தினம் பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற புலமைத்துவக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் தெரிவித்துள்ளதாவது–
சர்வதேச உறவுகளைப் பலப்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாட்டுக் கொள்கையில் தற்போதைய அரசு மிகவும் தெளிவான நேர்மையான திறந்த ஒரு கொள்கையைப் பின்பற்றுகிறது. எத்தகைய ஒளிவு மறைவுமின்றி, எல்லா அரசுகளுடனும் உள்ள உறவுகளையும் பலப்படுத்துவதே புதிய அரசின் கொள்கை. சர்வதேச மட்டத்தில் எந்த ஒரு அரச தலைவரும், அரசின் நடவடிக்கைகளுக்கு எவ்விதமான அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை. அவர்கள் அனைவரதும் பொது நோக்கம் இலங்கையில் ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் உறுதிப்படுத்துவதைக் காண்பதாகும்.
நல்லிணக்கத்தினதும், நல்லாட்சியினதும் பெறுமதியை எமது நாட்டிலுள்ள சிலர் விளங்கிக் கொள்ளாத காரணத்தால் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. எமது நாட்டின் எதிர்கால இருப்பு, நல்லிணக்கத்தினதும் மற்றும் நல்லாட்சியினதும் பெறுமதியை யதார்த்தமாக்குவதிலுமே தங்கியுள்ளது –என்றார்.
(ந–ஐ–4)

# மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனே

## அமைச்சர் கிரியெல்ல தெரிஷவிப்பு

கொழும்பு, ஜூன் 15
மத்திய வங்கி ஆளுநராகத் தொடர்ந்தும் அர்ஜூன் மகேந்திரன் செயற்படுவார் என்று நெடுஞ்சாலைகள் மற்றும் உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மத்திய வங்கி ஆளுநர் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள போதும் அவற்றை நிரூபிக்க முடியாது. அர்ஜூன் மகேந்திரனே எதிர்காலத்தில் ஆளுநர் பதவியில் நீடிப்பார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந–ஐ–4)

# பொலிஸாரின் வாகனத்தில் குழந்தை பிரசவித்த பெண்

கொழும்பு, ஜூன் 15
கொழும்பு – கட்டுநாயக்க அதிவேகப் பாதையில் பொலிஸ் வாகனம் ஒன்றில் பெண் ஒருவர் குழந்தையைப் பிரசவித்துள்ளார்.
சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த தம்பதிகள் அதிவேகப் பாதையில் தனியார் மருத்துவமனை ஒன்றுக்குச் சென்றுள்ளனர். அதன்போது குறித்த பெண்ணுக்குப் பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. அதையடுத்து கணவர் வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தியுள்ளார். அதனால் மோட்டார் சைக்கிளும் பழுதடைந்துள்ளது. வீதியில் நிர்க்கதியாக நின்றவர்களை அவதானித்த பொலிஸார் தமது வாகனத்தில் ஏற்றிக் குறித்த பெண்ணைக் கொழும்புக்குக் கொண்டு சென்றுள்ளனர். செல்லும்வழியிலேயே குறித்த பெண் குழந்தையைப் பிரசவித்தார். தற்போது குறித்த பெண்ணும், குழந்தையும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ந–ஐ–4)

# நாடாளுமன்றக் கட்டடத்தை புதுப்பிக்க ரூ.50 கோடி தேவை

கொழும்பு, ஜூன் 15
நாடாளுமன்றக் கட்டடம் மற்றும் உபகரணங்களைப் புதுப்பிப்பதற்கு 50 கோடி ரூபா தேவைப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் யோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.
நாடாளுமன்றில் தற்போது பயன்பாட்டில் உள்ள ஒலி வாங்கிகள் (மைக்ரோ போன்கள்) முறைமை, பரிவர்த்தனைச் செயற்பாடுகள் உள்ளிட்ட பெருமளவிலான அடிப்படை வசதிகள் 15 ஆண்டுகளை விடப் பழைமையானவைகளாகும்.
நாடாளுமன்ற உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் கழிப்பறைகள் தவிர்ந்த ஏனைய பெருமளவிலான கழிப்பறைகள் புதுப்பிக்க வேண்டிய நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
நாடாளுமன்றக் கட்டடத்தை முழுமையாகவே புதுப்பிக்க வேண்டியுள்ளது என்று நாடாளுமன்றத்தின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ந–ஐ–22)

# உள்ளூராட்சித் தேர்தலுக்காக தலைகீழாக நின்று போராட்டம்

கொழும்பு, ஜூன் 15
உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், அரசு உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும். என்று கோரிப் பிரதேசசபை உறுப்பினர்கள் 2 பேர் தலைகீழாக நின்று நேற்றுப் பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்த ஆர்ப்பாட்டம் கினிகத்தேன பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக நடந்துள்ளது. அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எலப்பிரிய நந்தராஜ் தலைமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதே இவ்வாறு தலைகீழாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.



உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ளது. எனினும் இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை. அதனால் பிரதேச சபைகள் செயலிழந்து காணப்படுகின்றன. நாட்டில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நகர சபை மற்றும் பிரதேச சபைகளால் உதவ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உடனடியாக அரசு தேர்தலை நடத்த வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத் தனர். (ந–ஐ–4)

# விசேட அனுமதிப் பத்திரம் பஸ் சாரதிகளுக்கு கட்டாயம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15
போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடும் பஸ் சாரதிகளுக்கு விசேட அனுமதிப் பத்திரம் ஒன்று வழங்கப்படவுள்ளது என்று போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்தார்.
அடுத்த மாதம் வழங்கப்படவுள்ள இந்த அனுமதிப் பத்திரங்கள் இல்லாது, போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் அனைத்துச் சாரதிகளும் இந்த அனுமதிப் பத்திரத்தைப் பெறுவது கட்டாயமானது என்றும் அவர் தெரிவித்தார். (ந–ஐ–4)

# வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பணம் மோசடி செய்தவர் கைது

கொழும்பு, ஜூன் 15
வேலை பெற்றுத் தருவதாகக் கூறி, பணம் வாங்கி இளைஞர், யுவதிகளை ஏமாற்றிய ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த நபர் தன்னை ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரிபவர் என்று அறிமுகப்படுத்தியே பண மோசடி செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது.
குறித்த நபர் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை இவ்வாறு ஏமாற்றிப் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. கந்தளாய் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் 26 வயதுடையவர் என்று கூறப்படுகின்றது.
இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந–ஐ–4)

# ஊடகவியலாளர் மீது தாக்குதல்; இருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 15
ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டுக் குழுவின் அமைப்பாளரும், இணைய ஊடகவியலாளர்கள் சங்கத் தலைவரும், ஊடகவியலாளருமான ப்ரடி கமகே மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட் 2 பேருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
குறித்த 2 பேரும் நீர்கொழும்பு பிரதான நீதிவான் ருச்சிர வெலிவத்தவிடம் நேற்று முற்படுத்தப்பட்டனர். அதன்போதே அவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.
குறித்த 2 பேரும் நீர்கொழும்பு பொலிஸாரால் கடந்த 4ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர். (ந–ஐ–4)

# தொழிற்சங்க நடவடிக்கையால் 3 லட்சம் தபால் பொதிகள் தேக்கம்

கொழும்பு, ஜூன் 15
அஞ்சல் பணியாளர்கள் முன்னெடுக்கும் தொழிற்சங்க நடவடிக்கையால் 3 லட்சம் தபால் பொதிகள் கொழும்பு மத்திய நிலையத்தில் தேங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
அஞ்சல் பணியாளர்களின் ஒன்றிணைந்த சேவைப் பிரிவு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.
கொடுப்பனவு முரண்பாடு உட்பட 14 கோரிக்கைகளை முன் வைத்து தொழிற்சங்கப் போராட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் முன்னெடுக்கப்படுகின்றது.
தமது பிரச்சினைக்கு முறையான தீர்வு கிடைக்காத பட்சத்தில் போராட்டம் தொடரும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அஞ்சல் சேவை அமைச்சர் அப்துல்ஹலீம் மொஹமட் ஹசிம் – ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ந–ஐ–4)

# அரச ஊழியர் சம்பளத்தை இரு மடங்காக்கத் திட்டம்!

2020ஆம் ஆண்டு அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை இரு மடங்காக அதிகரிப்பதற்கு அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
அரச சேவைத் துறையினரின் அடிப்படைச் சம்பளம் 11 ஆயிரத்து 730 ரூபாவில் இருந்து 24 ஆயிரத்து 230 ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். அரச ஊழியர் தேசிய சம்பளக் கொள்கை தயாரிப்பு துரிதமாக நிறைவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ந–ஐ–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போர்க்குற்ற விசாரணை குறித்து நழுவல் போக்குத்தான் மேலெழுமா?

இலங்கையின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலை நாட்டுவதற்கு, கடந்த செப்ரெம்பர் மாதம், ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 30/1 இலக்கப் பிரேரணையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, அந்த நாட்டு அரசிடம் இருந்து பரந்துபட்ட உபாயம் நிறைந்த செயற்பாடு உடனடியாகத் தேவைப் படுகிறது.

மேற்கண்டவாறு அடித்துக் கூறியுள்ளார், ஐக்கிய நாடுகள், மனித உரிமைகள் சபையின், ஆணையாளர் சையித் அல் ஹுசைன்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின், மனித உரிமைகள் பேரவையின் முப்பத்து இரண்டாவது கூட்டத் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

ஆணையாளர் அல்-ஹுசைன், அங்கு ஆரம்ப உரையை நிகழ்த்தினார். ஐ.நா. மனித உரிமைப் சபையின் நாற்பத்தேழு நாடுகளின் பிரதிநிதிகள் அனைவரும் அவ்வேளை பிரசன்னமாகி இருந்தனர்.

✶ அனைத்து நாடுகளும் சர்வதேச மனித உரிமை விதிமுறைகளை ஏற்று நடக்க வேண்டுமென வலியுறுத்திய அவர், அரசியல் கைதிகள் அனைவரும் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும். நீதிசார் செயற்பாடுகள், எந்த வகை கூட்டல் கழித்தல்களும் இன்றி மேலோங்கி நிற்க வேண்டும்.

✶ நீதிசார் செயற்பாடுகளில், பக்கச் சார்பற்ற நிலையைக் கடைப்பிடிப்பது அத்தியாவசியம்.

✶ சுயாதீன நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் நீதியாக செயற்படுவது அவசியம். அது மட்டும் அன்றி, அந்த நிறுவனங்கள் தமது குரலைத் தடைகள் எதுவும் இன்றி உயர்த்த வல்ல சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

✶ கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் என்பவை எந்த வகையான பிசுறும் இன்றி உயர்ந்து எழுவதற்கான சுதந்திரம் வ்ழங்கப்பட்டாக வேண்டும்.

மேற்கண்ட விதத்தில், சகல உறுப்பு நாடுகளுக்கும் பொதுவாகத் தமது கருத்தை ஊன்றிப் பதிவு செய்த மனித உரிமைகள் சபை ஆணையாளர், மறைமுகமாக இலங்கை அரசுக்கு இவை குறித்து குத்திக்காட்டி வலியுறுத்த முனைந்திருக்கலாம் எனக் கொள்வதில் தப்பில்லை.

உள்ளார்ந்து நோக்கும்போது, எதிர்வரும் இருபத்தொன்பதாம் திகதியன்று, இடம்பெற உள்ள ஆணையாளரின் வாய்மூல அறிக்கையின்போதே--

இலங்கை தொடர்பான, பலப்பல பாதகமான விடயங்கள், விவகாரங்களை, ஆணையாளர் சையித் அல்-ஹுசைன், தொட்டுத் தொட்டு புட்டுக்காட்டுவார் என்று ஐ.நா வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது எனலாம்.

அதேவேளை, மறுபுறத்தில் நல்லாட்சி அரசு எனத் தனக்குத்தானே இலச்சினை பதித்துக் கொண்டு செயற்படும் மைத்திரி-ரணில் அரசு--

- உலக நாடுகளுடன் சுமுகமான உறவைப் பேணி நடப்பதுடன், சர்வதேச மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து நடந்து கொள்ளப்போவதாகத் தன்னை வெளிக்காட்டி வந்த மைத்திரி-ரணில் அரசு--

இது விடயத்தில், எத்தகைய நிலைப்பாட்டைக் கைக்கொள்ளும் என்பதும் கேள்விக்கு உரியதே.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும்போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நிபுணர்களுக்கு இடமளிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என ஜனாதிபதி மைத்திரிபால மீண்டும் ஒருமுறை உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய பின்னணியில், தாம் இலங்கை தொடர்பாக வெளியிடவுள்ள வாய்மூல அறிக்கையில், இலங்கை அரசின் தற்போதைய நிலைப்பாட்டை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் இறுக்கமான நிலையில் கையாளக்கூடுமா என்ற கேள்வி தமிழ் மக்கள் மனதில் தொக்கி நிற்கும் நிலையில்--

கடந்த் பெப்ரவரி மாதத்தில் தாம் மேற்கொண்ட இலங்கைக்கான பயணத்தின்போது, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் போர்க்குற்றம் குறித்த விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவது தொடர்பாக இலங்கை 'அரசே தீர்மானிக்க வேண்டுமென நழுவல் போக்கில் கருத்து வெளியிட்டுச் சென்றமை, இது விவகாரத்தில் தமிழ் மக்களது ஆதங்கம் நிராசையாகிப் போய்விடுமா? என்ற கேள்வியையும் எழுப்பத் தவறவில்லை.

மொத்தத்தில், எதற்கும் பொறுத்திருந்து பார்க்கும் நிலையே தமிழர்களது தலைவிதி என்பதைத் தவிர, வேறெதனைக் கூற இயலும்?

# தமிழர்களின் செல்நெறியில் சிங்களத் தலைமைகளின் வீம்பு

ம.கணபதிப்பிள்ளை

கலிங்க நாட்டைச் சேர்ந்த விஜயனும் அவன் தோழர்களும் துட்டத்தனம் புரிந்த செயல்களுக்காக நாடு கடத்தப்பட்டார்கள். கடத்தப்பட்ட அவர்கள் இலங்கையின் வடபுலத்தை வந்தடைந்து வாழ்வாதாரத்தைப் பெற உள்ளே நுழைந்தனர். அப்போது இந்தப் பிரதேசத்து அரசியாயிருந்த இயக்கப் பெண்ணான குவேனியைச் சந்தித்தனர் - அவளுடன் ஏற் பட்ட உடன்பாடு காரணமாக விஜயன் அவளை மணம் செய்தான். - அவன் வழியில் அவனது தோழர்களும் இயக்கப் பெண்களை மணந்தனர்.

பின்னாளில் அவர்களிடையே வளர்ந்த முரண்பாட்டுத்தன்மையால் அவர்களை ஒதுக்கிவிட்டு, தமிழ் நாட்டில் அப்போது நிலை கொண்டிருந்த பாண்டியருடன் தொடர்பு கொண்டு, தமிழ் பெண்களை வருவித்துத் திருமணம் செய்து வாழ்ந்தனர். இதனால் ஏற்பட்ட சந்ததியே இப்போதைய சிங்கள மக்களின் முன்னோடிகள் என்றும்- இதற்கு முன் இயக்கரோடு ஏற்பட்ட தொடர்பால் தோன்றிய சந்ததியே இலங்கையிலுள்ள வேடர்கள் என்றும், இலங்கையின் வரலாறு பதிவாகியுள்ளது.

### யார் குற்றவாளி?

உலகில் முதலில் தோன்றிய அரசு பாண்டிய அரசே என்பது ஆய்வாளர்களின் எண்ணக்கருவாய் இருக்கிறது. செங்கோலின் மாண்பை அதன் மகிமையை உணர்ந்து, அதை உலகுக்கு உணர்த்தி நின்ற பெருமைக்குரிய அரசு பாண்டிய அரசே. பொய்க்கைப்பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சியில் ஏற்பட்ட நிகழ்வு [illegible]


சேர் பொன். அருணாசலம்

ஆட்சித்திறத்தைப் புடம் போட்டுக் காட்டுவதாய் அமைந்திருக்கிறன.

மிகு சைவத்துறை விளங்க; அறநெறி வசப்பட்ட வாழ்வியலைக் கொண்ட சமூகத்தைச் சேர்ந்த தமிழ்த் தாய்மார்களின் வழிவந்த சிங்கள மக்களின் வாழ்வியல் பண்பாடு சிறப்பாக செம்மையாக இருப்பதை நடைமுறையில் காணமுடிகிறது. வாழ்வியலின் நெறிப்படுத்தும் சமய வழிநிற்கும் அவர்களிடம் மனித நேயம் குடிகொண்டிருப்பதைக்கண்டு வியக்கவும் முடிகின்றது. அவர்களோடு சேர்ந்து வாழும் தமிழ்மக்கள் இதை நன்கறிவர். வழியிலும் தெருவிலும் போக்குவரத்திலும் அவர்கள் நடந்துகொள்ளும் முறையில் பண்பாடு மிளிர்கின்றதைப் பார்க்க முடிகின்றது. இலங்கையின் எந்தப் பாகத்திலும் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதேபோல தமிழர் போற்றும் தமிழ்த் தெய்வங்களும் நாடு முழுவதும் கோயில் கொண்டு அருளாட்சி புரிவதையும் பார்க்கின்றோம். இரு இன மக்களும் வேற்றுமையின்றி இருவேறு தெய்வங்களையும் வழிபடுவதையும்பார்க்கிறோம். இவையெல்லாம் எதைக் குறித்து நிற்கின்றன?

இந்த இரு இனமக்களும் தம்மிடையே குரோதமின்றி, விரோதமின்றிப் பேதமின்றி நெருங்கியும் இணைந்தும் வாழ்ந்திருந்த காலப்பகுதியைப் புடம் போட்டு வெளிப்படுத்தி நிற்பதைக் காட்டுகின்றதல்லவா! இந்த ஒற்றுமைக்கும் ஐக்கியத்துக்கும் வேட்டுவைத்தவர்கள் யார்? குரோத -விரோத விதையை விதைத்து அதை வளர்த்து நின்றவர்கள் யார்? தமிழர்கள் தலைமைத்துவமா? அன்றிச் சிங்களத் தலைமைத்துவமா?

> மிகு சைவத்துறை விளங்க; அறநெறி வசப்பட்ட வாழ்வியலைக் கொண்ட சமூகத்தைச் சேர்ந்த தமிழ்த் தாய்மார்களின் வழிவந்த சிங்கள மக்களின் வாழ்வியல் பண்பாடு சிறப்பாக செம்மையாக இருப்பதை நடை முறையில் காணமுடிகிறது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நாடாளுமன்றச் சூழலில் தமிழர்களின் சிலைகள்**

பிரிட்டனின் குடியேற்ற நாடாக இருந்த இலங்கையை அவர்களது ஆட்சியிலிருந்து மீட்டெடுக்கவேண்டும், ஆட்சியதிகாரம் இலங்கையர் கைக்கு வரவேண்டும் என்று முன்னோடிகளாய்த் திகழ்ந்து உழைத்தவர்கள் தமிழர் தலைமைகளே. காலி முகக் கடற்கரையில் சுதந்திர இலங்கையின் நாடாளும ன்றக் கட்டடத்தின் இருமருங்கிலும் இரு சிலைகள் தமிழன் என்ற அடையாளங்களோடு கம்பீரமாகத் தோற்றமளிப்பதை இன்று நாம் பார்க்கிறோம். அந்தச் சிலைகளை நிறுவியவர்கள் யார்? அடிமைப்பட்டிருந்த இலங்கையை மீட்டெடுக்கத் தேசியரீதியில் சிந்தித்து உழைத்த அவர்கள் மீது சிங்களத் தலைமைகள் வைத்திருந்த நம்பிக்கையும் நன்றியுணர்ச்சியுமே அந்தச் சிலைகள் அங்கு தோற்றம் பெறக் காரணமாக இருந்தன.

பின்னாளில் அச்சிலைக்குரிய சேர்.பொன்னம்பலம் அருணாசலமும் அவர் உடன் பிறப்பான சேர் பொன்னம்பலம் இராமநாதனும் சிங்களத் தலைமைகளில் அப்போது காணப்பட்ட இனவிரோத எண்ணக்கருத்துக்களைக் கண்டு உள்ளம் வெதும்பி நொந்ததுவும் வரலாற்றுப் பதிவாகும்.

சதந்திர இலங்கையின் முதல் நாடாளுமன்ற அவையிலே பல தமிழ் அமைச்சர்கள் இடம்பெற்றிருந்தார்கள். வர்த்தகம் கைத்தொழில் சமூக சேவை போன்ற துறைகளுக்கு அவர்கள் பொறுப்பாய் இருந்தனர்.

அன்றைய தமிழர் தலைமைத்துவம் ஜி.ஜி.பொன்னம்பலத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவரும் தேசிய ரீதியான சிந்தனை படைத்தவராகவே விளங்கினார். வடகிழக்கிலே தமிழர்கள் முடங்கி வாழக்கூடாதென்றும் இலங்கை முழுவதும் பரந்து வாழ வேண்டும் என்பதும் அவரது எண்ணக்கருவாக இருந்தது. அவரிடம் சொல்வன்மை இருந்தது. ஆற்றல் இருந்தது.


சேர் பொன்.இராமநாதன்

> சுதந்திர இலங்கையின் முதல் தலைமை டீ.எஸ்.சேனநாயக்கவுக்குரியது. அவர் தேசபிதாவாக சிங்கள மக்களால் போற்றப்படுகிறார். அவரது சிந்தனையில் ஆட்சித் தலைமைக்குரிய நடுநிலை வெறிதே காணப்பட்டது. சிறுபான்மை இனமான தமிழினத்தின் வலுவை பலத்தை வளர்ச்சியை எப்படி மழுங்கடிக்கச் செய்யலாம் என்பதிலே அவரது சிந்தனை மேலோங்கி நிற்கின்றது.

மதிநுட்பம் இருந்தது. ஆனால் தூரநோக்கு இருக்கவில்லை. சிங்களத் தலைமைகளை நம்பினார். அவர்களின் கபடத்தை, துட்டத்தனத்தை அன்று அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒருநாட்டுக்குரிய கொடி பட்டொளி வீசிப்பறக்கும்போது, அந்த நாட்டவர்கள் எல்லோரும் எழுந்துநின்றுதலைவணங்கி அதற்கு மரியாதை செய்யவேண்டும். அப்போதுதான் அந்த நாட்டின் சிறப்பும் பெருமையும் அந்த நாட்டில் மாத்திரமல்ல உலக அரங்கிலும் பெருமை பெற்று விளங்கும். எங்கள் நாட்டுக் கொடிக்கு இத்தகைய சிறப்பும் பெருமையும் இருக்கின்றதா? இந்த நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை இனத்தவர்கள் இந்தக் கொடிக்கு உள்ளார்ந்த மதிப்பை யும் கௌரவத்தை யும் தருகிறார்களா? இல்லையே! சிங்க ளத் தலைமைகளே! இதற்கு உங்கள் விடைதான் என்ன?

சுதந்திர இலங்கைக்கு ஏற்ற கொடி ஒன்றைத் தெரிவு செய்ய அன்றொரு குழு அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஜி.ஜி. பொன்னம்பலமும் இடம்பெற்றிருந்தார். சிங்கத்தைச் சின்னமாக வைக்க வேண்டு மெனக் குழு தெரிவு செய்தபோது அந் தக் கொடியிலே தமிழர்களைப் பிரதிபலிக்கத்தக்கதாக நந்தி யும் இடம்பெற வேண்டுமென அன்றைய வர்த்தக அமைச்சர் சுந்தரலிங்கம் வாதிட்டார். அவ ரது கருத்துக்கு வலுச் சேர்க்க அன்றைய தமிழ்த் தலைமைகள் தவறிவிட்டனர். ஒன்றுபட்டு நின்று எமது இனப் பாதுகாப்பை வலுப்படுத்தும் சிந்தனை அன்று இருக்கவில்லை; இன்றும் அது தொடர் கதையாகவே இருக்கிறது.

**எல்லாளனின் செல்நெறி**

இலங்கை வரலாற்றில் தமிழர்களின் செல்நெறியை நிலைநாட்டி நின்ற பெருமைக்குரியவன் எல்லாளன். தமிழர்களின் செல்நெறி எது? அற நெறியே அவர்களது வாழ்வியலின் அடிநாதம். ஒரு நாட்டின் ஆட்சித் தலைவன் நீதி செய்து மக்களைக் காக்கும் பண்பாளனாக இருக்கவேண்டும். நடுநிலை தவறாத ஆட்சியின் சின்னம் செங்கோல். தமிழ்த்தலைவன் எல்லாளன் அநுராதபுரத்திலே நாற்பத்தி நான்கு ஆண்டு கள் செங்கோலை மகிமைப்படுத்தி ஆட்சிபுரிந்தான். இதுவொரு வரலாற்றுப் பதிவு. இதைப் பதிவு செய்தவர்களும் சிங்களவர்களே.

எல்லாளனோடு செங்கோல் ஆட்சி போச்சு. பிற்பாடு எந்தவொரு அரசனிடமோ அல்லது குடியாட்சியிலோ ஆட்சிபீடத்திலோ எங்கும் இதனைக் காண முடியவில்லை. நாடாளுமன்ற அவையிலே சபாநாயகர் முன்னிலையில் நடுநிலையின் அடையாளம், நீதியின் வடிவமாய்த்துலங்கும் செங்கோலைப் பிடுங்கிச் சென்றோடும் காட்சியைத்தான் இதுவரைகண்டோம். நீதியை நியாயத்தை எட்ட முடியாத இந்த அவையில் செங்கோல் எதற்கு? என்று கருதி எடுத்துச் சென்றார்களோ? என்னவோ!!

பெரும்பான்மைப் பலம் சிங்களத் தலைமைகளுக்கு வலுவைச் சேர்த்திருக்கின்றது. அந்த வலுவை வைத்துக் கொண்டு எதையும் செய்யலாம், எப்படியும் நடக்கலாம் என்று சிங்களத் தலைமைகள் எண்ணியதும் எண்ணியதைச் செய்ததுமே கடந்த அறுபதாண்டு வரலாறு புடம்போட்டுக் காட்டுவது.

சுதந்திர இலங்கையின் முதல் தலைமை டீ.எஸ்.சேனநாயக்கவுக்குரியது. அவர் தேசபிதாவாக சிங்கள மக்களால் போற்றப்படுகிறார். அவரது சிந்தனையில் ஆட்சித் தலைமைக்குரிய நடுநிலை காணப்பட்டவில்லை. சிறுபான்மை இனமான தமிழினத்தின் வலுவை, பலத்தை, வளர்ச்சியை எப்படி மழுங்கடிக்கச் செய்யலாம் என்பதிலேயே அவரது சிந்தனை மேலோங்கி நின்றது. அதனது வெளிப்பாடே மலையகத் தமிழர்கள் மீது குறி வைத்த குடியுரிமைசட்டம், வாக்குரிமைச் சட்டம் ஆகும். கிழக்கு மாகாணத்தில் முக்கிய இடங்களில் தோற்றுவிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட குடியேற்றம் இன்று எங்குபோய் முடிந்திருக்கின்றது?

**திட்டமிட்ட குடியேற்றத்தால் விபரீதம்**

குடியாட்சியை அறிமுகப்படுத்திய பிரித்தானியாவின் புகழ் பெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில்கல்விகற்றஎஸ்.டபிள்யூ ஆர்.டீ.பாண்டார நாயக்காவின் சிந்தனையிலே கூட அறநெறியின் சாயல் படிந்திருந்ததா? இந்த நாட்டின் பிரதமராக வேண்டும் என்ற நப்பாசையால் இருபத்தி நான்கு மணித்தியாலத்துக்கு முன் சிங்கள மொழியை ஆட்சி பீடத்தில் ஏற்றுவேன் என்ற அவரது அறிவிப்பானது சிங்கள மக்களைச் சுண்டியிழுத்தது. ஆட்சி மாறியது. சிங்கள மொழி அரசு கட்டில் ஏறியது. சிங்கள மக் களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டது. அந்த விழிப்புணர் வில் தமிழர், சிங்களவர் என்ற பேத உணர்வு செறிந்திட்டது. இலங்கையில் இதுவரை நடந்தேறிய இனக்கலவரங் களுக்கு அதுவே மூலகாரணமாய் அமைந்தது.

அன்றில் இருந்து மகிந்த ஆட்சி வரை தமிழர்களின் வளர்ச்சியை, அவர்களின்செல்வாக்கை எந்தெந்த முறைகளை எந்தெந்த வழிகளைப் பின்பற்றினால் தடுக்கலாம் ஒடுக்கலாம் என்பதிலேயேசிங்களத்தலைமைகள் கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறது என்பதையப் பட்டியல் போட்டே உறுதிப்படுத்தலாம்.

*(நாளை தொடரும்)*

(நாளை தொடரும்)

# தேவாலய வீதி புனரமைக்கப்படுமா?

நுணாவில் மேற்கில் ஏ–9 வீதியையும், ஏ–32 வீதியையும் இணைக்கும் தேவாலய வீதி மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால், இந்த வீதியைப் பயன்படுத்துகின்ற மக்கள் பல்வேறு இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

சுமார் நான்கு கிலோ மீற்றர் நீளமுடைய இந்த வீதியில் கொல்லன்கிராய் விநாயகர் ஆலயமும் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தைத் தரிசிப்பதற்குத் தினந்தோறும் பெருமளவு பக்தர்கள் சென்று வருகின்றனர். ஆனால் வீதியின் மோசமான நிலை காரணமாக இவர்கள் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

இந்த வீதியின் இருபுறமும் பரந்த வயல் வெளிகள் காணப்படுகின்றன. வயல் வேலைகள் ஆரம்பிக்கும் போது பெருமளவான விவசாயிகள் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் வீதியின் மோசமான நிலை காரணமாக இவர்களும் பெருமளவு பாதிக்கப்படுகின்றனர். வீதியின் பெரும்பகுதி மேடு பள்ளம் நிறைந்து காணப்படுவதால், இடு பொருள்கள் விதை ஆகியவற்றை எடுத்துச் செல்வதில் கடுமையான சிரமங்களை விவசாயிகள் எதிர்கொள்கின்றனர். அத்துடன் விதைப்புக் காலத்திலும், அறுவடையின்போதும் வாகனங்கள் செல்வதிலும் இடையூறுகள் காணப்படுகின்றன. வீதியின் மோசமான நிலை காரணமாகச் சில வாகன உரிமையாளர்கள் வருவதற்குப் பின்னடிக்கவும் செய்கின்றனர். சிலர் அதிக கட்டணம் கேட்பதையும் காணமுடிகின்றது.

இதைவிட இந்தப் பகுதிக்குரிய மயானமும் மேற்படி வீதியிலேயே அமைந்துள்ளது. இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள், மயானத்துக்குச் செல்வதில் மோசமான இன்னல்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். அதிலும் மழை காலங்களில் இவர்கள் அனுபவிக்கின்ற சிரமங்களை எடுத்துக்கூற முடியாது.

இரண்டு பிரதான வீதிகளை இணைக்கின்றதொரு வீதியாகத் தேவாலய வீதி காணப்படுவதாலும், இதனூடாகப் பயணிப்பதால் நேரத்தையும், பணத்தையும் மீதப்படுத்தலாம் என்பதாலும், தினமும் பெருமளவு வாகனங்கள் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றன. ஆனால், வாகன ஓட்டிகள் படுகின்ற சிரமங்கள் சொல்லும் தரமன்று. வீதியிலுள்ள மேடு பள்ளங்களில் வாகனங்கள் துள்ளி எழும்புவது வேதனைக்குரியது.

இந்த வீதியின் அவலநிலை தொடர்பாகச் சில மாதங்களுக்கு முன்னர் குறித்த உள்ளூராட்சிச் சபையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, வீதியின் புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே மாரி காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சரா இமானுவேல்

# புல்லரித்த செய்தி

நேற்றைய உதயனின் தலைப்புச் செய்தி பார்த்துப் படித்துப் படித்துப் பேரானந்தம் அடைந்தேன். புல்லரித்த செய்தி. திகைக்க வைக்கும் சாதனை.

தமிழ் மகன், கிளிநொச்சி மகிழ்ந்த வவுனியா சாதனையாளன், செல்வன் நடராஜா நவராஜ் ஜாக்சன். (என்.என் ஜாக்சன்) தன்னியக்க நீர் இறைக்கும் பொறிமுறை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மலசலகூடம் ஆகிய இரண்டு கண்டுபிடிப்புக்களுக்கும் உலக விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்கள் வழங்கிய ஆச்சரியமான கோடி கௌரவத்துக்கு நாம் தலைவணங்கி, ஜாக்ஸனுக்கு உயர் கௌரவம் கிடைக்க எமது வாழ்த்துக்கள் உரியதாகுக. கண்டுபிடிப்பில் இது ஒரு புரட்சியே! நாம் விழாக்களோடு மட்டும் புரட்சி செய்கின்றோம்.

கே.எஸ்.சிவஞானராஜா

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் இன்னல்களுக்கு மத்தியில் ஐரோப்பா பயணிக்கும் சிறுவர்கள்

## ஐ.நாவின் சிறுவர்களுக்கான நிதியம் சுட்டிக்காட்டு



வொஷிங்டன், ஜூன் 15
ஐரோப்பாவை வந்தடையும் அகதிச் சிறுவர்கள் பல்வேறு கொடுமைகளை அனுபவித்தே அங்கு வந்தடைகின்றனர் என்று ஐ.நாவின் சிறுவர்களுக்கான நிதியம் தெரிவித்துள்ளது.
கூலித் தொழிலாளியாக, அடிமையாக, பலாத்காரங்களுக்கு முகம் கொடுத்தே அகதிச் சிறுவர்கள் ஐரோப்பாவை வந்தடைகின்றனர் என்று அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.
இந்த ஆண்டில் கடந்த 4 ஆம் திகதிவரை ஐரோப்பாவுக்கு 2 லட்சத்து 6 ஆயிரத்து 200 அகதிகள் சென்றுள்ளனர். அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்களாவர். அவர்களில் நான்கில் ஒரு சிறுவர் பெற்றோர் இன்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
லிபியாவில் இருந்து இத்தாலிக்கே அதிகளவு அகதிச் சிறுவர்கள் வருகின்றனர் என்றும் அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது. லிபியாவில் இருந்து பயணிக்கும் சிறுவர்களில் 10 இல் 9 பேர் ஆதரவு அற்றவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. லிபியாவில் 2 லட்சத்துக்கு அதிகமானோரும், சாஹில் பகுதியில் 9 லட்சத்துக்கு அதிகமானோரும் ஐரோப்பா நோக்கிப் பயணிக்கக் காத்திருக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இவ்வாறான பயணங்களில் மனிதக் கடத்தல்களும் இடம்பெறுகின்றன என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றும் இந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.
ஆதரவற்ற சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுக் கர்ப்பிணிகளாக்கப்பட்டுள் ளனர் என்றும் அந்த நிதியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ற-ரி4)

# பங்களாதேஷில் இதுவரை 5 ஆயிரம் பேர் கைதாகினர்

## பொலிஸின் வேட்டை தொடர்கின்றது

டாக்கா, ஜூன் 15
பங்களாதேஷில் சுமார் 5 ஆயிரத்து 300 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அங்கு சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதை அடுத்தே பொலிஸார் இந்தத் தீவிர நடவடிக்கையை எடுத்துள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களில் 82 இஸ்லாமியப் போராளிகளும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் பங்களாதேஷில் கடந்த ஆண்டு இறுதியில் இருந்து அதிகரித்துள்ளன. இதுவரை 30க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். அதையடுத்து தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.



(ற-ரி4)

# லிங்ட் இன்னை வாங்கியது மைக்ரோசொப்ட் நிறுவனம்

வொஷிங்டன், ஜூன் 15
மைக்ரோ சொப்ட் நிறுவனம் பிரபல சமூக வலைத்தளமான லிங்ட் இன்னை வாங்கவுள்ளது. இதனை அந்த நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. 26.2 பில்லியன் டொலர் கொடுத்து லிங்ட் இன்னை வாங்குகின்றது மைக்ரோ சொப்ட்.
இந்த ஒப்பந்தம் தொடர்பில் மைக்ரோ சொப்ட் நிறுவன அதிகாரி சட்யா நடெல்லா தெரிவித்துள்ளதாவது–
லிங்ட் இன் சிறப்பான விதத்தில் வணிகத் தொடர்புகளைப் பேணி வருகின்றது. அதே நேரத்தில் மைக்ரோ சொப்ட் நிறுவனம் உலக அளவில் முன்னணியான இயங்கியல் திறனான நிறுவனமாகும். தொடர்புகளும், இயங்கியலும் வணிகத்துக்கு அவசியம். எனவே இந்த இரு நிறுவன இணைப்பின் மூலம் வர்த்தகர்கள் நன்மை அடைவார்கள் – என்று தெரிவித்தார். (ற-ரி4)

# அணு ஆயுதத்தில் இந்தியாவை பின்தள்ளியது பாகிஸ்தான்

லண்டன், ஜூன் 15
இந்தியாவை விட பாகிஸ்தான் அதிகமான அணு ஆயுத போர்த்தளபாடங்களைக் கொண்டுள்ளது என்று சுவீடன் நாட்டின் தலைநகர்ஸ்டொக்ஹோம் நகரில் உள்ள சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.
ஒவ்வொரு நாடும் வைத்துள்ள அணு ஆயுதங்கள் பற்றிய புள்ளி விவரங்களை அந்த நிறுவனம் வெளியிட்டுள்ளது.
நடப்பு ஆண்டில் இந்தியா 100 முதல் 120 அணு ஆயுதத் தளபாடங்களைக் கொண்டுள்ளது. பாகிஸ்தான் 110 முதல் 130 அணு ஆயுதத் தளபாடங்களைக் கொண்டுள்ளது. இந்த எண்ணிக்கை இஸ்ரேலை விட அதிகமாகும்.
அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், வட கொரியா ஆகிய 9 நாடுகளிடமும் மொத்தம் 15 ஆயிரத்து 395 அணு ஆயுதங்கள் உள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ற-ரி4)

# மனித வேட்டையாடிய கரடி சுட்டுக் கொலை

டோக்கியோ, ஜூன் 15
பொதுமக்களை வேட்டையாடி வந்த கரடி ஒன்று ஜப்பானில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது. இந்தக் கரடி கடந்த 3 வாரங்களில் நான்கு பேரைக் கொன்றுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



அகிடா பிரதேசத்தில் உள்ள கசுனோ நகரின் மலைக் காட்டுப் பகுதியிலேயே கரடி சுட்டுக் கொல்லப்பட்டது.
கடந்த மாதம் மூங்கில் வெட்டச் சென்ற 3 பேர் வெவ்வெறு சந்தர்ப்பங்களில் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தனர். இறுதியாக 74 வயது மூதாட்டி ஒருவர் காணாமற்போயிருந்த நிலையில் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அதையடுத்து குறித்த கரடியைச் சுட்டுக்கொல்வதற்கு அதிகாரிகள் முடிவெடுத்தனர்.
மூதாட்டி கொல்லப்பட்ட இடத்துக்கு வந்த கரடி வேட்டைக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது.
குறித்த பகுதியில் கரடியின் தாக்குதல் அதிகரித்ததை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மனித இரத்த ருசிக்குப் பழக்கப்பட்டுவிட்ட கரடியைக் கட்டுப்படுத்துவது கடினம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.
அகிடா பகுதியில் 1979ஆம் ஆண்டில் இருந்து 2015ஆம் ஆண்டுவரை மட்டும் 8 பேர் கரடியின் தாக்குதலில் இறந்துள்ளனர். கடந்த 3 வாரங்களில் 4 பேர் இறந்துள்ளனர் என்பது அசாதாரணம் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-ரி4)



அமெரிக்காவின் ஒர்லாண்டோ பகுதியில் உள்ள விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 49 பேர் கொல்லப்பட்டனர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று முன்தினம் வீதியில் திரண்டனர். இந்த நிகழ்வு அமெரிக்கத் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் அரசியல்வாதிகளும் கலந்து கொண்டனர். (ற-ரி4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிய வகை நோயால் விசித்திர தோற்றத்துடன் பிறந்த குழந்தை



புதுடில்லி, ஜூன் 15
இந்தியாவில் சாக்பூர் பகுதியில் விசித்திரத் தோற்றத்துடன் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. ஹேர்லிக்குவின் இத்தோயோசிஸ் எனும் அரிதான நோயால் பாதிக்கப்பட்டு பிறந்த அந்தக் குழந்தை, 2 நாள்களில் உயிரிழந்துள்ளது.
3 லட்சம் குழந்தைகளில் ஒரு குழந்தை இவ்வாறான குறைபாட்டுடன் பிறக்கின்றது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.
தகடுகள் போன்ற தடித்த தோலுடன் குழந்தை காணப்படும். அதன் உள்ளுறுப்புகளும், வெளித் தெரியும் வகையில் காணப்படும். சிறப்பு சிகிச்சைப் பிரிவில் பாதுகாக்கப்பட்டபோதும் குறித்த குழந்தை உயிரிழந்துள்ளது.
கடந்த சனிக்கிழமை 23 வயதான பெண்ணுக்கு இந்தக் குழந்தை பிறந்தது. பெற்றோர், குடும்பத்தினர் குழந்தையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த போதும், மருத்துவர்கள் விளக்கமளித்தால் நிலைமையைப் புரிந்து கொண்டனர் என்று மருத்துவர் ஒருவர் தெரிவித்தார். தாயார் மருத்துவச் சந்திப்புக்களை ஒழுங்காக மேற்கொள்ளவில்லை. இறுதித் தருணத்தில் இவை அவதானிக்கப்பட்டன. ஆரம்ப கட்டத்தில் மருத்துவர்களை நாடியிருந்தால் சிகிச்சை பெற்றிருக்கலாம். ஹேர்லிக்குவின் இத்தயோசிஸ் என்பது இது அரிதான பரம்பரை நோய் ஆகும். தடித்த தோலால் சருமத்தில் வெடிப்புகளை ஏற்படுத்தும் நோய் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# சீனாவின் பீஜிங் நகரில் நிலக்கீழ் அரண்மனை



பீஜிங், ஜூன் 15
சீனாவில் பீஜிங் நகரில் 590 ஆண்டுகளுக்கு முன்னைய நிலக்கீழ் அரண்மனை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
சீனாவில் மின் வம்சத்துக்குச் சொந்தமான இந்த அரண்மனை சினிங் அரண்மனை என அழைக்கப்படுகின்றது. குறித்த அரண்மனையின் இடிபாடுகள் நில அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்டன.
இந்தக் கண்டுபிடிப்பு சீனாவின் தொல்பொருள் நகரத்தில் இடம்பெற்றுள்ளது. அவற்றின் கட்டுமானங்கள் அனைத்தும் மரத்தால் செய்யப்பட்டுள்ளன. அதே நேரம் இதன் தரை கண்ணாடியால் ஆக்கப்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பல மரப் பொருள்கள், தளபாடங்கள் என்பன அங்கு மீட்கப்பட்டுள்ளன. உலகில் தொல்பொருள் கண்டுபிடிப்புகளில் இந்தக் கண்டு பிடிப்பு மிகவும் பெரியது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ரி4)

# இரத்த தானம் செய்வதற்குத் தடை: கடும் எதிர்ப்பு

வொஷிங்டன், ஜூன் 15
அமெரிக்காவின் ஓர்லான்டோ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களுக்குத் தேவைப்படும் குருதியை வழங்க நூற்றுக்கணக்கானோர் திரண்டனர். இந்த நிலையில் ஓரினச் சேர்க்கையாளர், போதைப் பொருள் பாவனையாளர்கள், மாற்றுப் பாலினத்தவர்கள் இரத்தம் வழங்க முடியாது எனத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இதற்குப் பலரும் எதிர்க் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். இரத்தம் தேவைப்படுவோருக்கு



உதவுவதில் ஏன் இந்தப் பாரபட்சம் எனப் பலரும் சமூக வலைத்தளங்களில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
சட்டவிரோதமான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தடை விதிக்க யாரும் முன்வரவில்லை, இரத்த தானத்துக்குச் சட்டத்தைக் கடைப்பிடிக்கின்றனர் எனப் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-ரி4)

## சிறுவர்களும் தோற்றத்துக்கு முக்கியத்துவம்

பீஜிங், ஜூன் 15
ஒருவரின் தோற்றத்துக்குச் சிறுவர்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
ஆண் பிள்ளைகளை விடப் பெண் பிள்ளைகள் இவற்றில் அதிகம் முனைப்புக் காட்டுகின்றனர். சீனாவைச் சேர்ந்த விஞ்ஞானக் கல்லூரி 138 பேரிடம் ஆய்வு நடத்தியது.
ஓர் ஆணின் பல வித முகபாவனைகளுடன் உள்ள 200 ஒளிப்படங்கள் ஒவ்வொரு நபருக்கும் காட்டப்பட்டன. பின்னர் நம்பகத்தன்மை தொடர்பாகக் கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தக் கேள்விகளுக்கு, பார்வைக்கு வனப்பானவர்கள், நம்பகமானவர்கள் எனும் பதில் பெறப்பட்டது.
(ற-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள்

# 5

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 5 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

**அதிர்ஷ்ட தினங்கள்**

ஒவ்வொரு மாதமும் 5, 14, 23 ஆகிய திததிகளும் 9, 18, 27 ஆகிய திகதிகளும் மிக அதிர்ஷ்டமானவை. இதே போன்று கூட்டு எண் 5 அல்லது 9 வரும் தினங்களும் அதிர்ஷ்டமானவையே!

இவர்களுக்கு மற்ற அனைத்து எண்காரர்களும் உதவுவார்கள். இருப்பினும் 5, 9 எண்காரர்கள் இவர்களுக்கு மிகவும் நன்மை செய்வார்கள்.

**5-ஆம் திகதி பிறந்தவர்கள்**

புதன் கிரகத்தின் முழு அம்சம் பெற்றவர்கள். நல்ல தெய்வீக வாழ்க்கை அமையும். அறிவும், தெளிவும் உண்டு. இவர்கள் மற்றவர்களைமதிப்பவர்கள். அழகான தோற்றம் உடையவர்கள். இவர்களின்பேச்சிலும் நடத்தையிலும் ஒருவித ஈர்ப்பு சக்தி உண்டு. சிறு வயது முதலே குறிப்பிட்ட இலட்சியத்துடன் வாழ்க்கையை நடத்துவார்கள். மற்றவர்களை ஏமாற்றத் தெரியாது.

**14 ஆம் திகதி பிறந்தவர்கள்**

இவர்கள் மிகுந்த அதிர்ஷ்டம் உடையவர்கள். பயணத்தில் சலிக்காத நாட்டம் இவர்களுக்கு இருக்கும். பலர் புகழ்பெற்ற வியாபாரிகளாக இருப்பார்கள். இருந்தாலும் இவர்களது வாழ்க்கையில் அடிக்கடி விபத்துகள், சரிவுகள் ஏற்படும். இறைவனின் அருளால் இவர்களுக்குத் துன்பங்களைச் சமாளிப்பதற்கான சூழ்நிலையும், அறிவும் உருவாகும். காதல் விடயங்களில் கவனமாக இல்லாவிட்டால், பின்பு வாழ்க்கையே கசந்துவிடும். மக்களைக் கவர்கின்ற சிறந்த எண் இது. எனவே எப்போதும் இவரைச் சூழ்ந்து 10 பேர் இருப்பார்கள். அரசியலிலும் இவர்களுக்கு அதிர்ஷ்டம் உண்டு!

**23 ஆம் திகதி பிறந்தவர்கள்**

இவர்கள் மிகுந்த அதிர்ஷ்டசாலிகள். குரு சந்திர யோகம் நிறைந்தவர்கள். அரசால் எப்போதும் ஆதரவு கிடைக்கும். சமூகத்தில் உயர்ந்த பதவிகள் கிடைக்கும். ஓர் அரசனைப் போன்று அனைத்து வசதிகளுடனும் வாழ்வார்கள். பண்பாடும், ஒழுக்கமும் நிறைந்தவர்கள். இவர்கள் உலகத்தில் சாதனை புரியப் பிறந்தவர்கள். மக்களைக் கவர்கின்ற சக்தி நிறைந்தவர்கள்.

புன்னகை புரிந்தே மற்றவர்களை வென்று விடுவார்கள். இவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு மறுப்பு இருக்காது. அனைத்து மக்களின் அன்பும், ஆதரவும் கிடைப்பதால் பெரும் வியாபாரிகளாகவும் ஆன்மிகம் மற்றும் அரசியல் துறைகளில் புகழ் பெற்றும் விளங்குவார்கள்.

**எண் 5 க்கான தொழில்கள்**

இவர்களுக்கு கதை, கவிதை, நாடகம் எழுதல், சிற்பம் செதுக்குதல், ஜோதிடம் பார்த்தல், காகிதம், மொச்சை, பயறு, மஞ்சள், முத்து, வெற்றிலை பாக்கு கொடி வகைகள் போன்ற வியாபாரங்களால் நன்மை பயக்கும். கல்வித்துறை, கணக்குத் துறை, தபால்துறை போன்றவற்றில் பணி செய்தல், சொற்பொழிவாற்றுதல் போன்றவையும் ஒத்துவரும். சோதிடம் போன்ற சாஸ்திர ஆராய்ச்சியிலும் ஈடுபடுவார்கள். சிலர் நாட்டின் தூதுவர்களாகவும் இருப்பார்கள்.

பொதுவாக அனைத்து வியாபாரங்களும் இவர்களுக்கு நன்மை தரும். ஆனால் பொருள்கள், கருவிகள் உற்பத்தித் துறைகளில் இறங்கக்கூடாது! சொந்தத் தொழில் செய்யவே இவர்கள் விரும்புவார்கள். இவர்கள் மற்றவர்களிடம் வேலை செய்யும் போது, முதலாளிகளுக்குப் பல ஆலோசனைகளையும், பணம் சம்பாதிக்கும் வழிமுறைகளையும் கூறுவார்கள். அதனால் முதலாளிகளால் மிக விரும்பப்படுவார்கள். பொதுவாக தனியார் நிறுவனங்களில் வேலை செய்வார்கள். அடிக்கடி தொழிலை மாற்றும் இயல்பினர். சம்பள உயர்வே இவர்களது நோக்கம். ஏதாவது உப தொழில் செய்து வருமானத்தைப் பெருக்குவதில் நாட்டமாக இருப்பார்கள். விற்பனைப் பிரதிநிதிகள் போன்றவற்றிலும் நன்கு பிரகாசிப்பார்கள். அறிவியல் துறைப் பணிகள், கலைத்துறை, பேச்சாளர்கள் போன்ற துறைகளும் நன்கு அமையும். இவர்கள் அறிவினால் உழைப்பவர்கள். மற்றவர்களை வசியம் செய்து தங்களின் காரியங்களைச்சாதித்துக்கொள்வார்கள். நடிகர்கள், நடிகைகள், எழுத்தாளர்கள், வியாபாரிகள் இந்த எண்ணில் பிறந்திருப்பார்கள்.

(தொடரும்)

## திருமறைக் கலாமன்றம் நடத்தும்

# கூத்துக்கலைக் கூடல்

## எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில்

ஈழத்தமிழர்களின் மரபுவழிக் கலைவடிவமான நாட்டுக்கூத்துக் கலையை அழியவிடாது பேணும் முயற்சியின் ஓர் அங்கமாகத் திருமறைக்கலாமன்றம் நடத்தும் கூத்துவிழா இந்தமுறை 'கூத்துக்கலைக்கூடல்' என்னும் பெயரில் எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) இல.238 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட மரபு வழிக் களரியில் நடைபெறவுள்ளது.

அரங்க அளிக்கைகள், கருத்தமர்வு, கண்காட்சி, நூல்வெளியீடு எனப் பல்வேறு நிகழ்வுகளுடன் இடம்பெறவுள்ள கூத்துக்கலைக் கூடல், நாட்டுக்கூத்து ரசிகர்களுக்கும் நாடக ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்கும் பெருவிருந்தாக அமையவுள்ளது.

கூத்துக்கலைக் கூடலின் முதல் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். முதல்நாள் நிகழ்வுகளின் அரங்க அளிக்கைகளாக முல்லைத்தீவு, முள்ளியவளை காட்டா விநாயகர் கலாமன்றம் வழங்கும் கோவலன் கூத்து (முல்லைமோடி), சுழிபுரம், அண்ணா முத்தமிழ் கலைக் கலா நாடக மன்றம் வழங்கும் தர்ம புத்திரன் (வடமோடி நாட்டுக்கூத்து), கட்டுவன் சிவப்பிரகாசம் குழுவினர் வழங்கும் வசந்தன் கூத்து ஆகியன இடம்பெறவுள்ளன.

கூத்துக் கலைக்கூடலின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இல.286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் ஆரம்பமாகும். இதன் போது கூத்துத் தொடர்பான கருத்தமர்வும், கண்காட்சியும் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகும் நிகழ்வுகளில் முதல் நிகழ்வாக அற்றைத் திங்கள் கூத்துருவ நாடக நூல் வெளியீடும். அதனைத்தொடர்ந்து அரங்க அளிக்கைகளும் இடம்பெறும். இதன்போது மட்டக்களப்பு, கன்னங்குடா பருத்திச்சேனை, கலைமகள் கலைக் கழகம் வழங்கும் அலங்கார ரூபன் (தென்மோடி நாட்டுக்கூத்து), மன்னார், பேசாலை விழிகள் கலாமுற்றம் வழங்கும் இராமபாணம் (மாதோட்ட பாங்கு), திருமறைக் கலாமன்றம் வழங்கும் எஸ்தாக்கியார் (தென்மோடி நாட்டுக்கூத்து) ஆகியனவும் இடம்பெறவுள்ளன.







# தெருவெளி ஆற்றுகைகள்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு செயற்பாடாக வலி.மேற்கு பிரதேசசபையின் ஒழுங்குபடுத்தலில் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி, சங்கானை ஆகிய பகுதிகளில் புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்களின் நடிப்பில் தெருவெளி ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. நீர் மாசடைதல், அதனைத் தடுக்கும் வழிமுறைகள், மரங்களை வெட்டுதலால் ஏற்படும் பாதிப்பு, திண்மக் கழிவுகளை ஒழுங்கான முறையில் எவ்வாறு பயன்படுத்துவது?, பொலித்தீன் பாவனையால் ஏற்படும் பாதிப்பு, சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தவிர்த்து எமது பூமியை எவ்வாறு பாதுகாப்பது போன்ற பல்வேறு விழிப்புணர்வு சார்ந்த அம்சங்களை நகைச்சுவைக்கூடாக அளிக்கையாக வழங்கிவருகின்றனர். 'வேள்ட்விசன்' இதற்கு அனுசரணை வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிறுபிரச்சினைகளைப் பெரிதாகக் கொள்ளாமை, தேவையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாமை ஆகியவற்றில் கூடிய அக்கறை செலுத்தி வாழ்வோமாயின் இல்லத்து வன்முறையை இல்லாதொழிக்கலாம்.**

# குடும்ப வன்முறை

சி. நற்குணலிங்கம்

இல்லத்து வன்முறை அல்லது குடும்ப வன்முறை என்பது மேலோட்டமாக நெருக்கமுறையான உறவுக்குட்பட்ட ஒருவரினாலோ அல்லது இருவரினாலோ நிகழ்த்தப்படுகின்ற துர் நடத்தைப் போக்கு எனலாம்.

பெண்களுக்கெதிராக பிரதானமாக ஆண்களினால் நிகழ்த் தப்படும் அதிகார நடத்தையாக இல்லத்து வன்முறை பரவலாக வரைவிலக் கணப்படுத்தப்படுகின்றது.

சமூக விஞ்ஞானிகளின் அண்மைக் கால ஆய்வுகளின்படி வீட்டினுள் இடம்பெறும் வன்முறை நடவடிக்கைகளினால் அதிகமாக பெண்களும், பிள்ளைகளுமே பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு குடும்பச் சூழலில் ஒரு திறத்தவர் மற்றுமோர் திறத்தவர் மீது அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் விதிக்கும் போது குடும்ப வன்முறை தோன்றுகின்றது. இல்லத்து வன்முறை என்பது ஒரு பாரதூரமான குற்றமாகும்.



இல்லத்தில் நாம் காணும் வன்முறைகள் பல. வீட்டில் உரக்கக்கத்தி அவமரியாதை செய்தல், குடும்பத் துணைவிக்கு பணம் கொடுக்காமை, உழைத்த பணம் முழுவதையும் குடும்பத் துணைவர் எடுத்துக் கொள்ளல், துணைவரால் பாலியல் வல்லுறவு, அடித்தல் மற்றும் துன்புறுத்தல், உதைத்தல், கடித்தல், தள்ளுதல், குறைப் பிரசவத்தை ஏற்படுத்தல், தற்கொலை புரியத் தூண்டுதல் சாதாரண காயமேற்படுத்துதல், படுகாயம் ஏற்படுத்துதல் முறையின்றித் தடுத்து வைத்தல், பிள்ளைகளை கொடுமைப்படுத்தல், பலாத்காரம் செய்தல், ஆள் கடத்தல், கொடூரமானமனிதாபிமானமற்ற கீழ்த்தரமான அல்லது இழிவுபடுத்தும் நடத்தை, ஆக்கிரோசமாகத் திட்டித் தீர்ப்பது, தடுக்கப்பட்ட உறவு முறையுடன் தகாத உறவு கொள்ளல் என்பன இல்லத்து வன் முறைகளாகக் கருதப்படுகின்றன. நான்கு பொண்களுக்கு ஒருவர் தமது வாழ்நாளில் இல்லத்து வன்முறைக்கு ஆளாகிறார்கள்.

சிறுபராயத்தில் இல்லத்து வன்முறைக்கு உள்ளான பிள்ளை பிற்காலத்தில் குற்றச் செயல் புரிபவராக வளர்வதற்கு உரியவாய்ப்புக்கள் அதிகமாகும் என்பது தெரியவருகின்றது. அவ்வாறான பிள்ளைகள் பெரியவர்களானதும் சமூகத்திலுள்ள ஏனையவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்றபோது பல்வேறு வகையான பிரச்சினைகளை, பிணக்குகளை ஏற்படுத்திக் கொள்வதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இல்லத்து வன்முறையானது பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நலனுக்கு மட்டுமன்றி நாம் வாழும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் பிரச்சினையானதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

சிறுவர்களில் குடும்ப வன்முறை மேலும் பல தாக்கங்களை தோற்றுவிக்கின்றது. அதிதீவிர உணர்ச்சியுடனான நடவடிக்கைகளில் ஈடுபடல், நடத்தைப் பிரச்சினைகள், மன அழுத்தத்துக்கு உள்ளாதல், அடிக்கடி குழம்புதல், நித்திரை ஒழுங்கின்மை, தலையிடி, வயிற்றுவலி ஏற்படல், பேசும் திறன் குறைதல் (திக்கு வாய்), எதிர்காலம் பற்றி உறுதிப்பாடும் கவலையும், சுயகட்டுப் பாட்டுபாடின்மை, மற்றவரில் நம்பிக்கை வைக்காதிருத்தல், தற்கொலை எண்ணங்கள் தோன்றுதல், கோபத்தை முகாமைத்துவம் செய்ய முடியாமை, பின்வாங்குதல், தனிமை, வீட்டிலிருந்து ஓடுதல் போன்ற பிறழ்வான நடத்தைக் கோலங்களுக்கு சிறுவர்கள் உள்ளாகும் நிலை ஏற்படும். இது அவர்களின் எதிர்கால வாழ்வைத் தலைகீழாக்கிவிடும்.

இல்லத்துவன்முறைக்கு உள்ளான குடும்பத் தலைவியின் உடலில் காணக்கூடிய சுகாதார அடையாளங்களாக பெண்ணுறுப்பில்குருதி வடிதல், மாதவிடாயின்போது கூடுதல் வலி காணப்படல், உடலுறவில் விருப்பமின்மை, மீள் உற்பத்தி உறுப்புக்களில் நோய்கள், அடிவயிற்றில் நீடித்த கால கடும் வலி, பெண்ணுறுப்பில் வேறு நீர்கள் வடிதல், மயக்கம், தலைச்சுற்று, ஞாபகமறதி என்பன காணப்படுகின்றன. பெண்களுக்கு எதிரான இல்லத்து வன்முறை ஒரு பாரதூரமான சுகாதாரப் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் தமது சாதாரண வாழ்க்கையைக்கூட முற்றாக வாழ முடியாது தவிக்கிறார்கள். இல்லத்து வன்முறையால் பல குடும்பங்கள் சீரழிந்துள்ளன.

**“இல்லத்து வன்முறை இல்ல வீழ்ச்சிக்கேயன்றி நிச்சயம் வளர்ச்சிக்கு அல்ல. இல்லத்து வன் முறையிலிருந்து விலகிச் செல்வதே மகிழ்வான வாழ்க்கைக்கு நுழைவாயிலாகும்.**

இலங்கையில் குடும்ப வன்முறையானது பொதுவாக நிலவுகின்ற போதிலும், பெரும்பாலும் மறைக்கப்பட்டதொரு விடயமொன்றாகவே உள்ளது. குடும்ப விடயம் வெளியில் தெரிந்தால் குடும்ப கௌரவம் என்னாகும்? பிள்ளைகளின் எதிர்காலம் குறிப்பாகப் பெண்பிள்ளைகளின் எதிர்காலம் என்னாகும்? இவற்றை மனதில் கொண்டு மனதுக்கு உள்ளேயே கவலைகளை குடும்பத் துணைவி புதைத்துக் கொள்கிறாள். இதனால் அவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டு, தொடர்ந்து இல்லத்து விளக்கை ஏற்ற முடியாத நிலையும் ஏற்படுகின்றது.

இல்லத்து வன்முறை இல்ல வீழ்ச்சிக்கேயன்றி நிச்சயம் வளர்ச்சிக்கு அல்ல. இல்லத்து வன்முறையிலிருந்து விலகிச் செல்வதே மகிழ்வான வாழ்க்கைக்கு நுழைவாயிலாகும். விட்டுக் கொடுத்தல், பொறுமை, சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, மன்னிக்கும் பண்பு, எந்த நேரத்தில் எதைக் கதைக்க வேண்டும் என்ற திறன், பெற்றோர் முதியோர் சொல்கேட்டல், எதையும் தீர யோசித்து முடிவெடுத்தல், கணவன் மனைவி இணைந்து முடிவுகளை எடுத்தல், மனம்விட்டுப் பேசுதல், ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கையுடன் நடந்து கொள்ளல் என்பன கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

எதற்கெடுத்தாலும் கோபப்படாதீர்கள், உணர்ச்சிக்கு அடிமையாகக் கூடாது, மரியாதையாகப் பழகிக் கொள்ள வேண்டும். அன்பான பேச்சு வாழ்வை வாழவைக்கும், இல்லத்து வன்முறை ஏற்படுத்தும் பாதிப்புக்களை அடிக்கடி மனதில் எண்ணுதல் வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவேண்டும். கலந்துரையாட வேண்டும் எப்போதும் மனதில் நன்மையாக யோசித்தால் எந்தவொரு செயலையும் சிறப்பாகச் செய்ய முடியும். சிறுபிரச்சினைகளை பெரிதாகக் கொள்ளாமை, தேவையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாமை, இவற்றில் கூடிய அக்கறை செலுத்தி வாழ்வோமாயின் இல்லத்து வன்முறையை இல்லாதொழிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதனை மனிதனாக வாழ வைப்பதில் இசை வகிக்கும் பங்கு

■ கா. குகபரன்

நம்முடைய முன்னோர்கள் அரும்பாடுபட்டு நமக்கு ஊட்டிவைத்துள்ள செல்வங்கள் பலவற்றுள் முதன்மையாக மதிக்கத்தக்கவை நமது நுண்கலைச் செல்வங்களே! அவை யாவன ஓவியம், சிற்பம், இசை, நடனம்.

இந்த நுண்கலைகளுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது இசை. இசையானது எப்போது தோன்றிற்று என அறுதியிட்டுக் கூறமுடியாது. எனினும், நமக்குக் கிடைத்துள்ள நூல்களின் வாயிலாக இசையின் சிறப்பியல்புகளை நோக்கலாம். இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் இசையைப் பற் றிய பல குறிப்புகளைக் காணலாம்.

உலகத்தை காடு, நாடு, கடல் மலை என்று நானிலங்களாகப் பகுத்து, அங்கு இசையின் தோற்றம் மற்றும் தொன்மை பற்றிக் கூறுகின்றது அந்த நூல்.

இறைவன் ஒலி வடிவமாக விளங்குகிறான் என இறையடியார்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். ஆதியிலே வார்த்தை (ஒலி) இருந்தது. அந்த வார்த்தை இறைவனாக இருந்தது. ஒலி வடிவான இறைவனே இவ்வுலகில் உள்ள அனைத்தையும் படைத்தவன் என அருள்திரு யோவான் கூறியுள்ளதை விவிலிய நூலில் காணலாம். இறைவன் ஒலி வடிவாக இருக்கின்றான் என்பதை அப்பர் சுவாமிகள் தேவாரப் பாடல் மூலம்,
"ஓசையொலியெலாம் ஆனாய் நீயே,
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே"
என்று குறிப்பிட்டுள்ளார். இறைவன் ஏழ் இசையாய் இசைப்பயனாய் விளங்கி அருள்பாலிக்கின்றான் எனச்சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார். நலிவுற்றிருந்த சமயத்தை வலுவூட்ட இசையை முக்கிய கருவியாக நாயன்மார்கள் பயன்படுத்தினர்.

இறைவனை வழிபடுவதற்கு அடியார்கள் பல முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். இறைவன் இசை வடிவாய் விளங்குவதால் இசை வாயிலாக அவனை வழிபடுவது மற்றைய முறைகளைவிட மிகச் சிறந்ததும் எளிமையானதுமாகும்.

இறைவனின் அடியார்கள் இறைவன் மீது மிக்க அன்பு கொண்டு உள்ளம் உருகிக் கண்ணீர் மல்கிப் பாடும் இசைப்பாடல்கள் இறைவனின் உள்ளத்தைத் தொட்டு விடுகின்றன. இறைவன் புகழை ஏந்திப்பாடும் அடியார்களின் உள் ளம் இறைவனோடு ஒன்றிவிடுகிறது.

இசைப்பாடலால் வழிபடும் அடியார்க்கு இறைவன் அருள் பாலிக்கின்றான். இசை தனது ஆற்றலால் இறைவனை அடியார்கள் பால் இசைவிக்கின்றது. இசையை அறிந்தால் இறைவனை அறியலாம் என்பது ஆன்றோர் வாக்கு.

"நாதம் பரத்தில் லயித்திடுமதனால்
நாதமறிந்திடப் பரமுமறியலாம்"
என்று திருமூலர் பாடலிலும் இதே கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இசைக்கலை ஒரு தெய்வீகக் கலையாக போற்றப் படுகிறது.

"நாதம் என்னும் தத்துவம் எல்லாப் பொருள்களிலும் இரண்டறக் கலந்து அருவமாக அமைந்துள்ளது.

அந்த நிலையில் பொருள்களின் அசைவினால் காற்றில் ஏற்படும் அதிர்ச்சியே ஒலிக்குக் காரணம் என அறிவியல் நமக்குத் தெரிவிக்கின்றது. மனிதன் பேசும்போது அவன் வாயில் உட்புறம் இருக்கின்ற காற்றில் வாயுறுப்புக்களால் அதிர்வு ஏற்பட்டு, ஒலி உண்டாகிறது. வீணையில் ஒரு தந்தியை மீட்டும்போது காற்றில் அதிர்ச்சி ஏற்பட்டு ஒலி உண்டாகிறது. மகாகவி பாரதியார் இதைப் பின்வருமாறு அழ குறக் கூறியுள்ளார்.

மண்ணுலகத்து நல்லோசைகளை காற்றெனும் வானவன் கொண்டு வந்தான். பண்ணிசைத் தவ்வொலிகளனைத்தையும் பாடி மகிழ்ந்திடுவோம். ஒலி வடிவான இறைவன் படைத்த உலகம் ஒலி மயமானது.

விலங்குகள், பறவைகள் போன்ற உயிர்உள்ளவைகளும் கடல், அருவி காற்று போன்ற உயிரில்லாத இயற்கைப் பொருள்களும் ஒலியுடையனவாய் இருக்கின்றன.

பறவைகள், விலங்குகள் முதலியவைகளின் ஒலிகளைக் கேட்டு மனிதன் மகிழ்கிறான். குயிலின் இனிய குரலையும், அருவியின் ஒலி யையும் வண்டின் ரீங்காரத்தையும் கேட்டு அவன் இன்புறுகிறான்.

பல்வேறு ஒலிகளின் இனிமை அவன் உள்ளத்தைக் கவர்க்கிறது. மகாகவி பாரதியார் ஒரு பாடலில் இதனை அழகுற வர்ணித்து, இவ்வித இசையினிலே என் நெஞ்சைப் பறிகொடுத்தேன் எனப் பின்வருமாறு பாடுகிறார்.

கானப் பறவை கலகலெவெனு
மோசையிலும்




காற்று மரங்களிடைக் காட்டு மிசை
களிலும்"

இயற்கை தரும் இன்னொலிகளைக் கேட்டு மனிதன் சிந்திக்கிறான். இதுபோன்ற இன்னொலிகளைக் கருவிகளில் இசைப்பதற்கு அவன் முயன்றான் என எண்ணுவதற்குப் பழங்காலத்தைச் சேரந்த சங்கப் பாடல்கள் ஆதாரங்களாக விளங்குகின்றன.

மூங்கிலில் வண்டுகள் துளையிட்டு அந்தத் துளைகளில் காற்றுப் புகுந்து வெளியேறும்போது இனிய ஒலி பிறந்தது. அருவி நீரின் இனிய ஓசை முழவு போல் ஒலித்தது.

(19 ஆம் பக்கம் பார்க்க)



"இயற்கை தரும் இன்னொலிகளைக் கேட்டு மனிதன் சிந்திக்கிறான். இது போன்ற இன்னொலிகளைக் கருவிகளில் இசைப் பதற்கு அவன் முயன்றான் என எண்ணுவதற்குப் பழங்காலத்தைச் சேர்ந்த சங்கப் பாடல்கள் ஆதாரங்களாக விளங்குகின்றன. மூங்கிலில் வண்டுகள் துளையிட்டு அந்தத் துளைகளில் காற்றுப் புகுந்து வெளியேறும்போது இனிய ஒலி பிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மகுடம்' எஸ்.பொ. சிறப்பிதழ் அறிமுகமும் இலக்கியச் சந்திப்பும்







கல்முனை இலக்கிய நண்பர்களின் ஏற்பாட்டில் 'மகுடம்' எஸ்.பொ. சிறப்பிதழ் அறிமுகமும்–இலக்கியச் சந்திப்பும் அண்மையில்சாய்ந்த மருது மல்ஹரூஸ்ஸம்ஸ் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது.

எழுத்தாளர் கலாபூசணம் ஏ.பீர் முகம்மது தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், எஸ்.பொ.சிறப்பிதழின் சிறப்புப் பிரதிகளை ஓய்வு நிலை அதிபர் கவிஞர் அல்ஹாஜ் எஸ்.அகமது சாய்ந்தமருது, அஞ்சல் அதிபர் எம்.எம்.ஏ. முபாரக் மட்டக்களப்பு, கல்வியியல் கல்லூரி விரிவு ரையாளர் ஏ.எம்.நியாஸ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இலக்கியச் சந்திப்பில் நாவலாசிரியர் ஆர்.எம்.நௌசாத், மகுடம் ஆசிரியர் மைக்கல் கொலின், கவிஞர்களான சடாச்சரம், ரியாஸ் குரானா, மருதூர் ஏ.ஹசன், விஜிலி நபீஸ், எஸ்.எம்.அமீர், எஸ். ஜனூஸ், பெண் கவிஞர்களான மதுரா, ஏ.மஜீர், ஜில்பிகா, செரிப் அ.அ.பாஸ்வா, எம்.எம். நூறுல் ஹக், பாலமுனை பாரூக், அலறி ஜெமில் கதீர், புதுமைவாணன் மூர்சித், அன்சார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (9)

# மனிதனை மனிதனாக வாழ வைப்பதில் இசை வகிக்கும் பங்கு....

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன் அறிவின் திறத்தால் மனிதன் பல இசைக் கருவி களைக் கண்டு பிடிப்பதற்கு மேற்கூறிய இயற்கை தந்த இன்னொலிகள் முன்னோடிகளாக விளங்கின எனக் கவிஞர் ஊகிக்கின்றார்.

*ஆடமைக் குயின்ற அவிர் துளை மருங்சின்*
*கோடையஅவ்வழி குழலிசையாகப்*
*பாடு இன் அருவிப் பனிநீர இன்னிசைத்*
*தோடு அமை முழவின் துதைகர லாகக்*
*கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு*
*மலைப்புஞ் சாரல் வண்டு யாழாக*
*இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து......*
*(அகநானூறு 82: 1-6)*

இயற்கையின் இன்னொலிகளைச் செயற்கை இசைக்கருவிகளின் இசையொலிக்கு உவமித்துள் ளார் கவிஞர். இவ்விருவித ஒலிகளுக்குமிடையே உள்ள ஒற்றுமையைப் பரிபாடல் ஒன்று வழங் கியிருக்கிறது. திருப்பரங்குன்றத்தில் பாணர்கள் இசைக்கும் இனிய யாழினது இசை ஒரு பக்கத்தில் ஒலித்தது. மறுபக்கத்தில் திருப்பரங்குன்ற மலையில் பூத்துள்ள பூக்களில் உள்ள தேனை உண்பதற்காக வந்த வண்டுகளில் இன்னிசை எழுந்தது. ஒரு பக்கத்தில் கணுக்களையுடைய புல்லாங்குழலின் இனிய ஓசை காற்றில் மிதந்து வந்தது. மறுபக்கத்தில் தும்பிகள் இசைத்த பரந்த இசை ஒலித்தது. இதைவிட மண்ணினால் செய்யப்பட்ட மார்ச்சனை மூழ்கியது. ஒரு பக்கத்தில் வைக்கப் பெற்ற முழவு ஒருபுறம் முழங்கியது. மற்றொரு புறத்தில் மலை யினின்றும் விழும் அருவி நீர் ஒலித்தது. இசையில் தேர்ச்சிபெற்ற கூத்தியர் ஒருபுறம் ஆட மறுபுறம் வாடைக்காற்று வீசுதலால் புங்கொடிகள் அசைந் தாடின. ஒருபுறம் பாடினி பாலைப்பண் என்னும் இனிய பண்ணைப் பாட மறுபுறத்தில் தோகையை விரித்து ஆடும் மயிலின் குரல் எழுந்தது. இவ்வாறு திருப்பரங்குன்றத்தில் இயற்கை இன்னொலிகளுக்கு உவமையாக யாழ், குழல், முழவு, கண்டப் பாடல் ஆகிவற்றின் இசையொலி களைப் பாடலாசிரியர் நயமுறக் கூறியுள்ளார்.

*ஒரு திறம் பாணர் யாழின் தீங்குரல் எழ*
*ஒரு திறம் பாணர் வண்டின் இமரிசை எழ*
*(பரிபாடல் 17: 9-21)*

ஆதியிலே மனிதன் தன் உள்ளத்தில் எழுந்த கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்த பல்வேறு ஒலிகளைப் பிறப்பித்தான். பல்வேறு சைகைகளும் இதற்குப் பயன்பட்டன. இதன் பின்பு இந்த ஒலிகளிலிருந்து படிப்படியாகச் சொற்கள் பிறந்தன. முதன்முதலில் மனிதன் இந்தச் சொற்களைப் பேசிச் சிரித்து மகிழ்ந்தான். சொற்களைக் கொண்டு அழுது புலம்பினான். குயி லின் இசை, வண்டுகளின் ரீங்காரம் ஆகிவற்றைக் கேட்ட மனிதன் சிந்திக்கத் தொடங்கினான். அவன் எழுப்பின ஒலியை முறைப்படுத்தியபோது இன்னொலி எனும் இசை பிறந்ததைக் கண்டான். இதைத்தான் கூத்தநூல் இயற்றிய சாத்தனார் ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே என்று குறிப்பிட்டார். இவ்வாறு பிறந்த இசை முதலிலே ஓரிரு சுரங்களைக் கொண்டதாக இருந்தது. இதன் பின்பு மூன்று, நான்கு ஐந்து சுரங்கள் கொண்ட இசையாக வளர்ந்தது. பழங்காலத்தில் முதன் முதலில் இருந்த ஐந்திசைப் பண்கள் இதற்கு உதா ரணங்களாக விளங்கின.

இறுதியில் ஏழு சுரங்களும் பயன்படுத்தப்பட்டு ஏழி



சையாக உருவானது. அருவியின் ஓசையில் தாளம் இருப்பதைக் கண்ட மனிதன் இசையுடன் தாளத் தையும் இணைத்தான்.

வெறும் இசையோடு தன் அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் வெளியிடும் எளிய சொற்களை இணைத்து மனிதன் நாட்டுப் பாடல்களைப் பாட ஆரம்பித்தான். அவன் கண்ட அனுபவம் வாழ்வில் அனுபவித்த இன்ப துன்பங்கள் அறிந்த உண்மை கள் இவை. எல்லாவற்றையும் நாட்டுப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தினான். நாட்டுப் பாடல்கள் இலக்கண வரம்புக்கு உட்படாதவை. ஆனால், அவை பொருள் ஆழமும், இசை நயமும் உவமை அழகும் கொண்டு விளங்கியதால் கேட்போர் உள்ளத்தில் அப்படியே எடுத்துச் செல்லும் தன்மை வாய்ந்த வையாக இருந்தன. இரும்பைக் காந்தம் இழுப்பது போன்று அவை கேட்போர் மனத்தை இழுத்துச் செல்வன.

அன்றும் – இன்றும் நம் நாட்டில் பெரும்பாலானோர் விவசாய மக்களே. வேளாண்மைத் தொழிலில் ஈடு பட்ட மனிதன் தான் செய்யும் தொழிலுடனே நாட்டுப் பாடலை இணைத்துக் கொண்டான். வயலில் உழவு செய்யும்போது பாட்டும்,மாடு மேய்க்கும்போது மனி தன் புல்லாங்குழலையும் இசைத்தான். நடவோடு பெண்களின் நாட்டுப்பாடல் ஒலித்தது. அறுவடையில் பாட்டு குருவிகளை விரட்டும்போது ஆலோலப்பாட்டு. வயலில் களையெடுப்பில் பாட்டு, ஏற்றம் இறைக்கும் போதும் கதிர் அறுக்கும் போதும் அவன் தன் அலுப்பை மறக்கச் செய்ய நாட்டுப் பாடல்களைப் பாடினான்.

கிராமத்தில் வாழும் அவனுக்கு வாழ்க்கையில் எத் தனையோ சோதனைகள், ஏமாற்றங்கள், இன்னல் கள் ஏற்பட்டன. இந்த முடிவில்லாத துன்பங்களை அவன் இனிய எளிய பாடல்களில் வெளியிட்டான். வாழ்விழந்த பெண் தனக்கு உண்டான ஆற் றொணாத துன்பத்தை ஒப்பாரியில் காட்டினாள். இந்த ஒப்பாரிப் பாடல்களில் உணர்ச்சி பொங்கி வழிந்தது. அவைகளிலுள்ள உருவக உவமைகள் அவைகளைக் கேட்போரின் நெஞ்சைத் தொட்டன. அவன் சாலையில் வண்டியோட்டிச் செல்லும்போது உற் சாகத்துடன் தன் உள்ளத்தில் எழுந்த இன்ப உணர்ச்சி களையும் காதல் உணர்வு களையும் (தென் பாங்கு) தெம்மாங்குப் பாடலில் பொதிந்து வைத்தான்.

இவ்வாறு எளிய சொற்களை இனிய இசை யில் இசைத்து அமைக்கப்பெற்ற நாட்டுப் பாடல்கள் மூலம் முதலில் மனிதன் தன் உள் ளக் கிடக்கைகளையும் உணர்ச்சிகளையும் ஆசைகளையும் ஏக்கங்களையும் இன்ப, துன்பங்களையும் சுவை குன்றாமல் அமைத் துப் பாடினான். இவ்வாறு இலக்கண வரம்புக்கு உட்பட்ட இசைப் பாடல்களுக்கு முன் னோடியாக நாட்டுப் பாடல்கள் திகழ்ந்தன.

மனிதனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தி லும் இசை பயன்படும் வகையில் அமைந்துள்ளது. குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாய் ஒரு தாலாட்டுப் பாடலைப் பாடின உடனேயே குழந்தை அயர்ந்து தூங்கிவிடுகிறது.

மனிதன் பல்வேறு தொழில்களில் ஈடுபடும்போது இசை ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. திருமணத் தின்போது தவில், நாதஸ்வர இசை நலுங்குப் பாடல், லாலிப் பாடல் ஆகியவை இசைக்கப்படுகின்றன. கோவிலில் அன்றாடப் புசைகளிலும் திருவிழாக் களிலும் பக்திப் பாடல் இன்னிசையுடன் அடியார் களால் பாடப்பெறுகின்றன.

நாதஸ்வர இசை இன்னொலி எங்கும் நிறைந்து நின்றது. இறப்பின்போது ஒப்பாரிப் பாடல் ஒலிக் கின்றது. இவ்வாறு மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும் இசை ஓர் இன்றியமையாத அங்கமாக விளங்குகின்றது.

காலம் செல்லச் செல்ல பொருள் பொதிந்த யாப்புச் செய்யுள்களையும் பாடல்களையும் மனிதன் இயற்ற ஆரம்பித்தான். இவைகளை இசையோடு பாடமுயன்றான். நாட்டுப் பாடல் வடிவிலிருந்த பாடல்கள் இப்பொழுது பொருள் செறிந்த யாப்பு அமைப்புடன் இசைபயன்படுத்தப்பட்டது. ஒருசுருதியை ஆதார சுருதியாக வைத்துப்பாடும் பழக்கம் ஏற்பட் டது. கீதம் உண்டாயிற்று. கீர்த்தனை இயற்றப்பட்டது. சுரஜதிகளும் வர்ணங்களும் உருவாயின. பல்வேறு தாளங்களில் இவை அமைக்கப்பெற்றன. இசை இலக்கணம் வகுக்கப்பட்து. இவ்வாறு ஓசை பண் பட்டசெம்மைப்படுத்தப்பட்ட இசையாக உருவெடுத்து இன்று அவை பல்வேறு பரிமாணங்களையடைந்து சாதி, மதம், இன பேதம் கடந்து வியாபித்துள்ளது எனலாம். மொத்தத்தில் மனிதனை மனிதனாக வாழவைப்பது இசையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பூர்வீக தனுஷ்கோடியான வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம்

நயினை நாகமணி கோபாலகிருஷ்ணன்



இலங்கையின் பூர்விக தனுஷ்கோடி என்று போற்றப்படுகின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தெய்வீகத்திருத்தலம்தான் யாழ்.வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று வரலாற்றுச் சிறப்பை தன்னகத்தே கொண்டு வழிபடும் அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்ற அற்புதத் தெய்வமாக யாழ்.வில்லூன்றி வீரகத்தி விநாயகர் பெருமான் விளங்குகின்றார். விநாயகன் அருள் அலையில் அள்ளுண்ட அடியவர்கள் அகிலம் அனைத்திலும் அல்லல் அற்று அருள் வாழ்வு வாழ்கின்றனர். வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் வள்ளலாக யாழ். வில்லூன்றி வீரகத்தி விநாயகப் பெருமான் விளங்குகின்றார்.

இராமாயணத்துடன் தொடர்புடைய வரலாற்றுச் சிறப்பைக் கொண்டது இந்த ஆலயம். இராவணனைச் சங்காரம் செய்த இராமபிரான் வில்லை ஊன்றி வெளிப்பட்ட தீர்த்தத்தில் தீர்த்தமாடி வீரத்தைத் தந்த வீரகத்தி விநாயகனை வழிபட்டதாக தலவரலாறு கூறுகின்றது. 'குன்றினுச்சி மேல்விளங்கும் கொடி மதில் சூழ் இலங்கை அன்றி நின்ற வரக்கர் கோனை யருவரைக்கீழ் அடர்ந்தாய்' என்று திருஞானசம்பந்தர் சுவாமிகள் இடர்களையும் திருப்பதிகத்தில் சொன்னவாறு இராமாயணம் இராம பாலம் என்பவை மற்றும் வில்லூன்றி என்ற சொற்பதங்கள் பூர்வீக வரலாற்றுச் சின்னங்கள். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயமும் வில்லூன்றி புனித தீர்த்தக்கேணியும் பூர்வீக தனுஷ்கோடி என்ற சிறப்புப் பெயர் கொண்டு விளங்குகின்றது.

இந்தியாவையும், இலங்கையையும் இணைக்கின்ற பாக்குநீரிணையில் தென்படுகின்ற திட்டு இராமர் பாலத்தின் வரலாற்றுச் சின்னம்தான் என்பது இந்துக்களின் வாதமாகவுள்ளது. இந்தியாவில் - இராமேஸ்வரத்தை அண்டி இராமர் தீர்த்தம், சீதாதீர்த்தம், இலட்சுமண தீர்த்தம் என்பன தனுஷ்கோடியில் உண்டு. இராமேஸ்வரத்தை அண்டிய தீர்த்தங்கள் அந்தத் தீர்த்தக் கேணிகளுக்கும் வில்லூன்றி புனித தீர்த்தக்கேணிக்கும் பூர்விகத் தொடர்பு உண்டு என்பதை அந்தக் கேணிகளிலும் வில்லூன்றி புனித தீர்த்தக் கேணியிலும் தீர்த்தமாடுபவர்களால் உணரமுடியும். பூர்வ தனுஷ்கோடி என்ற சிறப்புக்கு உதாரணமாக விளங்குவது வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம்.

இந்து ஆகம விதிமுறைகளுக்கு அமைய இந்து ஆலயங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதை செயலில் காட்டி அனைத்து ஆலயங்களுக்கும் நிர்வாக வழிகாட்டலை வழிகாட்டி நிற்கின்ற ஓர் ஆலயமாக யாழ்.வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம் திகழ்கின்றது. ஆலயங்களின் நிர்வாகக் கட்டமைப்பு இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதற்கு ஒரு முன் உதாரணமாக எந்த விளம்பரமும் இல்லாமல் செயலில் காட்டி நிற்கின்ற தனித்துவமான ஆலயமாக விளங்குகின்றது யாழ்.வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாகம்.

வடமொழியும், தென்தமிழும், மறைகள் நான்கும் ஆயினான்காண் என்றவாறு வடமொழியுடன் சமனாக பன்னிரு திருமுறைகள் உரிய பண்ணோடு ஓதப்படுகின்றது. "அர்ச்சனைப் பாட்டேயாகும் என்றும் பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்" என்றும் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் சொன்னவாறு திருமுறைப் பாசுரங்கள் அவ்வப்போது உரிய பண்ணோடு ஓதப்படுகின்றன. தேவாரத்தால் எம்பெருமான் அர்ச்சிக்கப்படுகின்றார்.

"வான்முகில் வளாது பெய்க" பாடல் எப்பொழுது பாடப்பெற வேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக இந்த ஆலயத்தில் ஓதப்படுகின்றது. பஞ்சபுராணம் ஓதப்பட்ட பின் குருக்களின் ஆசீர்வாதத்தின் பின் வான்முகில் வளாது பெய்க பாடப்பட்டு திருச்சிற்றம்பலம் சொல்லி முடிக்கப்படும். வசந்த மண்டபப் பூசை நிறைவுறும். தேர் இழுப்பதற்கு முன் திருப்பல்லாண்டுப் பாடல்கள் அத்தனையும் உரிய பண்ணோடு ஓதப்பட்ட பின்தான் தேர் இழுக்கப்படும். சித்திரா பூரணை தினத்தன்று தீர்த்த வாரிதி முடிந்தபின் சித்திரபுத்திரர் கதை படிக்கப்பட்டு ஆலயத்துக்கான கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு "உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்றவாறு ஆலயக் கணக்கறிக்கையை எம்பெருமானுக்கு சமர்ப்பணமாக்கி பூசை செய்து பெறப்படுகின்றது. அனேகமான ஆலயங்களில் தீவட்டி பிடித்தல், குடை பிடித்தல், வாகனம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு சம்பளத்துக்கு வேலையாள்கள் அமர்த்தப்படுகின்றனர். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தொண்டாகப் பலர் தாமே முன்வந்து செய்கின் றனர். மேற்சொன்னவை யாவும் இந்த ஆலயத்தின் தனித்துவமான செயற்பாடாகும். அனைத்து ஆலயங்களுக்கும் ஒரு வழிகாட்டல் நடைமுறையுமாகும். சரித்திரப் பிரசித்திபெற்ற பல ஆலயங்களுக்கு நாம் சென்றால் திருப்பணிகளுக்கு பணம் தாருங்கள் என்று ஒலி பெருக்கியில் இடைவிடாமல் அறிவித்துக் கொண்டே இருப்பார்கள். இந்த ஆலயத்தில் தேவாரத் திருமுறைகள்தான் ஒலித்துக் கொண்டிருக்கும். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு திருப்பணி நிறைவுறும். இந்த ஆண்டு முன்கோபுர வாசல் மண்டபம் அழகுற நிர்மாணிக்கப்பட்டு காட்சி தருகின்றது. எந்தவித விளம்பரமும் இல்லாத திருப்பணிகள்

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் தொடர் கதாப்பிரசங்கங்கள் இந்த ஆலயத்தில் அந்தக் காலங்களில் நடைபெற்றுள்ளன. சைவப் பெரியார் சோமசுந்தரம் இராசரத்தினம் என்பவரால் ஆலயமும் புனித தீர்த்தக்கேணியும் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளன. தற்போது அவரின் புதல்வர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் அவர்களின் புதல்வர்களால் ஆலய நிர்வாகம் திறம்பட நடைபெற்றுவருகின்றது.

சைவப்பெரியார் அமரர் சோ.இராசரத்தினத்தின் காலத்தில் இருந்தே நயினை, நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை அடியார்கள் இந்த ஆலயத்தில் இரவு தங்கி நல்லூரான் தேர்த்திருவிழாவன்று அதிகாலை நல்லூர் கந்தன் ஆலயத்தைச் சென்றடைவார்கள். அந்தக் காலம் தொட்டு இந்தக் காலம்வரை "முன்னைப் பழம் பொருட்டும் முன்னைப் பரம்பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னவாறு திருவருள் வழி நடத்துகின்றது. வில்லூன்றி வீரகத்தி விநாயகன் திருத்தாழ் போற்றி.







## 'அவள் ஒரு தனித்தீவு' நூல் வெளியீடு



கவிச்சுடர் சிவரமணியின், 'அவள் ஒரு தனித்தீவு' கதையும் கவிதையும் நூல் வெளியீட்டுவிழா கடந்த 12 திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு கவிஞர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மங்கள விளக்கை சிரேஷ்ட சட்டத்தரணி ஆ.ஜெகசோதி ஏற்றி வைத்தார். தனபாலசிங்கம் தலைமையுரை ஆற்றினார். நிகழ்வின் முதன்மை அதிதியான நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கம் சிறப்புரையாற்றினார். நூலாசிரியர் முதற்பிரதியை நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கினார். நூலாசிரியரைக் கௌரவித்து பட்டாடை வழங்கப்பட்டது. மூத்த ஊடகவியலாளர் திருமலை நவம் விமர்சன உரையாற்றினார். நூலாசிரியர் ஏற்புரையை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# அனைத்துலக தமிழ் உரைநடை ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கு



14ஆவது அனைத்துலகத் தமிழ் உரை நடை ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கத்தின் தொடக்க நாள் விழா கடந்த மாதம் 22ஆம் திகதி வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வின்போது மன்னார் "கலையருவி" அமைப்பின் இயக்குநரும், "மன்னா" என்ற மாதாந்த கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியரும், மன்னார் தமிழ்ச் சங்க நிறுவுநருமான அருட்திரு தமிழ்நேசன் அடிகளாருக்கு அவரின் மேலான தமிழ்ப் பணிகளைப் பாராட்டி "தமிழ் முகில்" என்ற சிறப்பு விருது வழங்கப்பட்டது. யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், தமிழ்நேசன் அடிகளாருக்கு பொன்னாடை போர்த்தி இந்தச் சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்தார். இந்தியாவில் இருந்து வருகை தந்த 38 தமிழ் அறிஞர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். யாழ் பல்கலைக்கழக வேந்தரான ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ். பத்மநாதன் இம்மாநாட்டின் ஆதாரசுருதி உரையை வழங்கினார். சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறைப் பேராசிரியர் கனக சபாபதி நாகேஸ்வரன் இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். இம்மாநாட்டு நிகழ்வின் போது இசை அரங்கம், தொடக்கவிழா அரங்கம், நூல் வெளியீட்டு அரங்கம், விவாத அரங்கம், கருத்தரங்கம், காட்சிவழிக் கருத்தரங்கம், பாராட்டு அரங்கம், நாட்டிய அரங்கம் எனப் பல்வேறு அரங்கங்கள் இடம்பெற்றன. (56)









# நூல் வெளியீட்டு விழா


வைத்தியர் அ.ஸதீஸ்குமார் எழுதிய நிலக்கரி மின் ஆலையில் சம்பூர் என் நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருகோண மலை யேசூட் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விசேட விருந்தினர்களாக திருகோணமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், வன்னி மாவட்ட புதிய சனநாய மாக்சிசக் கட்சிச் செயலாளர் நி.பிரதீபன், சிரேஷ்ட ஊடகவியலாளர் பொ. ச சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். (4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சுகளுக்கு நஞ்சூட்டும் மெகாத் தொடர்களுக்கு முடிவு கட்டுவோம்

அன்ரனி பீற்றர்



திரும்பத் திரும்ப ஒன்றைச் சொல்லுகின்ற பொழுதும், செய்கின்ற பொழுதும், பார்க்கின்ற பொழுதும் நாம் அதற்குப் பழக்கப் பட்டவர்களாகி விடுகின்றோம். இது நன்மைக்கும் தீமைக்கும் பொருந்துவதாகும். கற்றல் செயற்பாட்டிலே திரும்பத் திரும்பச் செய்து பார்க்கின்ற பொழுது கணிதம், விஞ்ஞானம், செய்முறைப் பாடங்களில் பயிற்சியின் மூலம் சிறந்த பயனைப் பெறமுடியும். அவ்வாறே தீமையின் ஆளுகையும் எம்மைச் சூழ்ந்து கொள்கின்றது. இதற்குத் தொலைக் காட்சியிலே காண்பிக்கப்படும் நீண்ட தொடர்கதைகள் வெளிப்படுத்தும் நல்லவை போன்று தோற்றமளிக்கும் நச்சுக் கருத்துக்களைக் குறிப்பிடலாம். எமது கல்வி, கலை, கலாசாரம், பண்பாட்டுப் பாரம்பரியம், ஒழுக்க விழுமியங்கள் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட எமது வாழ்க்கை முறையில் உயிரிலும் மேலான சொத்தாக மதிக்கப்படுவது கல்வியாகும். எத்தனை பிரச்சினைகள், இல்லாமைகள், இயலாமைகள் வந்தபோதிலும் கல்வியை நாம் கைவிடவில்லை. கல்வியும் எம்மைக் கைவிட்டதில்லை. இன்று மின்னாமல் முழங்காமல் எம் வாழ்வியலையே தலைகீழாக மாற்றுகின்ற செயற்பாட்டைத் தொலைக் காட்சித் தொடர்களே கச்சிதமாக நிறைவேற்றுகின்றன என்பது பல கல்வியியலாளர்கள், சமூகவியல், உளவியலாளர்களின் கருத்தாகவும் இருக்கின்றது. கல்வியினாலும் பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களாலும் உயர்வாக எண்ணப்பட்ட எமது தமிழ்ச் சமுதாயம் பலவிதமான நெருக்கீடுகளால் களையிழந்துள்ளது. இன்றைய இளைய சமுதாயத்தைத் தீய வழியில் இட்டுச் செல்வதற்கு (மது, போதைவஸ்து வன்கொடுமைகள்) வீடுகளிலே ஆவலாக நாள் முழுதுமே பார்த்து மகிழ்கின்ற மெகாத் தொடர்களில் காட்டப்படும் காட்சிகளும், பாவிக்கப்படும் வார்த்தைகளும், செயல்முறைகளுமே காரணமாகும். இளம் பிஞ்சுகளின் நெஞ்சங்களிலே, நஞ்சை வளர்க்க வீடுகளும் தாய் தந்தையர்களுமே முதற் காரணமாக இருக்கின்றனர். சின்னஞ்சிறுசுகள் கல்வியிலே நாட்டமிழந்து ஒழுக்க முறைகளிலே கீழ்ப்படிவில்லாமல், சொற்கேளாமல், எதிர் வார்த்தை பேசுகின்றனர், வீட்டை விட்டு வெளியேறுதல், சில நாள்கள் வீட்டுக்கே வராமல் இருத்தல், பாடசாலைக்குச் செல்லாமல் வீண் வம்புகளில் ஈடுபடல், பெற்றோரின் புத்திமதிகளை கேளாது விடுதல், இறுதியில் தாம் நினைத்த படியே வாழ்ந்து சமூகச் சீரழிவுகளில் ஈடுபட்டுத் தன்னையும் தன் குடும்பத்தையும் சீரழித்தல். இவ்வாறு இவை யாவையும் செய்து முடிக்க ஆரம்ப அத்திபாரம் இட்டது மெகாத் தொடர்களிலே வரும் காட்சிகளே. குடும்பங்களைப் பிரித்துச்சண்டை சச்சரவுகளை ஏற்படுத்தி வன் முறைக் குத்தூபமிடுகின்றது என்பதும் பலர் அறிந்தும் அறியாத உண்மையாகும். மொழி பெயர்க்கப்படும் மெகாத் தொடர்களில் எமது பண்பாட்டுக்குப் பொருத்தமில்லாத காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. இவற்றில் காண்பிக்கப்படும் வன்முறைகளும் சின்னஞ்சிறுசுகளின் எண்ணங்களைக் கவர்ந்து விடுகின்றன. நாள்கள், நேரம் தவறாமல் உண்ணாமல் உறங்காமல் கற்காமல் சில வீடுகளில் முழுக் குடும்பமுமே தொலைக்காட்சியை ஒற்றுமையாகப் பார்த்துக் கழிக்கின்றார்கள். பின்னாள்களில் பிள்ளைகளின் நிலையை எண்ணிக் கலங்கிக் கண்ணீர் வடிப்பதனால் பயனேதும் ஏற்படாது.

சின்னஞ் சிறுசுகள் கல்வியிலே நாட்டமிழந்து ஒழுக்க முறைகளிலே கீழ்ப்படிவில்லாமல், சொற்கேளாமல், எதிர் வார்த்தை பேசுகின்றனர், வீட்டை விட்டு வெளியேறுதல், சில நாள்கள் வீட்டுக்கே வராமல் இருத்தல், பாடசாலைக்குச் செல்லாமல் வீண் வம்புகளில் ஈடுபடல், பெற்றோரின் புத்திமதிகளை கேளாது விடுதல், இறுதியில் தாம் நினைத்த படியே வாழ்ந்து சமூகச் சீரழிவுகளில் ஈடுபட்டுத் தன்னையும் தன் குடும்பத்தையும் சீரழித்தல்.

இன்று படித்த உயர் நிலைகளில் உள்ளவர்களின் பிள்ளைகள் கூட இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருப்பது ஆரம்ப நிலைகளில் நாம் கண்டு கொள்ளாமல் விட்ட பிழைகளாகக்கூட இருக்கலாம். எந்தப் பெற்றோரும் தன்பிள்ளை சிறந்தவனாகக் கல்வியில் உயர்ந்தவனாக வரவேண்டும் என்றே எண்ணுவர். கண்டவேளையிலும் தொலைக்காட்சி முன்னே இருந்து எதனைப் பார்க்கிறார்கள் என்று அவதானிக்காமல் கண் காணிக்காமல் கை நெகிழ்ந்த பின்னர் கண்டித்துப் பயனேதும் ஏற்படாது. அன்பு,பாசம்,ஊக்கத்துடன் ஒழுக்கத்தையும்கைக் கொள்ள நாம் தகுதியுடையவர்களாக முன்மாதிரியுடன் நடந்து கொள்ள வேண்டும். எமது வாழ்வு முறையின் 50வீதங்களுக்கு மேல் பிள்ளைகள் எம்மை பின்பற்றி நடப்பர். எமது எதிர் நடத்தைகளினால் பிள்ளையின் பிஞ்சு உள்ளத்திலே ஏற்படும் எண்ண அலைகள் தொலைக்காட்சித் தொடர்களைப் பார்க்கும்போது உறுதி செய்யப்பட்டு விடுகின்றது. சந்தர்ப்பம் வரும்போது பிள்ளை அதனைப் பிரயோகிக்கின்றான். அதிலே அகப்படாமல் விலகும்போது தீமையை உணர்ந்து விடுபட்டுத் திருந்துகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. அகப்பட்டவர்கள் தொடர்கின்றார்கள். இதன் விளைவாகவே வன்முறைகளும் பிழையான வாழ்க்கை முறைகளுமாக அவர்களின் வாழ்வே இருண்டு விடுகின்றது. கண்ணியில் அகப்பட்டவர்களாகப் பெற்றோர் கலங்குகின்றனர்.

தாயானவள் தனது பிள்ளையைப் பெற்றதிலும் அவன் சான்றோன் என்று கேட்கும் பொழுதிலும் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றாள்? ஆனால் பல இன்றைய தாய்மார்கள் தன்பிள்ளை வன்முறையாளன், கொடுமையாளன் என்று அறியும் பொழுது இரட்டிப்பான துக்கம் அடைகின்றனர். கற்று உயர்ந்த உயர்தேர்ச்சிகளையெல்லாம் விட்டுவிட்டுக் காவாலி என்றுரைக்கும் கயமை நிலைகளுக்குள் தள்ளப்படுகின்றார்கள் என்றால் யார் செய்த குற்றம்? எங்கே தவறுள்ளது? நாம் கண்விழித்துக் கொண்டே தூங்குகின்றோமா? பத்திரமாக வளர்த்து பருந்துக்குப் பறி கொடுக்கின்றோமா? கட்டுப்பாட்டுடன் வளர்த்துக் கைநெகிழ்கின்றோமா? செல்லங் கொடுத்து வளர்த்து மூக்கை இழக்கின்றோமா? எம்முடைய பிழைகளை உணர்ந்து ஏற்ற வழி முறைகளை முன்னெடுப்போம்.

இழப்புக்களை விடுத்து உயர்வுக்கு வழிவகுப்போம்.

கட்டுரையாளர்: ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னு தமிழ்ப் பயிர் செழிக்க வவுனியா மண்ணில் மின்னிய மாநாடு

கே.எஸ்.சிவஞானராஜா

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகமும் வவுனியா கோயில் குளம் ஸ்ரீ அகிலாண்டேசுவரர் திருக்கோயிலும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியும் ஒருங்கு சேர நடத்திய அனைத்துலக 14 ஆவது உரை நடைத் தமிழ் ஆய்வு மாநாடும் கருத்தரங்கமும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கவினுறு மண்டபத்தில் கடந்த மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எழிலாக நடைபெற்றது. இந்தப் பெறுமதியான நிகழ்வு. சப்பிரகமுவப் பல்கைலைக்கழக மொழித் துறைப் பேராசிரியர் முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் தலைமையில் இனிதே ஆரம்பமாகியது. வவுனியா கோயில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் தலைவரும் மாநாட்டுப் காப்பாளருமாகிய சிவமணி, தமிழ்த் திரு மு.சபாநாதன், வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியும் மாநாட்டுக் காப்பாளருமாகிய தமிழ்த் திரு கு.சிதம்பரநாதன், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ்மணி கலாநிதி அகளங்கன், திருவையாறு தமிழ் ஐயா கழகத் தலைவரும், மாநாட்டு இயக்குநரும் ஔவை அடிப்பொடி முனைவருமாகிய மு.க.கலைவேந்தன், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதர் ஏ.நடராஜன், பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராசா, அஞ்சலை அம்மாள் மகாலிங்கம் பொறியியற் கல்லூரி (கோயில்வெண்ணி) மருத்துவர் கவிஞர் ச.தமிழரசன், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டடத் துறைத் தலைவர் செந்தமிழ் வித்தகர் முனைவர் கோ. தெய்வநாயகம், தஞ்சாவூர் தமிழ் வேள் உமாமகேசுவரனாரும், கரந்தைக் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.இராஜாமணி, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மேனாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், கும்பகோணம் ஔவைக் கோட்ட அறிஞர் பேரவை அமைச்சர் கவிஞர் நாகரையரசு, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் தஞ்சாவூர் முனைவர் இரா.திராவிடராணி, தஞ்சாவூர் தமிழ் வேள் உம்மாமகேசுவரனாரும், கரந்தைக் கலைக் கல்லூரி தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் தங்கமலர்க்கொடி, சென்னை பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் முனைவர் சுடலி தியாகராஜன், காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் மு.ஞானத்தாய், சென்னை ஔவைக் கோட்டறிஞர் பேரவை அமைச்சர் முனைவர் பாலின் சீனிவாசகன், கடலூர் உலகத்தமிழ்க் கழகத் தலைவர் பாவலர் கதிர் முத்தையன், சென்னை பல்கலைக்கழக தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கி.சங்கர நாராயணன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கல்பனா சேக்கிழார், தஞ்சாவூர் தமிழ்வேள் உமா மகேசுவரர், ஆங்கிலத் துறைத் தலைவர் முனைவர் கோ.சண்முகம், சென்னை ஸ்ரீ கிருஷ்ணசாமி, மகளிர் கலைக்கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் க.ஆனந்தி மற்றும் கரூர் தமிழச்சி வி.அனுசுயா, சென்னையைச் சேர்ந்தவர்களான திருமதி இரஜனி ரஜித், ஜே.சம்பத்குமார், பி.ஜான்சன், சத்தியராஜ், ம.பிரகாஷ், வல்லம் தொழிலதிபர், செவ்வாலிப முனைவர் ஆர்.ஆர். கோவிந்தராஜன் ஆகியோரும்-

புதுவை பல்கலைக்கழக சுப்பிரமணிய பாரதியார் தமிழ்ப்புலத்துறைத்தலைவர் செந்தமிழ் ஆய்வுச் சிகரம் முனைவர் இளமதி ஜானகிராமன் ஆகியோரும், இன்னும் சிறப்பாக ஈரோடு அறச்சலூர் நவரசம் கலை அறிவியல் மகளிர் கல்லூரி செயலரும் முனைவருமாகிய சி.குமாரசாமி, மாண்புமிகு யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற நீதியரசர் மாணிக்கவாசகர் இளஞ்செழியன், பேராதனைப் பல்கலைக் கழகத் தகைசால் பேராசிரியர் சி.தில்லைநாதன், பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைப்புலத் தலைவராக விளங்கியவரும் பன்னாட்டு ஒருங்கிணைப்பாளரும் முனைவருமான நா.வி.மு.நவரத்தினம், திருவையாறு ஔவை அடிப்பொடி முனைவர் மாநாட்டு இயக்குநர் மு.கலைவேந்தன்,

திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழக அனைத்துலக மாநாட்டு அமைப்பாளர் பொறிஞர் மு.க.முகில்வேந்தன் எனப் பல அறிஞர்பெருமக்கள் மாநாட்டு உரைநடை ஆய்வைச் சிறப்பித்தனர்.

**நோக்கம்**

உரைநடைத் தமிழை ஆழ ஆராய்வதும் அதனை ஆய்வு செய்வதும் விருத்தி செய்வதும் உரையாசிரிய வல்லார்களை இனங்காண்பதும், அவர்தம் கடுமை



நடையை இலகுபடுத்தலும், விளங்குமாறு பணியாற்றுவதும், பதிப்பிப்பதும் ஐயம்தெளி அரங்கை நடத்துவதும் விவாதிப்பதும் புராதன பொக்கிசங்களைத் தேடுவதுமாகும். இவை யாவற்றுக்குமாக சம்பந்தப்பட்ட நாடுகளில் உரைநடைத் தமிழ் ஆய்வு மாநாட்டை வருடந்தோறும் நடத்துதலும் அந்தந்த நாடுகளில் ஆய்வாளர்களை இனங்காணலும் உரை நடைத்தமிழ் ஆய்வுக் கட்டுரைகளைக் கோருதலும் கௌரவமளித்தலுமாகும். (இலங்கையில் பல ஆய்வாளர்களை வெளிக்கொணர்ந்ததில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெற்றி கண்டுள்ளது.)

**விடயம்**

பின்வரும் விடயப் பரப்புகளில் ஆய்வுகள் வரவேற்கப்பட்டன. உன்னதமாக்கப் பட்டன.

1. உரையாசிரியர்களின் உரைத்திறன்
2. அன்று முதல் இன்றுவரை உரைநடை
3. உரைநடை இலக்கணங்களும் வகைப் பாடுகளும்
4. உரைநடை இலக்கணங்களும் வகைப்பாடுகளும்
5. உரைநடை வளர்த்த தமிழ் அறிஞர்கள்
6. புகழ் பெற்ற உரைநடை நூல்கள்
7. பயணக் கட்டுரையும், மொழிபெயர்ப்பு நூல்களும்
8. கடிதங்களும், உரைநடை நூல்களும்
9. வாழ்க்கை வரலாற்று உரைநடை நூல்கள்
10. திறனாய்வு நூல்கள் பட்டங்களுக்கான ஆய்வுக் கட்டுரைகள்
11. அறிவியல், ஆன்மிகம், மருத்துவம், வாழ்வியல் நீதி நெறி ஒழுக்க மெய்யியல் சார்ந்த உரைநடை நூல்கள்
12. ஈழத்து அறிஞர்களின் உரைநடை நூல்கள்

மேற்சொல்லப்பட்ட அத்தனை விடயங்களிலும் உரைநடை ஆய்வுகளுக்கான கட்டுரைகள் ஏற்கனவே உள்ளீர்க்கப் பட்டன.

**இதைவிட**

உரைநடை நூல்களில் காணப்படும் கருத்து வளங்கள், முன்னுரை, அணிந்துரை, பதிப்புரை, விருத்தியுரை பொழிப்புரை, பதவுரை, மறுப்புரை, கண்டனவுரை, தனித்தமிழ் நடை, மணிப்பிரவாள நடை, ஆங்கிலம் கலந்த உரைநடை, காதல் உரை நடை, இரங்கலுரை, வெளியீட்டுரை, நயப்புரை, பேச்சு வழக்குரை, நாடாளுமன்ற உரை, ஜனாதிபதியுரை, வானொலியுரை, செவ்வியுரை, நவீன தொழில் நுட்ப இணையத்தளப் பரப்புரை, விளம்பர உரை ஆகிய யாவற்றிலும் தொனிக்கக்கூடிய உரைநடைகள் தமிழ் மொழியைச் செம்மொழியாக்குவதில் ஏற்றுக்கொண்ட பங்கு நடைமுறையில் ஏற்படுகின்ற குறையும், நிறையும் மாநாட்டில் தக்கவோர் இடத்தைப் பெற்றுக் கொண்டன.

**வெளியீடுகள்**

இளம்பூரணர் சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், மயிலை நாதர், பெரியவாச்சான் பிள்ளை, க.சு.பிள்ளை, ந.மு.வே.நாட்டார் ஔவை, துரைசாமிப் பிள்ளை, புலியூர் கேசிகன், வே.சாமி நாதையர், மகாவித்துவான் மயிலை சீனி வேங்கடசாமி, பாரதியார் வி.க.கண்ணதாசன், மீனாட்சி சுந்தரம்பிள்ளை இன்னும் பலரது உரை நடைப் படைப்புக்கள் மற்றும் கட்டுரைகள் சிறப்புக்குரியன. வரலாற்று மேதைகளான நேரு, காந்தி, சுபாஸ் சந்திரபோஸ், அம்பேத்கார், கோகிலாம்பாள், மு.வரதராஜனார், விவேகானந்தர், பாவாணர், ரமணர், சாரதா தேவி அம்மையார், சாலை இளந்திரையனார், இஸ்மாயில், அண்ணாத்துரை, காமராஜர், கருணாநிதி, கல்கி, கிருபானந்தவாரியார், சாம்பமூர்த்தி, குன்றக்குடி அடிகளார், தண்டபாணி தேசிகர் இன்னும் பலரது உரைநடை வெளியீடுகள் ஆய்வுக்குரியன.

**ஈழத்தவர்**

அம்பிகைபாகர் (1884-1904), அம்பலவாண பண்டிதர் (1814-1879), அரசகேசரி(1450-1520), ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் (1822-1879), ஏரம்பையர் (1847-1914), கணபதிப்பிள்ளை (1845-1895), கணேச பண்டிதர் (1843-1881), கதிரைவேற்பிள்ளை (1829-1904), கதிரைவேற்பிள்ளை (1844-1907), கந்தப்பிள்ளை (1766-1842), கனகசபைப் புலவர் (1829-1873), குமார குலசிங்க முதலியார் (1826-1889), குமாரசுவாமி முதலியார் (1791-1874), குமாரசாமிப் புலவர் (1855-1922), சங்கர பண்டிதர் (1821-1871), சதாசிவப்பிள்ளை (1820-1896), சபாபதிநாவலர்(1843-1903), சரவணமுத்துப்பிள்ளை (1848-1916), சரவணமுத்துப்புலவர்(1849-1925), சிதம்பரப்பிள்ளை (1889-1960), சிவசம்புப்புலவர் (1852-1910), சிவப்பிரகாசப்பண்டிதர்(1864-1916), சிவானந்தையர் (1873-1916), சின்னத்தம்பிப் புலவர் (1716-1780), செகராச சேகரமன்னர் (1410-1485), சேனாதிராஜ முதலியார்(1750-1840), ஞானப்பிரகாச சுவாமி(1616-1686), தாமோதரம்பிள்ளை (1832-1901), திருஞானசம்பந்த உபாத்தியாயர்(1848-1906), திருஞானசம்பந்தப்பிள்ளை (1849-1901), நடராசையர்(1844-1905), நாகநாதபிள்ளை (1824-1884), பண்டித ராசர்(1689-1755), பீதாம்பரப்புலவர்(1819-1889), பொன்னம்பலப் பிள்ளை,(1836-1902), மாவை பொன்னம்பலம்பிள்ளை (1891-1970), மயில்வாகனப் புலவர்(1779-1816), முத்துக் குமாரக்கவிராயர் (1780-1851), முருகேச பண்டிதர் (1830-1900), வரதபண்டிதர் (1656-1716), விசுவநாத சாத்திரியார்(1836-1810), வைத்தியநாத முனிவர்(1616-1691), வைத்தியலிங்கப் பிள்ளை (1852-1901)

**மேலும் சிலர்**

விபுலானந்தர், சோமசுந்தரப் புலவர், கதிரேசர் பிள்ளை, வித்துவான் ஆறுமுகம், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, கந்தையாப்பிள்ளை, கணேசையர், முருகேசையர், சின்னத்தம்பிஐயர், சங்கரப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, கனகசபாதிஐயர், முத்துத்தம்பிப்பிள்ளை, சபாபதிநாவலர், தனிநாயகம் அடிகளார், மகாலிங்கசிவம், பார்வதிநாதசிவம், கா.பொ.இரத்தினம், சண்முகசுந்தரம், வீரமணிஐயா, நமசிவாய தேசிகர், மகாகவி உருத்திரமூர்த்தி, வேற்பிள்ளை, அப்புத்துரை, சிற்றம்பலம், பரமசாமி, திருநாவுக்கரசு, தங்கம்மா அப்பாக்குட்டி, நாகராஜன், தம்பு கனகரத்தினம், நாகலிங்கம், மரியசேவியர், பிள்ளையினார், நடராஜன் சுப்பிரமணிய ஐயர், சண்முகலிங்கன், சண்முகதாஸ், அகளங்கன், சின்னத்தம்பி, நாகேஸ்வரன், சோமசுந்தரம், மனோன்மணி சண்முகதாஸ், சிவசாமி கோபாலகிருஷ்ண ஐயர், கம்பவாரிதி ஜெயராஜ், சோ.பத்மநாதன், சிவலிங்கராஜா, வைத்தீஸ்வரக் குருக்கள், சிற்பி சரவணபவன், அம்பிகை பாகன், பண்டிதர் கந்தையா, பண்டிதர் சச்சிதானந்தன், அருட்கவி விநாசித்தம்பி, ஐயா துரையப்பாபிள்ளை, சதாசிவ ஐயர், செல்லத்துரை நவநீதகிருஷ்ண பாரதியார், நா.பொன்னையா, கைலாசபதி, சிவத்தம்பி, சபாஜெயராசா, வித்தியானந்தன், நடராஜா, சுவாமிநாதன், சிவசுப்பிரமணியம், திருச்செல்வேள், சிவராசா, மாணிக்கம், சிவசம்பு, நடராசன், முருகானந்தன், திருநாவுக்கரசு, கந்தவனம், வேலுப்பிள்ளை, சிவமகாலிங்கம், குமாரசாமி ஐயர், கோகிலா, பண்டிதர் கணேசு, பஞ்சாட்சரம் ஆகியோருடைய நூல்களும் கிழக்கு மாகாண மலையக நூல்களும் உரைநடை இலக்கியத்துக்கு மகிமை சேர்ப்பனவே.

மேற்போந்தவைகளை விட இன்னும் பல பொக்கிசங்களை நாம் தேட வேண்டியுள்ளது. இன்னும் பல மாநாடுகள் இவற்றை வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை.

அனைத்துலகத் தமிழ் உரைநடை ஆய்வு மாநாடு, தொடக்க விழா என்பதாக இருந்தாலும், ஒரு நாளில் முடிகின்ற காரியமா? ஒருநாள் போதுமா? இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பல அறிஞர்கள் இந்த மாநாட்டுக்கு வருகை தர இருந்த போதும் தூரம், நேரம், குடும்பப் பாரம், நோயின் தீரம், காலநிலையின் அகோரம் கருதியவர்களாய் சமுகமளிக்க முடியாமல் போனது வருத்தத்திற்குரியது மற்றும் நேரமுகாமைத்துவம் பேணப்படுமென்பது மிகவும் வேண்டப்படுவதுமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சாம் ரமேஸ்குமார்



# கீதையில் அர்ஜுனனின் துயரம்

இந்து தர்மத்தின் இதிகாசங்களில் மண் மீட்புக்காக மகாபாரதத்தை ஓர் இமயமென்று குறிப்பிடலாம். அதில் சொல்லாத தர்மம் எதுவுமில்லை. சொல்லப்பட்ட எதுவும் பாரதத்தில் இல்லாமலும் இல்லை. மனித சமுதாயத்துக்குத் தேவையான அத்தனை அம்சமும் அதில் பரந்து விரிந்து ஞானமாய்க் கொட்டிக் கிடக்கின்றது.

மகாபாரதத்தின் சிகரமாய் என்றென்றும் திகழ்வது கீதையாகும். அது அகிம்சை, போரியல், கர்மம், பக்தி, ஞானம், துறவு என்று முழு இறையியல் தத்துவங்களையும் உலக மக்களுக்குப் போதிக்கின்றது. அர்ஜுனனின் வார்த்தையோடு ஆரம்பித்த கீதை இறைவனான ஸ்ரீ கிருஷ்ணனின் ஞானம் கலந்த வார்த்தைகளோடு முடிவடைகின்றது. அந்தக் கீதையின் முதல் அத்தியாயமே அர்ஜுன விவாதயோகம் என்று அழைக்கப்படுகின்றது. இது அர்ஜுனனின் துயரமென்று பொருள்படும்.

பாஞ்சாலியின் அவமானத்துக்குப் பழி தீர்ப்பதற்கும் சூதாட்ட மெனும் வஞ்சகச் செயலால் கௌரவர்கள் தம்மிட மிருந்து பறித்த இராச்சியத்தை மீட்டு மக்களைக் காப்பதற்கும் ஸ்ரீ கிருஷ்ணனைத் துணையாகக் கொண்டு போர்க் களத்தை நோக்கி வருகின்றான் அர்ஜுனன்.

போருக்கு முன்னர் தன் எதிரிகளான கௌரவப் படைகளின் வீரர்கள் யார் என்பதைப் பார்ப்பதற்காக அர்ஜுனன் தான் அமர்ந்திருக்கும் தேரை கௌரவ பாண்டவ படைகளின் நடுவே செலுத்துமாறு தேரோட்டியான ஸ்ரீகிருஷ்ணனைப் பணிக்கின்றான். இறைவனான மாயவன் ஓட்டிய அந்த அழகான தேர் புழுதியைக் கிளறியபடி கௌரவப் படைகளின் முகப்பில் தரிசனமானது.

போருக்கு முன் கௌரவர்களை எதிரிகளாக நினைத்த அர்ஜுனன் போர்க்களத்துக்கு வந்த பிற்பாடு சொந்த பாசத்தால் உறைந்து போகின்றான். தன் முன்நிற்கும் கௌரவ கூட்டத்தில் தன் சகோதரர்களையும் பாட்டன்மாரையும் ஆசாரியர்களையும் மற்றும் சொந்தங்களையும் பேரிரக்கம் படைத்தவனாய் பார்வையிடுகின்றான்.

அர்ஜுனனின் சரீரம் நடுக்கமும் மயிர்ச் சிலிர்ப்பும் அடைகின்றது. காண்டீபம் அவன் கரங்களிலிருந்து மெதுவாக நழுவுகின்றது. போர்க்களத்துக்கு வரும் முன் அவனுக்குள் இருந்த போராட்டத் துடிப்பு போர்க்களத்துக்கு வந்த பின் தன் சொந்தங்கள் முன்னிலையில் கரைந்து போகின்றது.

தன் உற்ற தோழனும் இறைவனுமாகிய ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்து தழு தழுத்த குரலில், "ஜனார்த்தனா! நான் என் முன்னிலையில் சொந்தங்களையே பார்க்கின்றேன். இந்த திருதராஷ்ரப் புதல்வர்களைக் கொல்வதால் எமக்கு என்ன இன்பம் வரப்போகின்றது?" என கண்ணீரோடு கூறினான் அர்ஜுனன்.

சொந்த உறவினாலும் குரு பக்தியாலும் குல தர்மத்தாலும் வந்த இந்தக் கங்கை போன்ற பாசமும் பற்றும் வில்லுக்கு விஜயனான அர்ஜுனனின் இதயத்தை நிலைகுலையச் செய்தது. ஓர் அகிம்சையெனும் மாபெரும்போதைக்குள் அவன் மன எண்ணங்கள் எவரின் எதிர்ப்பும் இன்றிக் கட்டுக்கடங்காமல் பாய்ந்து சென்றது.

அர்ஜுனன் மேலும் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து, "நடக்க இருக்கும் இந்தப் போரில் ஒருவேளை குலம் அழிந்தால் நிச்சயம் குல தர்மங்களும் அழிவடையும். தர்மம் அழிந்த பின் குலம் அனைத்திலும் அதர்மம் மேலோங்கி நிற்கும். அதனால் குலத்தை அழித் தார்க்கு நரகமே கிட்டும். ஆகையால் நான் பெரும் பாவத்தைச் செய்ய விரும்பவில்லை. வெறும் நிராயுத பாணியாக நிற்கும் என்னை இந்த கௌரவர்கள் கொன்றாலும் அதுவும் எனக்கு நன்மையே" என்றவாறு அம்பையும் வில்லையும் போர்க்களத்தில் தூக்கி எறிந்து விட்டு கொடிய துயரத்தால் அலம்பப்பட்ட மனதையுடையவனாய் தேர்த்தட்டில் அமர்ந்தான் பாண்டுவின் புதல்வனாகிய அர்ஜுனன். தன் சீடனின் புலம்பலை அவதானித்தபடி புயலுக்கு முந்திய அமைதியாய் சிறு புன்னகையுடன் ஸ்ரீ கிருஷ்ணனின் மௌனம் நீண்டு சென்றது.

புத்தர்
சத்திரியனாக
இருந்து சாத்வீகனாய்
மாறியவர். அவ ருக்கு
வேண்டுமானால் அர்ஜுனன்
அகிம்சை வழியைக் காட்டலாம்.
இதில் புத்தருக்கும் அர்ஜுனனுக்
கும் உள்ள வித்தியாசம் என்ன
வெனில் புத்தர் அரச முடியையும்
இளவரசர் பட்டத்தையும் துறந்தவர்.
ஆனால் அர்ஜுனனோ இன்னும்
அரச முடி யைத் துறக்காதவன்.
அவனது துயரம் எப்போதும்
ஏற்புடைய தொன்றல்ல.
பொதுவாக மனித
வாழ்க்கையும் ஒரு
போர்க்களம்
தான்.

சத்திரியனாகிய அர்ஜுனன் ஒரு மக்கள் தேசத்தின் தலைவன். அவனுடைய சுயதர்மமே எதிரிகளிடமிருந்து தேசத்தையும் மக் களையும் பாதுகாப்பது. போர்க்களத்துக்குள் நுழைந்த பின் அகிம்சையைக் கடைப்பிடிப்பது என்பது இயலாத ஒன்று. அது ஓர் உண்மை வீரனுக்கு அழகான செயலுமல்ல. அதனால் அவன் தனக்குத்தானே போதித்துக் கொண்ட அகிம்சை வேண்டுமானால் பாமர மக்களுக்கு வழிகாட்டலாம். அர்ஜுனனுக்கு என்றும் வழிகாட்ட முடியாது.

இங்கு புத்தரை எடுத்தால், அவர் அரசாட்சிக் குரிய முடியைத் துறந்து துறவறத்தை மேற்கொண்டவர். மீண்டும் அவரால் ஒருபோதும் அரசாட்சியை நிறுவ முடியாது. போர் வீரர்களையும் இணைக்க முடியாது. ஏன்? போர்க்களத்தை நினைத்தே பார்க்க முடியாது. புத்தர் சத்திரியனாக இருந்து சாத்வீகனாய் மாறியவர். அவருக்கு வேண்டுமானால் அர்ஜுனன் அகிம்சை வழியைக் காட்டலாம்.

இதில் புத்தருக்கும் அர்ஜுனனுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் புத்தர் அரச முடியையும் இளவரசர் பட்டத்தையும் துறந்தவர். ஆனால் அர்ஜுனனோ இன்னும் அரச முடியைத் துறக்காதவன். அவனது துயரம் எப்போதும் ஏற்புடையதொன்றல்ல. பொதுவாக மனித வாழ்க்கையும் ஒரு போர்க்களம்தான். அதன் நன்மையும் தீமையுமே அதன் எதிரெதிர் தரப்புக்களாகும். இதற்கு நடுவே மனித மனம் அகப்பட்டு அர்ஜுனனின் துயரம்போல் வெம்பி அழுகின்றது.

வாழ்க்கையை ஒவ்வொரு மனிதர்களும் சந்தித்தே ஆகவேண்டும். அதிலிருந்து ஒருவரும் பின்வாங்க முடியாது. அர்ஜுனன் அவன் துயரத்திலிருந்து எழுந்து தன் ஆன்ம ஞானத்தைத் தொட்டதுபோல் நாமும் வாழ்வின் சிக்கல்களில் இருந்து எழுந்து எம் அகவுலக ஞானத்தைத் தொடுவோமாக.

---

## சொற்கணை விவாத அரங்கத்தில் இறம்பைக்குளம் மகளிருக்கு முதலிடம்

மொறட்டுவப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் சொற்கணை என்ற பெயரில் அகில இலங்கை ரீதியில் நடத்திய விவாத அரங்கின், வவுனியா மாவட்டப் போட்டித் தொடரில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய மன்றம், வவுனியா மாவட்டத்தில் நடத்திய இந்த விவாத அரங்கு கடந்த சனிக்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன்போது வவுனியா மாவட்டப் பாடசாலைகளாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், விபுல்ானந்தாக் கல்லூரி, இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி, பூவரசங்குளம் மகா வித்தியாலயம், சைவபிரகாச மகளிர் கல்லூரி, புதுக்குளம் வித்தியாலயம் ஆகிய அணிகள் விவாத அரங்கில் பங்குபற்றிப் போட்டியிட்டன.

அரையிறுதிப் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து பூவரசங்குளம் மகா வித்தியாலயமும், சைவபிரகாச மகளிர் கல்லூரியை எதிர்த்து இறம்பைக் குளம் மகளிர் கல்லூரியும் மோதின. இதில் பூவரசங்குளம் மகா வித்தியாலயம் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி ஆகியன வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. இறுதிப் போட்டியில் வவுனியா இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இரண்டாம் இடத்தை வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் பெற்றன. முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளுக்கு சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

(ற-ஜ-21,402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமையலறைத் தொட்டி

வடிவமைக்கப்பட்ட சமயலறைப் பாத்திரம் கழுவும் தொட்டிகள் அறிமுகமாகியுள்ளன. சிறிய அலுமாரி போன்று அல்லது வேறுபட்ட வடிவமைப்புக்களுடன், பாத்திரம் கழுவும் தொட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 35 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் ரூபா ஆகும்.




## தேவையானவை

சின்ன வெங்காயம் - 100 கிராம்
தேங்காய் - ஒரு பாதி
பச்சை மிளகாய் - 5
மிளகாய்த் தூள் - 3 கரண்டி
புளி - எலுமிச்சை அளவு
உப்பு - தேவைக்கு ஏற்ப
வெந்தயம், கறிவேப்பிலை, தேங்காய் எண்ணெய் - தாளிக்கத் தேவையான அளவு.

### செய்முறை

சின்ன வெங்காயத்தைத் தோல் உரித்து, இரண்டு இரண்டாக வெட்டி வைத்துக் கொள்ளவும். தேங்காயைத் துருவி நன்றாக வறுத்து எடுத்துக் கொள்ளவும். வறுத்த தேங்காயுடன் மிளகாய்த்தூள் சேர்த்து மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். சட்டியில் தேங்காய் எண்ணெய் விட்டு வெந்தயம், கறிவேப்பிலை போட்டுத் தாளிக்கவும். வெங்காயத்தையும் நறுக்கிய பச்சை மிளகாயையும் போட்டு வதக்கவும். நன்றாக வதங்கிய பின் தேங்காய்க் கூட்டைப்போட்டு உப்புப்போட்டு புளியைக் கரைத்து ஊற்றவும். நன்றாகக் கொதிக்க விடவும். கொதித்த பிறகு இறக்கவும். தீயல் ரெடி.

## நாளை ஆனி-02

வியாழக்கிழமை - 16.06.2016
திதி: ஏகாதசி மு.ப.11.08
நட்சத்திரம்: சுவாதி பி.இ.12.28 வரை
ராகுகாலம்: 01.23-02.53 வரை
சுபநேரம்: 07.23-08.53 வரை
ஏகாதசி விரதம்




## இல்லத்தரசிகளுக்கு...

- சமைப்பதற்கு அரை மணி நேரம் முன்னதாக அரிசி மற்றும் பருப்பு வகைகளை ஊற வைத்து வேக வைத்தால் சீக்கிரம் வெந்து விடும்.
- ஊறுகாய் செய்யும்போது உப்பை லேசாக வறுத்து போட்டால் ஊறுகாயின் மேல் வெண்மை நிறம் படியாது.
- முட்டையை வேக வைக்கும்போது தண்ணீருடன் 2 சொட்டு வினிகர் சேர்த்து வேக வைத்தால் முட்டை உடையாமல் இருக்கும்.
- எவர்சில்வர் பாத்திரத்தில் இருக்கும் கரையைப் போக்க கரை இருக்கும் இடத்தில் சிறிது புளி வைத்துத் தேய்த்து கழுவினால் கறை போய் விடும்.
- முகம் பார்க்கும் கண்ணாடியை பழைய செய்தித்தாள் கொண்டு துடைத்தால் கண்ணாடி பளிச்சென்று ஆகிவிடும்.
- இஞ்சி, பூண்டு பேஸ்ட் தயாரிப்பதற்கு இஞ்சியை விட பூண்டை சிறிது அதிகமாக சேர்த்து செய்தால் நல்ல சுவையாக இருக்கும்.
- நாம் தினமும் உபயோகிக்கும் பாத்திரங்களை சோப்புத் தண்ணீரில் ஒரு மணி நேரம் ஊற வைத்துப் பின்னர் தேய்த்துக் கழுவினால் பாத்திரங்கள் பளிச்சென்று ஆகிவிடும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 800 | 700 | 1000 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 800 | 700 | 500 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 600 | – |
| சீலா | 300 | 600 | 400 | 500 | 450 | 300 | 450 |
| விளை | 650 | 600 | 400 | 500 | 600 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 450 | 400 | – |
| கும்பிளா | 400 | 450 | 300 | 450 | 600 | 600 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 350 | 500 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 250 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 450 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 250 | 400 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 300 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 250 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 120 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 350 | – | – |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | – | 120 | 160 | 120 | 120 | – | 80 |
| கத்தரி | 200 | 180 | 240 | 180 | 240 | 200 | – | 180 |
| கரட் | 250 | 250 | 200 | 220 | 240 | 300 | – | 140 |
| மரவள்ளி | 80 | 70 | 60 | 60 | 60 | 80 | – | 50 |
| பயிற்றை | 180 | 180 | 250 | 80 | 160 | 120 | – | 160 |
| பாகல் | 250 | 220 | 200 | 240 | 220 | 200 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 120 | 160 | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 160 | 180 | 160 | 200 | – | 140 |
| பூசணி | 70 | 70 | 60 | 80 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 200 | 200 | 200 | 240 | 200 | 200 | – | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 | 60 | 80 | – | 40 |
| கீரை | 35 | 40 | 60 | 20 | 50 | 40 | – | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 45 | 40 | 40 | – | 12 |
| பச்சை மிளகாய் | 800 | 600 | 600 | 700 | 500 | 800 | – | 550 |
| புடோல் | 100 | 100 | 100 | 120 | 120 | 120 | – | 100 |
| கோவா | 180 | 180 | 200 | 180 | 180 | 220 | – | 140 |
| வெண்டி | 140 | 160 | 140 | 140 | 180 | 200 | – | 60 |
| போஞ்சி | 200 | 200 | 220 | 200 | 220 | 240 | – | 240 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 240 | 220 | 250 | – | 180 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30 | 30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 110 | 110 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 450 | 250 | 220 | 150 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 20 | 20 | – | 15 |
| கறிமிளகாய் | 200 | 260 | 140 | 240 | 240 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 160 | 160 | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 220 | 180 | 240 | 340 | 300 | – | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** கடந்த காலத்தில் செய்த உதவிக்கு, நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள், புத்தாடை நகை வாங்குவர். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.



**இடபம்:** குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடம்பரமாகச் செலவு செய்வர்.



**மிதுனம்:** பணி நிறைவேற உறவினரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.



**கடகம்:** மனதில் தெய்வீக சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபாரம் சிறப்பதால், வாழ்க்கைத் தரம் மேம்படும். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.



**சிங்கம்:** உறவினர் மத்தியில், உங்கள் மீதான மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். பெண்கள் தாய் வீட்டினரின் அன்பைப் பெற்று மகிழ்வர்.





**கன்னி:** சிரமங்களை வெல்லும் திறன் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி சிறக்கும். வருமானம் பன்மடங்கு உயரும். குடும்பத்தினருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**துலாம்:** சுயபெருமை பேசி, பிறருடைய அதிருப்திக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். இலாபம் சுமார். அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம்.



**விருச்சிகம்:** குடும்பத்தினருக்காக விட்டுக் கொடுத்துச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். விருந்து, கேளிக்கையில் உண்டு மகிழ்வீர்கள்.



**தனுசு:** வசீகரமான பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி உருவாகும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.



**மகரம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். கூடுதல் உழைப்பால் மட்டுமே தொழில், வியாபார நடைமுறை சீராகும். பண விடயத்தில் கவனம் தேவை. பணியாளர்கள் நிர்வாகத்தினரின் சட்ட திட்டத்தை மதிப்பது நல்லது.



**கும்பம்:** எதிரியை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். வருமானம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.



**மீனம்:** சாமர்த்தியமாகச் செயற்பட்டு புகழ் பெறுவீர்கள். தொழிலில் வளர்ச்சிப் பணி திருப்திகரமாக நிறைவேறும். நிலுவைப் பணம் எளிதில் வசூலாகும். மாமன், மைத்துனருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 4 | 2 | | 1 | | |
| | | 2 | | | 3 | 8 | 6 | |
| 7 | 9 | | | | | | | |
| | | | | | | 3 | | |
| 4 | | | 1 | | 2 | | | 7 |
| | | 9 | | | | | | |
| | | | | | | | 8 | 1 |
| | 8 | 7 | 2 | | | 6 | | |
| | | 1 | 8 | 4 | 6 | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 7 | 9 | 6 | 3 | 4 | 5 | 2 |
| 9 | 4 | 5 | 7 | 2 | 3 | 3 | 6 | 1 |
| 6 | 2 | 3 | 1 | 5 | 4 | 8 | 9 | 7 |
| 3 | 7 | 9 | 2 | 1 | 5 | 6 | 4 | 8 |
| 4 | 5 | 8 | 6 | 3 | 7 | 1 | 2 | 9 |
| 1 | 6 | 2 | 4 | 8 | 9 | 7 | 3 | 5 |
| 7 | 9 | 6 | 5 | 4 | 1 | 2 | 8 | 3 |
| 2 | 3 | 1 | 8 | 9 | 6 | 5 | 7 | 4 |
| 5 | 8 | 4 | 3 | 7 | 2 | 9 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதேவேலை. சுடோக்குஎன்பதுஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

காலை எழுந்தவுடன் "முகநூல்" போகலாமா "வாட்சப்" போகலாமானுதான் தோனுது... வேலைக்கு போகவேண்டும் எண்டு ஏன் தோனவே மாட்டேங்குது...!!!



எவருக்காக
சிரித்தாயோ
அவர்களை
நீ மறந்து
விடலாம்...
ஆனால்,
எவருக்காக
அழுதாயோ
அவர்களை
ஒரு நாளும்
உன்னால்
மறக்க முடியாது



விழித்திருக்
கையில்
தலைகோதும்
தாயின்
பாசத்துக்குச்
சற்றும் குறைவில்
லாதது, தூங்கிய
பின் தலைவருடி
முத்தமிடும் தந்தையின் பாசம்...!!!



RT விரும்பி
இதயங்கள் சொல்ல நினைக்கும் வார்த்தைகளை இதழ்கள் சொல்லாமல் மறைப்பதால் தான் காதல் இன்னும் தோற்றுக் கொண்டிருக்கிறது...



பஸ்ஸில
போனா காச
Save பண்ணலாம்..
ஓட்டோவில போனா
Time'a save பண்ணலாம்
..
But..
ஒரு பொண்ணுப் பின்னால
போனா?..
தாடியக் கூட Shave
பண்ண முடியாது....

WhatsApp
படித்ததில்
பிடித்தது

# ஷகீலாவின் கதை படமாகிறது

பொலிவூட்டில் சில்க் ஸ்மிதா கதை, 'தி டர்ட்டி பிக்சர்' என்ற பெயரில் படமானது. இதில் வித்யாபாலன் நடித்தார். சுப்பர் ஹிட்டான இந்தப் படத்துக்காக வித்யாபாலனுக்குத் தேசிய விருதும் கிடைத்தது. இந்தப் படத்தில் பல தமிழ் நடிகர்களின் மற்றொரு பக்கத்தை மறைமுகமாக இயக்குநர் காட்டியிருந்தார். இதனால் பலருக்கு இந்தப் படம் தர்ம சங்கடமாக அமைந்தது. இந்த நிலையில் இப்போது மலையாள கவர்ச்சி நடிகை ஷகீலாவின் கதையை இந்தியில் படமாக்க முடிவு செய்துள்ளனர். இந்தப் படத்தைக் கன்னட இயக்குநரான இந்திரஜித் லங்கேஷ் இயக்க உள்ளார். இந்தி, கன்னடம், தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் இந்தப் படத்தை அவா இயக்கவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐங்கரநேசனை

நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் முதல மைச்சர் சபையிலிருந்து வெளியேறியதால், நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்ட மேற்படி விடயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் நேற்றுச் சபையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், ஆளும் கட்சி உறுப்பினர் வே.சிவயோகனால் போக்குவரத்து அமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விகள் மற்றும் 5 பிரேரணைகள் என்பன நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இவற்றுடன் முதலமைச்சரின் நிதிய நியதிச் சட்டத்தின் மீதான இரண்டாம் வாசிப்பும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

நிகழ்ச்சி நிரல் ஒழுங்கின் பிரகாரம் முதலில் முதலமைச்சரின் நிதிய நியதிச் சட்டத்தின் மீதான இரண்டாம் வாசிப்பு இடம்பெற்றது. நியதிச் சட்ட வாசிப்பு முடிவடைந்த பின்னர், நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவிப்பு விடுத்தார்.

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் 2 மணியுடன் செல்லவுள்ளதால் சபையை அதனுடன் ஒத்திவைக்கவுள்ளதாகத் தெரிவித்தார். தான் சீனத் தூதுவரை மாலை 4 மணிக் குச் சந்திப்பதற்காக 2 மணியுடன் சபையிலிருந்து வெளி யேறப் போவதாக முதலமைச்சர் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் சபையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாக, அவைத் தலைவரின் பிரேரணை மாத்திரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. உறுப்பினர் சிவயோகன் தனது வினாக்களை மீளப் பெறுவதாகச் சபையில் அறிவித்தார். நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

முதலமைச்சர் வெளியேறிய பின்னர் சபையை ஒத்தி வைப்பதற்கு அவைத் தலைவர் முயன்றபோது, போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன், ஆளுநர் போக்குவரத்து நியதிச் சட்டத்தில் மேற்கொண்ட திருத்தங்களைச் சபையில் இன்றே (நேற்றே) எடுக்கவேண்டும் என்று கோரினார். இதனை இப்போது எடுக்காவிட்டால் பெரும் பிரச்சினை ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதன்போது அவைத் தலைவர் தனக்குத் திருத்தங்கள் கிடைக்கப் பெறவில்லை. நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயத்தை உடனடியாக எடுக்கமுடியாது. அத்துடன் முதலமைச்சருக்குச் சபையை ஒத்திவைப்பதாகத் தெரிவித்து விட்டேன் - என்றார்.

இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர் சுகிர்தன், முதலமைச்சர் சபையிலிருந்து வெளியேறிய பின்னரும் சபை அமர்வுகள் எத்தனையோ நாள்கள் நடைபெற்றிருக்கின்றன. முதலமைச்சரைப் பார்த்துக் கொண்டிருந்தால் சரிவராது. நீங்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்களை விவாதத்துக்கு எடுக்கவேண்டும் என்று கோரினார். அமைச்சர் டெனீஸ்வரனும் சபையை மதியபோசன இடைவேளைக்கு ஒத்திவைத்து மீளவும் எடுங்கள்-என்றார். இறுதியில் அவைத் தலைவர், சபையின் விருப்பம் எதுவோ அதனைச் செய்கின்றேன் என்றார்.

மதியபோசன இடைவேளையின் பின்னர் சபை மீளவும் கூடி போக்குவரத்து நியதிச் சட்டத்தை ஆராய்ந்தது.

**ஐங்கரநேசனால் சர்ச்சை**

அமைச்சர் ஐங்கரநேசன் விடுமுறையில் சென்றுள்ளதால், சபையின் நேற்றைய அமர்வில் பங்கேற்கவில்லை. ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன், சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்ட அமைச்சர் ஒருவர், வெளிநாடு செல்லும்போது தனது அமைச்சுப் பதவியை இன்னொரு அமைச்சரிடம் ஒப்படைத்து, அவர் ஆளுநர் முன்பாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்க வேண்டும். அப்படிச் செய்தால், விவசாய அமைச்சர் மீதான விடயதானங்களை இங்கே எடுக்கமுடியும் என்று குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கீடு செய்த ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன், அமைச்சர்கள் எவருமே அவ்வாறு செய்வதில்லை. ஓர் அமைச்சரைக் குறிவைத்து இவ்வாறு செய்வது பொருத்தமில்லை- என்றார். அமைச்சர் சத்தியலிங்கம், இவ்வாறு அமைச்சர்கள் என்று பொதுவாகச் சொல்ல முடியாது. நான் வெளிநாடு செல்லும்போது, எனது அமைச்சை உரிய முறையில் இன்னொருவரிடம் கையளித்து விட்டுத்தான் செல்வேன். எனவே விடயங்கள் தெரியாமல் பேசவேண்டாம் - என்றார்.

இந்த விடயங்கள் முடிவுற்று இரண்டு மணி நேரத்தின் பின்னர், சபை முடிவுறும் தறுவாயில், ஆளும் கட்சி உறுப்பினர் சிவநேசன், அமைச்சர் ஐங்கரநேசன் ஒரு விடயத்தைச் சபைக்குத் தெரியப்படுத்தச் சொன்னார். தனது விவசாய அமைச்சுப் பொறுப்பைக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிடம் ஒப்படைத்துள்ளதாகக் குறிப்பிட்டார். இதன்போது அவைத் தலைவர் இந்த விடயம் தனக்குத் தெரியாது என்றார்.

கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரே இந்த விடயத்தை இங்கே கேட்டார். நீங்கள் கேட்கவில்லை என்று குறிப்பிட, அவைத் தலைவர் சிவஞானம், நான் கேட்க வேண்டியதில்லை. நீங்கள்தான் சொல்லியிருக்கவேண்டும்-என்றார். கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, அவ்வாறு சொல்ல வேண்டிய தேவை தனக்கில்லை என்றார். (த-வ-5)

## வடக்குப்

நர் பரிந்துரைந்திருந்தார். ஆளுநரின் பரிந்துரைகள் சபையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டன. சுமார் ஒன்றரை மணி நேரம் இந்தப் பரிந்துரைகள் மீது விவாதம் நடைபெற்றது.

இறுதியில் ஆளுநரினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கமைய நியதிச் சட்டம் திருத்தப்பட்டது. திருத்தப்பட்ட நியதிச் சட்டத்தை வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் முன்மொழிந்தார். அதனைச் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வழிமொழிந்தார். இறுதியில் சபையினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (த-வ-5)

## வடக்கு முதல்வர்

ளோருக்கான மருத்துவ, வாழ்வாதார உதவிகளை வழங்குதல்,

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள ஆள்களின் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தை மேம்படுத்துவதற்கும், அவர்களின் ஆற்றலை அதிகரிப்பதற்கும் அவர்களுக்கு நிதிசார் மற்றும் ஏனைய ஊக்குவிப்புக்களை வழங்குதல்,

கிராமிய சிறு கைத்தொழில்களுக்கும் சுயதொழிலைத் தோற்றுவிப்பதற்கும் உதவுதலும் அவற்றை ஊக்குவித்தலும், சமூகச் செயலூக்குவித்தற் கருத் திட்டங்களினூடாகச் சுகாதார மற்றும் போசாக்கு மட்டங்களைச் சீராக்குவதற்கு உதவுதலும் சமூக சேமநலச் செயற்பாடுகளுக்கு உதவி வழங்குதலும்,

மதுபானம், போதைப்பொருள் மற்றும் புகைத்தலின் தீயவிளைவுகள் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவூட்டுதலும், அவற்றுக்குப் பழக்கப்படுவதிலிருந்து ஆள்களை விடுவித்தலும், அத்தகைய மருத்துவச் செலவுகளை ஏற்க முடியாத நிலைமையிலுள்ள வதிவோருக்குச் சுகாதார நன்மைகளையும் மருத்துவச் சிகிச்சைக்கான கூடுதலான அணுக்கத்தையும் வழங்குதல்,

வறுமைப்பட்ட, போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது கல்விசார் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு அவர்களுக்கு நிதியுதவியையும் ஆதரவையும் வழங்குதல்,

ஏதேனும் தொழில்சார் பயிற்சியைப் பின்பற்றுவதற்கும், உற்பத்தித் திறனுள்ள பணிக்காகவும் இளம் ஆள்களுக்குத் தேவைப்பட்ட தகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் இளைஞர்களுக்கு உதவுதல்,


மதம், மொழி, கலைகள் மற்றும் கலாசாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்,

கலைகள் மற்றும் கலாசாரத்துக்கு அதி உத்தமமான பங்களிப்பைச் செய்துள்ள அல்லது வடக்கு மாகாணத்துக்கு நற்பெயரை ஏற்படுத்தியுள்ள அல்லது வடக்கு மாகாணத்தினுள் பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சேவையை அளித்துள்ள ஆள்களுக்கான கௌரவிப்பு அளிப்பொன்றை நிலைநாட்டுதலும், அவர்கள் அதனை அணிதலும்,

பேரழிவு ஏற்படும் விடயத்தில் அவசரகால நிதியத்துக்குக் குறை நிரப்பு நிதிகளைக் குறித்தொதுக்குதல், வடக்கு மாகாணத்தில் வதிவோரின் நல்வாழ்வுக்கு ஏற்பாடு செய்வதற்கும், அதனை மேம்படுத்துவதற்குமான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் விடயங்கள் குறிக்கோள்களாக நியதிச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (த-வ-5)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தம்பிராசா (கந்தையா)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பிராசா 12.06.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், பிருந்தாபரன் (டென்மார்க்), உமாஹரி, மனோகரி (பிரான்ஸ்), தயாபரன் (ஜேர்மனி), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்சோதி (டென்மார்க்), லோகேந்திரன் (பிரான்ஸ்), சொர்ணலிங்கம், பாலகிருஷ்ணர், ரதிவதனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனந்தினி சேதுராஜ் (ஜேர்மனி), வர்ணன், சர்மினி, கஜவதனி, கங்காதரன்(லண்டன்), நிரோஜன், தர்ஷன் (பிரான்ஸ்), உமாஷங்கர் (டென்மார்க்), தாரணி (ஜேர்மனி), அபிராம் ஆகியோரது அன்புப் பேரனும், அனோஜன், அபிநயா ஆகியோரது அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.


தகவல்:
**குடும்பத்தினர்.**

(C/21898)
(11,17,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### கந்தன் கிருஷ்ணன் (சேனாதி)



பாலாவி வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் பெரிய நாவலடி கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தன் கிருஷ்ணன் நேற்று (14.06.2016) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சன்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியநாவலடி,
கொடிகாமம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**
(பிரபா - மகன்)

(c/65)
(11,17,18)
**077 844 8035**

### இராசரத்தினம் ஞானபண்டிதன்



யாழ்ப்பாணம், காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் கனடா, Montrealஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் ஞானபண்டிதன் 13.06.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இராசரத்தினம் (ரதிமில்) - அன்னலஷ்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (முன்னாள் யாழ்.பிரபல வர்த்தகர்)- முத்துப்பிள்ளை, கந்தையா (முகத்துவாரம் - வர்த்தகர்)- பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அருமைப் பேரனும், யானியின் அருமைக் கணவரும், மிச்சேல், யமிலி ஆகியோரின் அருமைத் தந்தையும், அருச்சுணன் (முன்னாள் வர்த்தகர்- கோண்டாவில் பிறவுண் வீதி), ரதி (இளைப்பாறிய ஆசிரியை), கலைவாணி, அருந்ததி, வளர்மதி, றோசாமலர், ஆனந்த நடேசன், யோகேஸ்வரி, இன்பறோசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவமலர், ஜெயராசா, காலஞ்சென்ற பரமானந்தசிவம் மற்றும் தங்கவேலு, கதிர்காமநாதன், சூரியக்குமார், சியாமளா, யோகராசா, நடராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2016) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசவீதி, கிரேசரடி ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(j/2149)
(11,17,18)

தகவல்:
**அருச்சுணன் குடும்பத்தினர்.**

**021 223 1682, 077 103 6413**

## தாக்குதல் சம்பவம் தொடர்பில் மன்னிப்புக் கோரிய பொலிஸார்

2014ஆம் ஆண்டு அளுத்கம பகுதியில் சிங்கள – முஸ்லிம் மக்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டின்போது முஸ்லிம் நபரைத் தாக்கியமைக்காக உயர் நீதிமன்றில் பொலிஸார் நேற்று மன்னிப்பு கோரியுள்ளனர்.

பொதுபலசேனா அமைப்பின் தலையீட்டுடன் முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டபோது தன்னை அளுத்கம பகுதியில் அமைந்துள்ள பௌத்த விகா ரையொன்றுக்குக் கொண்டு சென்று கடுமையாகத் தாக்கினர் என்று மொகமத் அமீர் என்பவர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்குவந்த போது, திறந்த மன்றில் பிரதம நீதியரசர் முன்னிலையில் தாக்கப்பட்ட நபரிடம் அளுத்கம பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி மன்னிப்புக் கோரினார்.

அத்துடன் மனுதாரருக்கு எதிராக களுத்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதைப் பொருள் வழக்கு மீளப் பெறப்படும் என்றும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (ற-4-5)

**Chemistry English/ Tamil Medium Personal Class**
Physical & Organic Theory & கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் [B.Sc (cey),M.Sc(cey) (Chemistry)] கற்பிக்கப்படும்.
தொடர்பு: 075 0460 555

**Vacancyes**
Job! Job! Job!.... 077 999 4807, 076 699 4226
நீங்கள் O/L பயின்றவரா? இவ் இலக்கங்களை அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க! நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை. நிர்வாக அதிகாரி,செயல்திட்ட அதிகாரி, அலுவலக அதிகாரி மேற்பார்வையாளர் முன்னனுபவம் இல்லையா தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.
**பயிற்சிக்காலம் - 12,000/-, 15,000/-**
**பின் குறைந்தது - 45,000/-**

**தேவை**
யாழ்ப்பாணம் . திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரபல்யமான திருமண மண்டபம் ஒன்றுக்கு வேலையாள்கள் உடன் தேவை.
**075 932 6147**

**வாடகைக்குத் தேவை**
கணவன், மனைவி உத்தியோகத்தர்களாகவுள்ள சிறிய குடும்பத்துக்கு சகல வசதிகளையுமுடைய வீடு வாடகைக்குத் தேவை. நல்லூர், திருநெல்வேலி, கோப்பாய் அல்லது பிரதான வீதிகளை அண்டிய இடங்கள் விரும்பத்தக்கது.
**077 922 7780**

**வெளிவந்துவிட்டது**
மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சைக்குரிய தாபன நிதி சார்ந்த விடய ஆய்வுகளுடன் மாதிரி வினாத்தாள்களை உள்ளடக்கிய மிகச் சிறந்த வழிகாட்டி விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு:
திரு.ஆ.சத்தியமூர்த்தி
நிர்வாக உத்தியோகத்தர்.
077 167 6457

**தேவை**
யாழ் நகரிலுள்ள ஆங்கில கல்வி நிறுவனத்திற்கு கணினி அறிவுடைய ஆங்கிலம் தெரிந்த பெண் முகாமையாளர்(Manager) தேவை. CV யுடன் நேரில் வரவும்
British College of English
No. 192, Navalar Road Jaffna
077 880 3887

**Chundikuli Girls' College, Old Girls' Association Jaffna**

**Annual General Meeting and Fellowship Lunch**

Date : Saturday, 18th June 2016
Venue : College Hall

9.00 a.m : Holy Communion & Worship Service at St. John the Baptist's Church Chundikuli

11.00 a.m : A.G.M

12.00 noon : Games and Lunch

**Lunch Tickets-Rs.350/=**
**All Old Girls are cordially invited**
Secretary

## வடக்கு மாகாண சபையில் மொழியுரிமையால் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாண சபையின் பெரும்பான்மையின உறுப்பினர்கள் தமது மொழியுரிமை மீறப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு முன்வைத்தமையினால் சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

'எங்களுக்கான கடிதங்கள் தமிழில் அனுப்பி வைக்கப்படுகின்றன' என்று ஜெயதிலக குறிப்பிட, 'எனக்கான கடிதங்களும் கொழும்பு அரசிடமிருந்து சிங்களத்திலேயே அனுப்பி வைக்கப்படுகின்றன' என்று முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பதிலளிக்க, 'அவர்கள் தவறிழைக்கின்றார்கள் என்பதற்காக நீங்களும் தவறிழைக்கின்றீர்களா' என்று பதில் கேள்வியை ஜெயதிலக எழுப்பச் சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. முதலமைச்சரின் நிதிய நியதிச் சட்டம் மீதான விவாதம் நடந்தது. விவாதம் ஆரம்பித்து ஒரு மணி நேரம் முடிவுற்றது. இதன் பின்னர் எதிர்க் கட்சி உறுப்பினர் தர்மபால எழுந்தார். நியதிச் சட்டத்தின் சிங்கள மொழி பெயர்ப்பு வழங்கப்படவில்லை என்றார். தொடர்ந்து மற்றொரு எதிர்க்கட்சி உறுப்பினரான ஜெயதிலகவும் இதே குற்றச்சாட்டை முன்வைத்தார். அத்துடன் அவர், தனக்கான கடிதங்கள் தமிழ் மொழியிலேயே அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், எனக்கான கடிதங்கள் கொழும்பு அரசிடமிருந்து சிங்களத்தில்தான் அனுப்பி வைக்கப்படுகின்றன. எங்களிடம் கடிதங்களை மொழி பெயர்ப்பதற்கான அலுவலர்கள் குறைவு–என்றார். இந்தப் பதிலுக்கு ஜெயதிலக, கொழும்பு அரசு தவறிழைக்கின்றது. அதற்காக நீங்களும் தவறிழைக்கப் போகின்றீர்களா? என்று கேள்வி எழுப்பினார்.

இந்தச் சர்ச்சையின்போது கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், பெரும்பான்மை இன உறுப்பினர்கள் கேட்பதில் தவறில்லை. எங்களது வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில், தனிநாடு அமைந்தால் ஏனையோரைச் சமமாக நடத்துவோம் என்றுதான் குறிப்பிட்டுள்ளோம். நாம் கொழும்பு அரசிடம் கேட்கும் ஒரு விடயத்தில், முதலில் நாங்கள் ஒழுங்காக இருக்க வேண்டும். அவர்களுக்குச் சிங்கள மொழி பெயர்ப்பு வழங்கப்படவேண்டும்.

எனக்குச் சிங்கள மொழியில் கடிதம் அனுப்பினால் அதனைக் கிழித்து, அனுப்பியவர்களுக்கே மீண்டும் அனுப்பி வைப்பேன். பின்னர் தமிழ் மொழியில் கிடைக்கப் பெறும் – என்றார்.

இதன் பின்னர் சபை தேநீர் இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. சபை நடவடிக்கை மீளவும் ஆரம்பிக்கப் படும்போது சிங்கள மொழி பெயர்ப்புப் பிரதிகள் வழங்கப் பட்டன. (த-வ-5)

**கண்ணீர் அஞ்சலி**



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது ஜேர்மனியில் வசித்து வந்தவரும் மண்கும்பான் வெள்ளைப்புற்றடி விநாயக அன்னதான மண்டபத்தை நிறுவிய-
வருமான ஜெகதீஸ்வரன் " புதிய நதியா" நகை மாடம்
இராஜேஸ்வரன் "நதியா" நகை மாடம்
அவர்களின் தாயாருமாகிய

**திருமதி புஷ்பவதி சண்முகம்**

அவர்கள் 02.06.2016 அன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகரின் திருவடி நிழலில் சங்கமமாகப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்**
**அருள்மிகு மண்கும்பான் வெள்ளைப்புற்றடி**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், மண்கும்பான்.**
(சி/22002)
(13,16.17)

**கண்ணீர் அஞ்சலி**

**திருமதி புஷ்பவதி சண்முகம்**



எமது அன்பான பாட்டியும் நதியா, புதிய நதியா நகை மாடம் அவர்களின் அன்புத் தாயுமான திருமதி புஷ்பவதி சண்முகம் அவர்கள் கடந்த 02.06.2016 ஜேர்மனியில் காலமான செய்தி கேட்டு பேரதிர்ச்சியும் பெருந்துயரும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும், பணியாளர்களும்**
*** மைதிலி நகைமாடம்**
**89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
*** யாழ்.மைதிலி ஜுவல்லர்ஸ்**
**79Z, செட்டியார் தெரு, கொழும்பு 11**
(சி/22001)
(11,17,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்கம்

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது பிஸ்வால் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் மோதல் இடம்பெற்ற நாள்களைக் கடந்து செல்கின்றோம் என்பது குறித்து நாங்கள் திருப்தியடைகின்றோம். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் முன்னோக்கி நகர்வதற்கான முயற்சிகள் உண்மையில் தற்போதே ஆரம்பமாகியுள்ளன.

2015 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆட்சிக்கு வந்த இலங்கையின் தற்போதைய அரசு, இராணுவத்தினரின் பிடியிலுள்ள நிலங்களை உரிய உரிமையாளர்களிடம் ஒப்படைப்பது, காணாமற்போனோரை இழந்த நிலையிலுள்ள பல குடும்பத்தினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பது, மோதல்களின்போது குற்றங்கள் இழைத்தவர்களை பொறுப்புக்கூறச் செய்வது மற்றும் நீதியை நிலைநாட்டுவது போன்ற விவகாரங்கள் தொடர்பில் மிகவும் நம்பிக்கையளிக்கக்கூடிய சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இலங்கையில் காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகம் அமைக்கப்படும் முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பாராட்டுகின்றேன்.

இலங்கையில் நல்லிணக்க முயற்சிகள் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளன. மிகவும் கடுமையான பணிகளை எதிர்காலத்திலேயே முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனினும், அமெரிக்கா இலங்கைக்கு உதவுவதற்குத் தயாராகவுள்ளதால், இலங்கை அரசு இந்தப் பயணத்தை தனித்து மேற்கொள்ளவில்லை - என்றார். (த-வ-5)

## இலங்கையில்

நிலநடுக்கங்கள் ஏற்படும் ஆபத்தை எதிர்கொள்ள நேரிடலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மலையகப் பகுதிகளில் பாறைகளின் மீது படிந்துள்ள மண், நிலையிழக்கும் என்றும், இதனால் பெரியளவில் மண்சரிவுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாகவும் பேராசிரியர் அத்துல சேனாரத்ன தெரிவித்துள்ளார். (த-வ-5)

## அரசின்

இவற்றையெல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு நேரில் சென்று தெரிவிக்கவுள்ளேன்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையில் தெரிவித்தார் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

வடக்கு மாகாண சபையின் அமர்வில், பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தைப் பேசவுள்ளதாகக் குறிப்பிட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது அமர்வு நேற்று (நேற்றுமுன்தினம்) ஆரம்பமாகியுள்ளது. அமெரிக்காவுடன் இணைந்து இலங்கை அரசு அனுசரணை வழங்கிய தீர்மானத்தில், நிறைவேற்றத் தவறிய விடயங்களை ஐ.நா.வில் நாங்கள் முன்வைப்போம்.

முக்கியமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்ற உறுதிமொழியை அரசு வழங்கியிருந்தது. ஆனால் அதுதொடர்பில் இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தற்போது இருக்கக்கூடிய தமிழ் அரசியல் கைதிகளில் 90 வீதமானவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படை யாகக் கொண்டே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தண்டனை வழங்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கவேண்டும். வழக்கு நடைபெற்று கொண்டிருப்பவர்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்படல்வேண்டும்.

இவ்வாறான நிலைமையில் தான் இன்னுமொரு பிரச்சினை உள்ளது. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஒரு நீதிமன்றம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்தால், குறித்த நபருக்கு எதிரான ஏனைய வழக்குகளையும் சட்டமா அதிபர் திணைக்களம் தள்ளுபடி செய்யவேண்டும்.

ஆனால் இன்று சட்டமா அதிபர் திணைக்களம் விளையாடிக் கொண்டு இருக்கின்றது. அண்மையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் மகன் ஆதித்தனின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒரு நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டபோதிலும், இப்போது எட்டு மாதங்கள் கழிந்தும் அவர் விளக்கமறியலில் உள்ளார். இதே நிலைதான் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருக்கும். என்ன நிலைமையில் இலங்கையின் நீதித்துறை உள்ளது என்பது தொடர்பில் ஜெனிவாவில் தெட்டத் தெளிவாக கூறும் அதேவேளை, அரசியல் கைதிகள், காணமற்போனோர், கடத்தப்பட்டோர் தொடர்பில் எந்த நடவடிக்கையும் இலங்கை அரசு எடுக்கவில்லை என்பதையும் கூறுவோம் - என்றார். (த-வ-5)

## தமிழ்

தெரிவித்தார். ஒரு நாள் பயணமாக யாழ்ப் பாணத்துக்கு வருகை தந்த அவர் யாழ்.மாவட்டச் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த நிலையில் பயணம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது சீனத் தூதுவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு. இந்த ஒத்துழைப்புக்காக எம்மால் இயன்ற அத்தனையும் நாங்கள் செய்வோம். அதேபோன்று நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடைமுறைகளுக்கும், வடக்கு மாகாணத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்கும் சீனா ஆதரவளிக்கும்.

இலங்கை மக்களுக்கு குறிப்பாக வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சமாதானம், அபிவிருத்தி, சுபீட்சம் என்பன முதன்மையான விடயங்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தப் பிரதேசத்தில் நிலையான சமாதானம், அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்படுகின்ற அனைத்துச் செயற்பாடுகளையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

அரசியல் செயற்பாடுகளுக்கான நிகழ்ச்சி நிரல்களுக்கும், பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான நிகழ்ச்சி நிரல்களுக்கும், அவற்றின் பங்காளர்களினால், சமமான முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது முக்கியம் என்று நான் நம்புகின்றேன். வடக்கு மாகாணம் எதிர்வரும் காலங்களில் துரிதமாக அபிவிருத்தியடைந்து மக்களின் வாழ்க்கை முன்னேற்றமடையும் என்றும், அதனை விரைவில் காண முடியும் என்றும் நம்புகிறேன். தமிழ் மக்கள் அனைவரும் புத்திக்கூர்மையானவர்கள். செயற்திறனையும் கடின உழைப்பையும் கொண்டவர்கள். ஐக்கிய இலங்கைக்குள் அவர்களுக்கு நல்ல வாழ்க்கையும், நிலையான சமாதானமும் கிடைக்க வேண்டும்.

முதற் தடவையாக வடக்கு மாகாணத்தில் காலடி எடுத்து வைத்துள்ளேன். இங்கு அரச தரப்பினராலும் பொது மக்களினாலும் சிநேகபூர்வமான வரவேற்பளிக்கப்பட்டது மகிழ்ச்சியளிக்கின்றது.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துப் பேசினோம். சம்பந்தனுடனான சந்திப்பின்போது, சீனாவில் இருந்து செய்யப்படக் கூடிய முதலீடுகள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் அரசியல் செயற்பாடுகள் பற்றி நாங்கள் உரையாடினோம் - என்றார். (த-வ-4-101)

## சரணடைந் தோரின்

யிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்ததாவது:

இறுதிப் போரில் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் நாங்கள் கேட்டிருந்தோம். இருப்பினும் அவை இதுவரை கிடைக்கவில்லை. முறைப்பாட்டாளர்களின் விவரங்களை விசாரணை செய்தபின்னர், இரண்டாம் தரப்பினரை விசாரணை செய்யும்போது, எப்படியாவது அந்தப் பட்டியலைப் பெற்றுக் கொள்வதற்கே எதிர்பார்த்திருந்தோம். அதே போல இந்தியா, ஐரோப்பா உள்ளிட்ட வெளிநாடுகளிலுள்ள அகதி முகாம்களில் வாழும் இலங்கையர்கள் தொடர்பான விவரங்களையும் அந்தந்த நாடுகளிடமிருந்து கோரியிருந்தோம். எனினும், பாதுகாப்பு மற்றும் சட்டதிட்டங்களைச் சுட்டிக்காட்டி அதனைத் தருவதற்கு அந்த நாடுகள் மறுத்து விட்டன.

நிச்சயமாக அந்தப் பட்டியல் கிடைத்திருந்தால் விசாரணைகளுக்கு பேருதவியாக அமைந்திருக்கும். அத்தோடு, சிறைச்சாலைகள் திணைக்களம், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளிலும் அவ்வாறான பட்டியலைக் கோரியிருந்தோம். அவற்றில் வைத்தியசாலைகளிலிருந்து பட்டியல் கிடைக்கப் பெற்றது. அதில் 15 ஆயிரம் பெயர்கள் காணப்படுகின்றன. சிலரது பெயர்கள் புனை பெயர்களாகக் காணப்படுவதால் தேடிக் கண்டுபிடிப்பதற்குச் சிரமமாக இருக்கின்றன. ஒரேயொரு விசாரணைக் குழுவே எங்களுக்கு அரசு வழங்கியிருந்தது. [illegible] முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியிருந்த காலத்திலிருந்து விசாரணைக் குழுவொன்றை அமைக்கும்படி கோரிக்கை விடுத்திருந்தோம்.

அந்தக் கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசே நிறைவேற்றியது. இருப்பினும், முறைப்பாட்டாளர்களின் சாட்சியங்களை விசாரணை செய்வதில் எமது விசாரணைக் குழு சிரமங்களை எதிர்கொண்டது. சாட்சியாளர் ஒருவர் முறைப்பாடு செய்தால், அதனுடன் தொடர்புபட்ட ஏனைய முறைப்பாட்டாளர்கள் பிறிதொரு பகுதியில் இருப்பர். எனவேதான் விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டது - என்றார். (த-வ-5)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை விமலேந்திரன்

**தோற்றம்**
**14.10.1946**

**மறைவு**
**14.06.2016**



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை விமலேந்திரன் நேற்று (14.06.2016) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம்-பகவதி தம்பதியரின் அன்பு மருமகனும் தயாவதியின் அன்புக் கணவரும் கவிதன், கங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் புவனராணி, காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் தெய்வேந்திரன், புவனேந்திரன், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரஸ்வதி, தயாநிதி, சபாநாயகி, திருமகள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2016) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கணேசவாசம்'
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சுப்பிரமணியம் (போமன்)



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் (போமன்) நேற்று (14.06.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி கந்தையா - கண்ணகைப் பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற சிவபாக்கியம், சரசுவதியின் அன்புக் கணவரும் கீர்த்திகா, கபில்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சசிதரனின் அன்புக்குரிய மாமனாரும் கமலாம்பிகை, காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் கௌரிமலர், லோகேஸ்வரி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுப்பிரமணியம் (சந்திரன்), யோகராசா, விக்னேஸ்வரன், திருமதி கோகிலராணி அழகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கண்டுவில் ஒழுங்கை சாவகச்சேரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**தொடர்பு: 077 1772897, 077 3065343 (கபில்ராஜ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# வோர்ணர் விலகல்

ஆஸ்திரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வோர்ணர் காயம் காரணமாக முத்தரப்புத் தொடரிலிருந்து விலகியுள்ளார்.
ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் தீவுகளில் நடைபெற்று வருகிறது. ஆஸ்திரேலியா இறுதியாக தென்னாபிரிக்காவை வீழ்த்தியபோது வோர்ணர் சதம் கடந்திருந்தார் மட்டுமல்லாமல் குறித்த ஆட்டத்தில் ஆட்டநாயகனாகவும் தெரிவாகியிருந்தார். பின்னர் பயிற்சியில் ஈடுபட்டபோது, வோர்ணரின் கை விரலில் காயம் ஏற்பட்டதாலேயே அவர் தொடரிலிருந்து விலக வேண்டி ஏற்பட்டுள்ளது. குறித்த காயத்தை பரிசோதித்த ஆஸ்திரேலிய அணியின் மருத்துவக் குழு வோர்ணர் ஆறு வாரங்கள் ஓய்வில் இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. (ம)

# அனுபவமற்ற இந்திய அணித்தெரிவு சிம்பாப்வேயை ஏளனம் செய்கிறது

## நிட்னி காட்டம்

சிம்பாப்வேக்கு எதிரான தொடருக்கு டோனி தலைமையில் களமிறக்கப்பட்டுள்ள அணித் தெரிவுக்கு சிம்பாப்வேயின் பயிற்சியாளரான நிட்னி தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.



சிம்பாப்வேக்கு எதிரான தொடர்களில் ஒவ்வொரு கிரிக்கெட் சபையும் தனது இரண்டாம்தர அணியையே களமிறக்குகிறது. இவ்வாறாகக் களமிறக்கப்படும் அணியில் மூன்று முதல் ஐந்து வரையான அனுபவமற்ற வீரர்கள் இருப்பார்கள். ஆனால், நடைபெற்றுவரும் சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் இந்தியா களமிறக்கியுள்ள அணியில் டோனி ஒருவரே அனுபவ வீரர். ஏனைய அத்தனை வீரர்களும் அறிமுகமாகும் மற்றும் அனுபவமற்ற வீரர்களே. இந்த நிலையிலேயே நிட்னி தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.
நாங்கள் வலுவான அணியுடன் விளையாடுவதை விரும்புகிறோம். இங்கு நாங்கள் புதிய சூழலை உருவாக்கி வருகிறோம். இந்த நாடு அதிக ஆட்டங்களை விளையாடுவதை உறுதி செய்ய தீவிரமாக விரும்புகிறோம். எனவே நீங்கள் அனுப்பும் அணி வலுவான அணியாக இருக்க வேண்டும். சிம்பாப்வே டெஸ்ட் அந்தஸ்து பெற்ற ஓர் அணி என்பதற்கு ஏற்ற மரியாதை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.
நிட்னியின் கருத்து இவ்வாறு அமைந்துள்ள அதேநேரம், இந்தியா களமிறக்கியுள்ள அனுபவமற்ற அணியிடமே சிம்பாப்வே முதல் இரு, ஒருநாள் ஆட்டங்களையும் இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியா - சிம்பாப்வே 3 ஆவது ஆட்டம் இன்று



இந்தியா - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
முடிவடைந்த முதலிரு ஆட்டங்களிலும் இந்தியா வெற்றிபெற்றுள்ளமையால், இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறாக அமைந்தாலும், கிண்ணம் இந்தியாவிடமே செல்லும். இருப்பினும் டோனியின் தலைமையில் களமிறங்கியுள்ள இளம்படை, சிம்பாப்வேயை வெள்ளையடிப்புச் செய்ய முனைப்புக்காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# ஆஸிக்குப் பதிலடி கவனித்தது தீவுகள்




முத்தரப்புத் தொடரில் நேற்று முன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவுக்குப் பதிலடி கொடுத்துள்ளது தீவுகள்.
ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஆஸ்திரேலியாவும் மேற்கிந்தியத் தீவுகளும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆஸியின் ஆரம்ப வீரர்கள் பின்ஞ் மற்றும் கவாயா. ஓட்டமெதனையும் பெறாது பவிலியன் திரும்பினார் பின்ஞ். ஆட்டம் கண்டது ஆஸி. ஆனால் விடவில்லை கவாயா, சிமித்துடன் இணைப்பாட்டம் கச்சிதமாக நிலைபெற சரிவிலிருந்து மீண்டு, பிறிதொரு இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களை எட்டியது ஆஸி. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். 74 ஓட்டங்களுடன் சிமித்தை வீழ்த்தினார் பிரீத்வைட். இரு ஓட்டங்களால் சதத்தை தவறவிட்டார் கவாயா. பெய்லியும் அரைச்சதம் அரங்கேற்றினார். முடிவில் ஆஸ்திரேலியா 265-7.
பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக கோல்டர், பிரீத்வைட், பொலார்ட் மூவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கியது தீவுகள். நம்பிக்கையான ஆரம்பம் வழங்கியது சாள்ஸ் - பிளெச்சர் இணை. இணைப்பாட்டமாக 74 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தவேளையில், பிளெச்சரை இருக்கைக்குத் திருப்பினார் பல்க்நெர். அடுத்த சில பந்துப் பரிமாற்றங்களில் சாள்ஸும் ஆட்டமிழந்தார். டரின் பிராவோ, சாமுவேல்ஸ் இணை இலக்கை எட்டும் வகையில் அணியைப் பலப்படுத்தியது. அரைச்சதம் கடந்த பிற்பாடு அடிக்கொருதடவை சிக்சர்களைப் பதிவுசெய்தார் சாமுவேல்ஸ். 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சாமுவேல்ஸ் ஆட்டமிழக்கும் போது தீவுகளின் வெற்றிக்கு மேலதிகமாக 25 ஓட்டங்களே தேவைப்பட்டன. முடிவில் 4 இலக்குகளால் ஆஸியை வீழ்த்தியது தீவுகள்.
பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கட்டர் நைல், சாம்பா இருவரும் தலா இரு இலக்குகளையும் பல்க்நெர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டது



சிம்பாப்வே மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காகச் செல்லும் நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
வில்லியம்சன் அணிக்குத் தலைமை தாங்குகிறார். ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட சொட்கி டெஸ்ட் அணியில் முதல்முறையாக இடம்பிடித்துள்ளார். சமீபகாலமாகத் தடுமாறிவரும் முன்றோ நீக்கப்பட்டுள்ளார்.
நியூசிலாந்து அணி விவரம் - வில்லியம்சன் (தலைவர்), போல்ட், பிரேஸ்வெல், மார்க் கிரைக், குப்ரில், ஹென்றி, லாதம், நிக்கொல்ஸ், ரோஞ்சி, ராவல், சான்நெர், சொட்கி, சவுத்தி, றெய்லர், வாக்நெர், வற்லிங். (ம)

## டயமன்ஸ் அபார வெற்றி

யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் டயமன்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.
இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. ஆட்டத்தின் ஐந்தாவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியின் சார்பாக முதல்கோல்பதிவானது. 20ஆவது நிமிடத்தில், உசானந் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் டயம்ன்ஸ் 2:0 என்று முன்னிலை வகித்தது.
இரண்டாம் பாதியின் 48 ஆவது நிமிடத்தில் டயமன்ஸின் சார்பாக மதுசுதனன் கோலொன்றைப் பதிவுசெய்ய, முடிவில் அந்த அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)

# கனடா கார்பந்தயத் தொடரில் முதலிடம் பிடித்தார் ஹமில்டன்




உலக கார்பந்தயத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 7ஆவது சுற்றில் ஹமில்டன் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
உலக கார்பந்தயத் தொடர் 21 சுற்றுக்களாக நடத்தப்படுவதுண்டு. இதன் ஏழாவது சுற்று கனடாவின் ஓடுதளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. போட்டியின் ஆரம்பத்தில் ஹமில்டன் சிறிது நிதானித்தாலும் நேரம் செல்லச்செல்ல, தனது முரட்டுத்தனமான ஓட்டத்தை வெளிப்படுத்தி முதலிடத்தைப் பிடித்தார். வெட்டல் இரண்டாவது இடத்தையும், ரஸ்பேர்க் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர். இருப்பினும் ஒட்டுமொத்த பெறுபேறுகளின் அடிப்படையில் (முதல் ஏழு சுற்றுக்களின் அடிப்படையில்) ரஸ்பேர்க்கே முதலிடத்தில் உள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணமட்ட கரப்பந்தாட்டத் தொடர்; 17 வயதுப்பிரிவு காலிறுதிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 15

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கரப்பந்தாட்டத் தொடரில் 17 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவினருக்கான காலிறுதி ஆட்டங்கள் நெல்லியடி மத்திய கல்லூரியில் இன்று இடம்பெறவுள்ளன.

இதன்படி காலை 8 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணியும் இரண்டாவது காலிறுதியில் மன்னார் கலைமகள் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா சிறி சுமண மகா வித்தியாலய அணியும் மூன்றாவது காலிறுதியில் பருத்தித்துறை சென். தோமஸ் அணியை எதிர்த்து மன்னார் தோட்டவெளி அ.த.க. பாடசாலை அணியும் நான்காவது காலிறுதியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியும் மோதவுள்ளன. (ம-422)

## மாகாணமட்ட கரப்பந்தாட்டம்: அரையிறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுப் பெண்கள் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டங்கள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.

இதன்படி இன்று நடைபெறவுள்ள அரையிறுதிகளில் கோப்பாய் மகா வித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணியும் மோதவுள்ளன. கோப்பாய் மகா வித்தியாலய அணி சிறிசுமண மகா வித்தியாலய அணியை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தியும், உடுப்பிட்டிமகளிர் கல்லூரி அணி கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய அணியை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வவுனியா தர்மபால வித்தியாலய அணியை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தியும், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி பருத்தித்துறை சென். தோமஸ் அணியை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தியும் அரையிறுதிகளுக்குத் தகுதி பெற்றன. (ம-422-108)



## றென்னிஸ் தொடர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட றென்னிஸ் தொடர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெற வுள்ளன. 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு ஆட்டங்களே இவ்வாறு இடம்பெறவுள்ளன. (ம-23-108-422)



# உலகச் சம்பியன் என்பதை மீண்டும் நிரூபித்த ஜேர்மனி

ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான கால்பந்துத் தொடரில் உக்ரைனை வீழ்த்தி தான் உலகச் சம்பியன் என்பதை நிரூபித்தது ஜேர்மனி. யூரோக் கிண்ணத் தொடர் பிரான்ஸின் பரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) நடைபெற்ற ஜேர்மனி, உக்ரைன் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், ஆட்டம் ஆரம்பித்தது முதல் ஜேர்மனியின் ஆதிக்கமே மிகுந்திருந்தது. சிறப்பான பந்துப்பரிமாற்றங்கள் மூலம் 19ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் சார்பாக முதல் கோல் பதிவானது. உக்ரைன் பதிலடி கொடுக்காத நிலையில் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் ஜேர்மனியின் ஆதிக்கமே நீண்டு நிலைத்திருந்தது. உக்ரைன் எடுத்த முயற்சிகள் எவையும் பலனளிக்கவில்லை. 92ஆவது நிமிடத்தில் பிறிதொரு கோலை விளாசி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஜேர்மனி. (ம)

## மாகாண மட்ட கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது ஆண்கள், 19வயது பெண்கள் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 18ஆம், 19ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. 15வயது ஆண்கள் பிரிவினருக்கான தொடர் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும், 19வயது பெண்கள் பிரிவினருக்கான தொடர் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (ம-422)

## ஜெயசூரியவுக்கு உயர் கௌரவம்



இங்கிலாந்தின் முக்கிய கிரிக்கெட் கழகங்களில் ஒன்றான மெரிலெபோன் கிரிக்கெட் கழகம் சனத் ஜெயசூரியவுக்கு வாழ்நாள் உறுப்பினர் அந்தஸ்து வழங்கிக் கௌரவித்துள்ளது.

இலங்கை அணியின் முன்னாள் தலைவரான சனத் ஜெயசூரிய, தனது ஓய்வின் பின்னரும் இலங்கை கிரிக்கெட்டை உயர்த்தும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார். தற்போது அவர் இலங்கை அணியின் பிரதம தேர்வாளராகவும் உள்ளார். இந்த நிலையில் மெரிலெபோன் கிரிக்கெட் கழகம் அவருக்கு வாழ்நாள் உறுப்பினர் அந்தஸ்து வழங்கிக் கௌரவித்துள்ளது. (ம)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களமும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய இருபாலருக்குமான மரதன் ஓட்டப்போட்டி, வேகநடை என்பன புதுக்குடியிருப்பு பிரதேச செயலக முன்றிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றன. வடமாகாண விளையாட்டுத்துறை செயலாளர் திரு.குருபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கலந்து கொண்டார். (ம-21)

## ஹென்றிஸ் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஆண்கள் அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஹென்றிஸ் கல்லூரி அபார வெற்றிபெற்றுள்ளது.

சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஹென்றிஸை எதிர்த்து கண்டி திருத்துவக் கல்லூரி அணி பலப்பரீட்சை நடத்தியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்திலேயே நடைபெற்று வருகிறது. இன்று பிற்பகல் 3.45மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப் பிட்டி யுத் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடர் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொற்பதி அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**கழுகுகளின் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதவுள்ளது.

**அரசதிணைக்களங்களின் கால்பந்தாட்டத் தொடர்**

கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மாவட்ட செயலக அணியை எதிர்த்து கிளிநொச்சி சுகாதார திணைக்கள அணி இன்று மோதவுள்ளது. கிளிநொச்சி உதயதாரகை மைதானத்தில் மாலை 4 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம-23-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**English Trainer Training Diploma (Teacher Training)**
**நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்**

- ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தினை முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்குத் தெரிவான மாணவர்களுக்கும்
- English Medium மாணவர்களுக்கும்
- ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்புபவர்களுக்கு மானது.

அனைத்தும் அடிப்படையிலிருந்து

- The Structure of Language and oral Situational approaches.
- Modern approaches/ Psychology/ Leadership/ Personality development/ Teaching practice

Stage - I Stage - II Final Stage - (StageIII)
New batches start on 20.06.2016 Week day
9.00am / 1.30pm / 3.00pm 18.06.2016 Weekend

**ELAS**
English Language Adventure School
Sirpon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P 021 221 2410, 076 697 3040

**தேவை**
கொப்பறா நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும்.
077 844 9059

**வேலையாள்கள் தேவை**
யாழ்.நகரில் இயங்கும் புடைவை வியாபார ஸ்தாபனத்துக்கு வேலைக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
K.S.T.Tex
021 222 9470

# யாழ். லீக்கின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் எவரெஸ்ட், நீக்கிலஸ், றோயல் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஒலிம்பியா அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதியது. புத்தூர் எவரெஸ்ட் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் றோயல் அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதியது. இதில் றோயல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை. மாதம் 45,000 இற்கு மேல் உழைக்கலாம்.

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் புகைப்படத்துடன், சுயவிவரக் கோவையை கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



Jaffnavacancy@gmail.com
(C 21895)(10.17)

**வேலையாள்கள் தேவை**
அழகுக் கலை பயிற்சி நிலையம் ஒன்றுக்கு பெண்பிள்ளைகள் தேவை.
ஆங்கில அறிவு அவசியம்.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
காலம் : 16.06.2016 வியாழக்கிழமை
நேரம் : மு.ப 10.00-பி.ப 5.00 மணிவரை
நேரில் சமுகம் தரவும்.
(C 22005)(10.17)
தொடர்பு: 0771879542

FALC FRENCH LANGUAGE CENTRE
"FOR THE BEST FRENCH FOREVER"
**FRENCH CLASSES**
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

# வென்றது நவஜீவன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 15

எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

எவரெஸ்டின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். பாரதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.